
www.padippakam.com

# புதிய ஜனநாயகம்

மார்க்சிய - லெனினிய அரசியல் ஏடு
1 - 15 டிசம்பர் '90 6/2 விலை ரூ.2.00



தி.மு.க.அரசு மதவெறிக்கு காவடி!



## ஜனநாயக சாத்தான்கள்

படிப்பகம்

www.padippakam.com




"புஷ் மாமாவே உன் மகனை வளைகுடா போருக்கு அனுப்பத் தயாரா?" அமெரிக்காவின் போர்வெறியை எதிர்த்து அமெரிக்க மக்களின் ஆர்ப்பாட்டம்.

# போர் வெறிபிடித்த அமெரிக்காவின் போலீசுக்காரன் வேலை

இரணடாவை அமெரிக்கா ஆக்கிரமிக்கலாம்; ஆப்கானை ரஷியா ஆக்கிரமிக்கலாம்; தவறு இல்லை. ஏகாதிபத்தியத்தின் ஆசியோடு பிராந்திய துணை வல்லரசுகளும் அவ்வாறு ஒரு சிறிய நாட்டை ஆக்கிரமிக்கலாம். தவறு இல்லை. ஆனால் ஏகாதிபத்திய நலன்களுக்கு எதிராக ஈராக், குவைத்தை ஆக்கிரமித்ததுதான் மாபெரும் குற்றம் என்பதே ரஷிய - அமெரிக்க ஏகாதிபத்தியங்களின் நிலை. இதை நியாயப்படுத்தி தீர்மானம் போடுவதுதான் ஐ.நா. சபையின் வேலை!

குவைத் மீதான ஈராக்கின் ஆக்கிரமிப்பை எதிர்த்து ஏகாதிபத்தியங்களின் உத்திரவுப்படி பொருளாதாரத் தடை விதிக்கும் தீர்மானத்தை நிறைவேற்றிய ஐ.நா. சபை, இப்போது ஈராக் மீது அமெரிக்காவும் அதன் கூட்டாளிகளும் போர் தொடுக்க நாள் குறித்துள்ளதை நியாயப்படுத்தி தீர்மானம் நிறைவேற்ற உள்ளது. ஐ.நா. சபையின் பாதுகாப்புக் குழுவில் அமெரிக்காவின் ராணுவத் தாக்குதலுக்கு ஆதரவாக தீர்மானம் நிறைவேறிய பிறகு, ஜனவரி இரண்டாவது வாரத்தில் ஈராக் மீது போர் தொடுக்க அமெரிக்கா தீர்மானித்துள்ளது.

இதற்காக அமெரிக்க அதிபர் புஷ்ஷும் அரசுச் செயலாளர் ஜேம்ஸ் பேக்கரும் ஐரோப்பா மற்றும் மேற்காசிய நாடுகளில் ஆதரவு கோரி கடந்த மாதத்தில் தூது சென்றனர். எகிப்து, துருக்கி, பஹ்ரைன், சவூதி அரேபியா முதலான அமெரிக்க அடிவருடி நாடுகள் ராணுவத் தாக்குதலை வரவேற்றுள்ளன. பிரிட்டன், பிரான்ஸ், சிரியா, எகிப்து, மொராக்கோ, வங்கதேசம், பாகிஸ்தான் முதலான நாடுகள் கணிசமான அளவுக்கு படையை அனுப்பவும் இசைந்துள்ளன. இது தவிர ஏற்கனவே 10 லட்சம் துருப்புக்களை வளைகுடாவில் கொண்டுபோய் குவித்துள்ள அமெரிக்கா, மேலும் அதிரடிப் படைகளைப் போரில் ஈடுபடுத்த முடிவு செய்துள்ளது.

ஐ.நா. பாதுகாப்புக் கவுன்சிலில் நிரந்தர உறுப்பு நாடுகளாக உள்ள ரஷியாவும் சீனாவும், ஈராக்குக்கு எதிராக ராணுவத் தாக்குதல் மேற்கொள்ளுவதை ஆதரிக்கவில்லை; ஆனால் அதற்கெதிராக தமது 'வீட்டோ' (ரத்து) அதிகாரத்தையும் செயல்படுத்தப் போவதில்லை என்ற மறைமுக ஆதரவு நிலைப்பாட்டைக் கொண்டுள்ளன

சுருக்கமாகச் சொன்னால் உலக சமாதானம், ஆயுதக் குறைப்பு பற்றி பெருங்கூச்சல் போடும் ஏகாதிபத்தியங்கள் அனைத்தும் ஈராக் மீதான ராணுவத் தாக்குதலை நேரடியாகவோ மறைமுகமாகவோ நியாயப்படுத்துகின்றன. இதற்கு ஐ.நா. சபையின் தீர்மானத்தை சாக்காகக் காட்டுகின்றன. இந்நாடுகளோடு தமது அடிவருடி நாடுகளையும் சேர்த்துக் கொண்டு உலகநாடுகள் அனைத்துமே ஈராக் மீதான ராணுவத் தாக்குதலை ஆதரிப்பதாகக் காட்டி தனது போர்வெறியை நியாயப்படுத்துகிறது, அமெரிக்கா

ஐ.நா. சபை மூலம் பொருளாதாரத் தடை விதித்தும் கூட பணியாத ஈராக் மீது ராணுவத் தாக்குதல் தொடுப்பதைத் தவிர வேறு வழியே இல்லை என்று நியாயவானாக நாடகமாடுகிறது. உண்மையில் பொருளாதாரத் தடை என்பது, அமெரிக்கா தனது படைகளைக் குவிக்கவும் பாலைவனப் போருக்கு பயிற்சி பெறவும் கால அவகாசத்தை ஏற்படுத்திக் கொடுக்கத்தானே தவிர, வேறல்ல.

குவைத் மீதான ஈராக்கின் ஆக்கிரமிப்பை எவ்வாறு நியாயப்படுத்த முடியாதோ அதேபோல போர் வெறி பிடித்த அமெரிக்க ஏகாதிபத்தியம் உலகின் போலீசுகாரனாக மாறி ஈராக்கைத் தாக்க முயல்வதையும் நியாயப்படுத்த முடியாது. தனது அடிவருடியான இஸ்ரேலைக் கொண்டு பாலஸ்தீனத்தை ஆக்கிரமித்துக் கொண்டுள்ள அமெரிக்காவுக்கு ஈராக்கின் ஆக்கிரமிப்பைப் பேச அருகதையே கிடையாது. குவைத் மீதான ஈராக்கின் ஆக்கிரமிப்பு எவ்வாறு அநீதியானதோ அதேபோல ஈராக் மீது ராணுவத் தாக்குதல் தொடுக்கத் துடிக்கும் அமெரிக்காவின் அடாவடித்தனமும் அநீதியானது. அமெரிக்காவின் ராணுவத் தலையீட்டை நியாயப்படுத்துவது என்பது, எந்த நாட்டில் வேண்டுமானாலும் இனி அமெரிக்கா தலையிடலாம் என்பதற்கு அங்கீகாரம் அளிப்பதாகிவிடும். எண்ணெய் வளத்தைக் கைப்பற்றத் துடிக்கும் ஏகாதிபத்தியங்கள் தமது ஆதாயத்துக்காக தொடுக்கவுள்ள இப்போரினால் பேரழிவு ஏற்படுவதோடு அதனால் ஏற்படும் பொருளாதாரச் சுமை அனைத்தும் ஏழை நாடுகள் மீதே சுமத்தப்படும்.

போரினால் ஏற்படும் பாதிப்புகளை உணர்ந்துள்ள அமெரிக்க மக்கள் உள்நாட்டிலேயே போர் வெறியன் புஷ்ஷுக்கு எதிராக வீரியமிக்க ஆர்ப்பாட்டங்களைத் தொடர்ந்து வருகின்றனர். அவர்களது போராட்டத்தை எதிரொலிக்கும் வண்ணம் உலகெங்குமுள்ள ஒடுக்கப்பட்ட மக்கள் அமெரிக்க கிழட்டு ஏகாதிபத்தியத்தின் அடாவடித்தனத்தை முறியடிக்க அணிதிரள வேண்டிய நேரமிது.

## தவறுக்கு வருந்துகிறோம்

கடந்த இதழில் (16-30 நவம்பர் '90) "அயோத்தி: இந்து மதவெறி பாசிசத்தின் தாக்குதல்" கட்டுரையில் "அக்.23-ந் தேதி காலை சமஸ்திப்பூரில் அத்வானி கைது செய்யப்பட்டார். ஆனால் அக்.21ந் தேதியே தான்பாத் நகரில் அவரைக் கைது செய்யும்படி போட்ட உத்திரவை மாவட்டத் துணை ஆணையாளரும், போலீசு அதிகாரிகளும் அமுல்படுத்த மறுத்து விட்டனர்" என்பதற்குப் பதிலாக தேதிகள் முறையே அக்.29, அக்.27 என தவறாக அச்சாகியுள்ளது.

16 அக். - 15 நவ.'90 இதழில் 'விவசாயிகள் விடுதலை முன்னணியின் மீது தாக்குதல்! பாட்டாளி மக்கள் கட்சியின் பாசிசப் போக்கு!' என்ற அமைப்புச் செய்தியில் பஞ்சாயத்து தலைவர் அய்யலு, பாட்டாளி மக்கள் கட்சியைச் சேர்ந்தவரல்ல. மேலும் பாட்டாளி மக்கள் கட்சியினர் தே.மீனாட்சிபுரத்தில் எழுதப்பட்டிருந்த வி.வி.மு. மாநாட்டு சுவரெழுத்தை மாநாடு முடிந்த பின்னர்தான் அழித்திருக்கின்றனர். ஆனால், இதற்கு மாறாக அச்சாகியுள்ளது. மேற்கண்ட தவறுகள் நிகழ்ந்ததை எண்ணி மிகவும் வருந்துகிறோம். இனி கவனத்துடன் செயலாற்ற உறுதியளிக்கிறோம். — ஆசிரியர் குழு.



படிப்பகம்

www.padippakam.com

புதிய ஜனநாயகம்

மார்க்சிய - லெனினிய
அரசியல் ஏடு

ஆறாமாண்டு

2

1 - 15 டிசம்பர்'90

உள்நாடு
தனிஇதழ் : ரூ.2.
ஆண்டு சந்தா : ரூ.48

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டுசந்தா : US $ 11

படைப்புகள் அனுப்பவும்
மற்றும்
அனைத்துத் தொடர்புக்கும்

எஸ். மதியழகன்
ஆசிரியர், 'புதிய ஜனநாயகம்'
21, பாலாஜிசிங் தெரு
சைதாப் பேட்டை
சென்னை-600 015.

# எரியும் தீயில் எண்ணெய் ஊற்றும் பாசிச பாதந்தாங்கிகள்

அயோத்தி விவகாரத்தில் இந்து மதவெறியர்களுக்கு விட்டுக்கொடுத்து சமரசம் செய்துகொள்வது; காஷ்மீரில் இனத்துரோகி ஃபரூக் அப்துல்லாவின் பொம்மை ஆட்சியை நிறுவி, உள்நாட்டுப் போரைத் தீவிரப்படுத்துவது; பஞ்சாபில் பாசிச ஒடுக்குமுறையை அதிகமாக்குவது; அசாமில் கவர்னர் ஆட்சியை நிறுவி இன விடுதலைப் போராளிகளுக்கு எதிராக அரசு இராணுவ பயங்கரவாதத்தை ஏவிவிடுவது. பதவியேற்ற ஒரு மாதத்துக்குள் இந்த நடவடிக்கைகளில் ஈடுபட்டதன் மூலம் சந்திரசேகர் – தேவிலாலின் ஆட்சி பாசிச ராஜீவ் கும்பலின் பாதந்தாங்கிதான் என்பதைக் காட்டிவிட்டது.

நவம்பர் 25-ந் தேதி அனந்தப்பூர் சாகிப் குருத்துவாராவில் கூட இருந்த சீக்கிய மாநாட்டைத் தடை செய்ததோடு, சீக்கியத் 'தீவிரவாத'த் தலைவர்களை மட்டுமல்ல, மித வாதத் தலைவர்கள், மனித உரிமை இயக்கத்தவர்கள் உட்பட 2000 பேர் நள்ளிரவில் கைது செய்யப்பட்டனர். "சில அந்நிய உளவாளிகள் சீக்கியர்களின் புனித நூலான கிரந்தங்களை டில்லி, ஜலந்தர் குருத்துவர்ராக்களில் கொளுத்திவிட்டனர். அதைப்பயன்படுத்தி கலவரங்களைத் தூண்டி நாசவேலைகள் செய்வதற்காக திட்டமிடும் கூட்டத்தை சில தேச விரோதிகள் நடத்த இருந்தனர். அதனால் ஏற்படும் விபரீதங்களைத் தடுக்கவே நடவடிக்கை எடுத்தோம்" என்று அரசு கூறுகிறது. ஆனால் உண்மையான காரணங்களோ வேறு.

அயோத்தி மசூதியை இடிப்பதில் வெற்றிபெற்ற, இந்துமத வெறி பாசிச கும்பல்கள் குருத்துவாராக்களுக்குள் புகுந்து கிரந்தங்களைக் கொளுத்தின. இதனால் பீதியுற்ற அகாலிதளத்தில் பிளவு பட்டுக்கிடந்த பல குழுக்களும் இணைவதற்காக ஆறுபெரும் தலைவர்களின் கமிட்டி அமைத்தன. ஐக்கியப்பட்டு எதிர்காலத்தைத் திட்டமிடவும் ஊழல் மற்றும் அரசு பயங்கரவாதச் செயல்கள் மீது விசாரணை நடத்த தனி நீதி மன்றம் நடுவர்மன்றம் அமைப்பதாகவும் முடிவு செய்திருந்தன. ராஜீந்தர் சச்சர், தார்குண்டே, செகல் ஆகிய இந்து நீதிபதிகளையும் தெரிவு செய்திருந்தனர். இதனால் பஞ்சாபில் அரசு புரிந்துவரும் கோரக்கொலைகள் அம்பலமாகிவிடும்; அகாலிகள் ஐக்கியம் சவாலாகிவிடும் என்று அஞ்சும் பாசிச ராஜீவ் மற்றும் இந்து மதவாத பாசிஸ்டுகளின் தூண்டுதலால் அரசு தாக்குதல் தொடுத்துள்ளது.

காஷ்மீரில் உள்நாட்டுப் போரைத் பகிரங்கமாகப் பிரகடனப்படுத்த வேண்டிய நிலைமை உருவாகிவிட்டது. போராளிகளுக்கு எதிரான இராணுவ வெறியாட்டத்தைத் தீவிரப்படுத்துவதை மூடி மறைப்பதற்காக ஃபரூக் அப்துல்லாவின் பொம்மை ஆட்சியை நிறுவும்படி பாசிச ராஜீவ் கும்பல் நிர்பந்திக்கிறது. மீண்டும் சர்வ கட்சிக் கமிட்டி அமைத்து, இனத் துரோகிகளுடன் பேரம் பேசுகிறது அரசு. இதனால் கோபமடைந்துள்ள காஷ்மீர் போராளிகள் கடும் எச்சரிக்கை விட்டுள்ளனர்.

அசாம் சட்டமன்றத் தேர்தல்களை நடத்துதற்கு ஒரு மாதமே இருக்கும்போது, அங்கிருந்த அசாம் கண பரிஷத்தின் ஆட்சியைக் கலைத்துவிட்டு கவர்னர் ஆட்சி பிறப்பிக்கப் பட்டுள்ளது. "அசாமில் சட்டம் ஒழுங்கு, நிர்வாகம் சீர்குலைந்துவிட்டது. அசாம் ஐக்கிய விடுதலை முன்னணி என்ற பிளவுவாத, தீவிரவாத குழுவின் அட்டகாசம் பெருகிவிட்டது. அக்குழுவை மாநில அரசு கட்டுப்படுத்தத் தவறிவிட்டது" என்று அரசு கூறுகிறது. அசாம் ஐக்கிய விடுதலை முன்னணியோடு அதன் கூட்டாளி அமைப்பான நாகா தேசிய சோசலிச கவுன்சில் என்ற அமைப்பும் தடை செய்யப்பட்டு, அசாம் முழுவதும் கலவரப் பகுதியாக அறிவிக்கப்பட்டுள்ளது. சீக்கியப் பொற் கோவிலைத் தாக்கிய "நீல நட்சத்திர நடவடிக்கை"க்கு தலைமையேற்ற பிரார் தலைமையில் "பஜ்ராங் நடவடிக்கை" என்ற போரை இந்திய இராணுவம் துவங்கிவிட்டது.

அயோத்தி விவகாரத்தில் இந்து மதவெறியர்களுக்கு விட்டுக் கொடுத்து, இந்துக்களின் ஓட்டுக்களைப் பெற்று ஆட்சியைப் பிடிப்பதற்கு ராஜீவ் கும்பல் துடிக்கிறது. அதன் ஒரு பகுதியாக முன்பு செங்கல் பூசை நடந்த பிரச்சினைக்குள்ளான பாபர் மசூதி வளாகத்துக்குள்ளேயே கரசேவக வேலையைத்தொடங்க அனுமதிக்கும் படி மத்திய, மாநில அரசுகளை நிர்பந்திக்கிறது. பாபர் மசூதியை இடிப்பதில்லை. மசூதிக்குள் உள்ள ராமன் முதலிய சிலைகளை அகற்றிவிடுவது என்கிற உத்தரவாத அடிப்படையில் ஒரு பிரிவு "ஷியா" முஸ்லிம்கள் இதை ஏற்கும் சமரசத்துக்குத் தயாராய் உள்ளதாகத் தெரிகிறது. இதற்கான இரு மதத் தலைவர்களுக்கிடையிலான பேச்சு வார்த்தையும் ஏற்பாடாகியுள்ளது.

ஆனால் இந்து மதவெறியர்கள் பிடிவாதமாய் இருக்கின்றனர். திட்டமிடப்பட்டுள்ள ராமன் கோவிலுடைய முகப்பு வாசல்தான் செங்கல் பூசை நடந்துள்ள இடம். கோவிலின் கர்ப்பகிரகம் மசூதிக்குள் அமையும் என்று சாதிக்கிறார்கள். அதையும் ஏற்பதற்கு ராஜீவ் – சந்திரசேகர் கூட்டணி இந்து மதவெறியர்களுடன் சேர்ந்து சதி வேலைகளில் ஈடுபட்டுள்ளது. பாபர் மசூதி உள்ள இடத்தில் ராமன் கோவில் இருந்ததென்று நிரூபிக்கும் அகழ்வாராய்ச்சிச் சான்றுகள் காட்டினால் மசூதியை இடிக்கவும், கோவில் கட்டவும் சம்மதிப்பதாக சந்திரசேகர் அறிவித்துள்ளார்.

"1975-80ல் நடந்த அகழ்வாராய்ச்சிப்படி, பாபர் மசூதிக்குக் கீழே ராமன் கோவில் அஸ்திவாரம் இருக்கிறது. இவ்வளவு நாளும் அறிவிக்காமலிருந்த இம்முடிவை இப்போது அறிவிக்கிறோம்" என்கிறார்கள், இந்து மதவெறியர்கள். அதைத் தொடர்ந்து இந்த மத வெறிப் போலீசின் கட்டுப்பாட்டிலுள்ள மசூதிக்குள் சான்றுகளைப் புதைக்கும் சதி நடக்கிறது.

பாசிச ராஜீவ் கும்பலும் அதன் பாதந்தாங்கிகளும் எடுத்துள்ள இந்த நடவடிக்கைகள் பிரச்சினைகள் எதையும் தீர்க்காது. பஞ்சாபில் சீக்கிய மத உரிமைகளையும், மாநில மக்களின் நியாயமான கோரிக்கைகளையும் ஏற்பது; காஷ்மீர், அசாம், நாகா மக்களுக்கு சுய நிர்ணய உரிமை வழங்குவது; இந்துமதவெறி பாசிசத்தை எதிர்த்து முறியடிப்பது– ஆகியவைதான் பிரச்சினைகளைத் தீர்க்கும்.

படிப்பகம்

www.padippakam.com

# அம்பானி - இந்துஜா கும்பல் ஏலத்தில் எடுத்த ஆட்சியுரிமை

# 'ஜனநாயக' சாத்தான்கள்

போதுத் தேர்தல்கள் மூலம் மக்களே தமது ஆட்சியாளர்களைத் தீர்மானிப்பது - இதுதான் நாடாளுமன்ற ஜனநாயகத்தின் முழுமுதல் மகத்துவம் என்று அதற்கு வக்காலத்து வாங்குபவர்கள் கூறுவதுண்டு.

இல்லை. நாட்டின் பெரும் தரகு அதிகார முதலாளிகள் எவ்வளவு பணத்தை வாரி இறைக்கிறார்கள்; எவ்வளவு நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களை விலைக்கு வாங்குகிறார்கள் என்பதுதான் தீர்மானிக்கிறது. இது இப்போது நேரடியாகவும், மிகவும் அப்பட்டமாகவும் நிரூபிக்கப்பட்டு விட்டது.

மக்கள் வாக்களிக்க வாய்ப்பளிக்கப்பட்ட தேர்தல்களிலும் கூட ஆள் - ஆயுத பலம், பணபலம், சாதி - மத பலம் ஆகியவைதான் தேர்தல் முடிவுகளைத் தீர்மானித்தன. இப்போது அதற்குக் கூட வாய்ப்பளிக்க மறுக்கிறார்கள், அரசியல்வாதிகளும், தரகு அதிகார முதலாளிகளும்.

பணம், பதவி கிடைத்தால் போதும், மானம், மரியாதையை உதிர்த்துவிட்டு, வெட்கமின்றி மாறிமாறிக் கட்சி தாவுவதற்குத் தயாராக உள்ளார்கள், அரசியல்வாதிகள். சரக்குகளை வாங்குவது, விற்பதுபோல நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களை விலைபேசித் தமது எடுபிடி ஆட்சிகளை அமைத்துக் கொள்கிறார்கள், தரகு அதிகார முதலாளிகள்.

இதுவரை மாநிலங்களின் மட்டத்தில் பரவலாக நடந்து கொண்டிருந்த இந்த அரசியல் வியாபாரம், இல்லையில்லை அரசியல் விபச்சாரம் இப்போது நாடு தழுவியதாகவும், அதி உயர்ந்த அதிகார - ஆட்சி பீடத்திலேயும் நடக்கிறது.

### அம்பானி - இந்துஜா கும்பல் ஆட்சியுரிமையை ஏலத்தில் எடுத்தது

ஒரு வருடத்திற்கு முன்பு... காங்கிரசு தேர்தலில் தோற்று மத்தியில் ஜனதாதளம் - தேசிய முன்னணி ஆட்சி அமைக்கும் நிலை ஏற்பட்ட சில மணி நேரங்களில் இந்தியாவின் இரண்டாவது பெரும் தரகு அதிகார முதலாளியான திருபாய் அம்பானியின் கீழ் இருந்த கம்பெனிகள் - ஆலைகளின் பங்கு மதிப்பு கிடுகிடுவென்று சரியத் துவங்கிவிட்டது. அவரது தொழில்முறை எதிரியும் பழம் பெரும் தரகு அதிகாரி முதலாளியுமான நுஸ்லி வாடியாவின் கீழிருந்த கம்பெனிகள் - ஆலைகளின் பங்கு மதிப்போ மளமளவென உயரத் துவங்கிவிட்டது.

அதற்குக் காரணம் அம்பானியின் பின்பலமாக இருந்த ராஜீவ் காந்தியின் ஆட்சி வீழ்ந்து விட்டது. இனி அம்பானியின் அரசியல் செல்வாக்கு - தொழில் மோசடிகள் பலிக்காது; அதற்கு மாறாக நுஸ்லி வாடியாவின் பின்பலமாகிய வி.பி.சிங்கின் தலைமையிலான ஜனதாதள ஆட்சி அமையும்; அவரது அரசியல் செல்வாக்கு பெருகி, அரசு சலுகைகள் பெற்று லாபம் குவியும் என்கிற விவரங்கள் பங்குச் சந்தை வியாபாரிகளுக்கும், பங்குதாரர்களுக்கும் நன்கு தெரியும்.

ஆனால், அம்பானி கும்பல் பீதியடைந்து விடவில்லை. தரகு அதிகார முதலாளிகளின் தலைநகரான பம்பாயிலிருந்து, அரசியல் அதிகாரத் தலைநகரான டெல்லிக்குப் பணமூட்டையுடன் போய் இறங்கியது.

போபர்ஸ் வழக்கில் சிக்கியுள்ள இந்துஜா, முன்னாள் ஜனதாக் கட்சி பொருளாளர் ஜயந்த் மல்ஹோத்ரா, பின்னாள் ஜனதா தளப்பொருளாளர் கமல் மொரார்கா என்ற சந்திரசேகரின் விசுவாச தரகு அதிகார முதலாளிகள் ஆகியோரும் இந்தக் கும்பலோடு சேர்ந்து கொண்டது.

காங்கிரசுக்குள் ராஜீவ் - நரசிம்மராவ், ஜனதா தளத்துக்குள் சந்திரசேகர், தேவிலால், தரகு அதிகார முதலாளிகளுக்குள் அம்பானி - இந்துஜா ஆகிய அனைவருக்கும் நெருங்கிய கூட்டாளிகளாக உள்ளது தான் சர்வதேச ஆயுத, போதைப் பொருள், கருப்புப் பணக் கடத்தல் தொழிலில் ஈடுபட்டுள்ள ஆதனான் கஷோகி மற்றும் சந்திராசாமி கும்பல். இந்தக் கும்பலின் சார்பாக 'மாமாஜி' அகர்வால், சந்திரசேகர் சார்பாக அரசியல் 'மாமா' சுப்பிரமணிய சுவாமி அம்பானியின் சார்பாக கம்பெனி நிர்வாக அதிகாரி பாலசுப்பிரமணி, ஏகபோக பத்திரிக்கை முதலாளி ஜெயின் சார்பாக பிரித்தீஷ் நந்தி ஆகியோர் மேற்கண்ட சதியின் அரசியல் தரகர்களாகச் செயல்பட்டனர்.



பணமும், பதவி ஆசையும், ஐந்து நட்சத்திர விடுதிகளில் விருந்தும் விபச்சாரமும் ஒரு சில எம்.பிக்களை மட்டுமே இழுக்க முடிந்தது. மேற்படி கும்பலின் நடவடிக்கைகளை நுஸ்லி வாடியா - கோயங்கா கும்பலையும் களவுமாகப் பிடித்து அம்பலப்படுத்தியது; ஜனதா தள அரசின் ஊன்று கோல்களாயிருந்த பாரதீய ஜனதாவும், போலிக் கம்யூனிஸ்டுக் கூட்டணியும் வி.பி.சிங்கையே ஆதரித்தனர். தேவிலால் கும்பலுக்குப் போதிய அளவு பதவிகள் கொடுத்து பேரம் பேசி இழுத்துக் கொள்வதில் வி.பி.சிங் வெற்றி பெற்றார். இவற்றின் காரணமாக அம்பானி கும்பலின் முயற்சிகள் பலிக்காமல் போனது.

ஆனாலும், வி.பி.சிங் தலைமையை வீழ்த்துவதற்கான முயற்சியை அம்பானி - இந்துஜா கும்பல் கைவிடவில்லை.

சந்திரசேகரின் போன்சி கிராமத்து ஐந்து நட்சத்திர ஆசிரம விழா, பிறந்தநாள் விழா ஆகியவற்றை சாக்கு வைத்து சந்திரசேகர் - ராஜீவ் கூட்டை உருவாக்கியது; மேகம் தொகுதி தேர்தல் கொலைகளை ஒட்டி, வி.பி.சிங் - தேவிலாலுக்கிடையே நடந்த மோதல் - நெருக்கடியைப் பயன்படுத்திக் கொண்டு சந்திரசேகர் - தேவிலால் கூட்டை உருவாக்கியது; மண்டல் கமிஷன் எதிர்ப்பு மற்றும் அயோத்தியா விவகாரம் மீதான கலவரங்களுக்குப் பின்னிருந்து தூண்டி விட்டு வி.பி.சிங்குக்கு எதிரான பிரச்சாரத்தை நடத்தியது.

இதற்கிடையே தரகு முதலாளிகளிடையே போட்டியும் அம்பானி, இந்துஜா கும்பலுக்கு நெருக்கடியும் முற்றவே அவர்கள் கவிழ்க்கும் வேலையில் தீவிரமாக இறங்கினர். நுஸ்லி வாடியாவின் செயற்கையிழை நூல் - துணி உற்பத்திக்குத் தேவையான பாராக்சிலின் விலை சர்வ தேசிய சந்தையில் வீழ்ச்சியுற்ற போதும் வி.பி.சிங் அரசு சுங்கத் தீர்வை விதிக்காது சலுகை காட்டியது; இதனால் இப்பொருளுக்கு மாற்று தயாரிக்கும் அம்பானியின் லாபம் குறைந்தது.

ராஜீவ் ஆட்சியின் போது பல நிதி மோசடிகள் செய்து லார்சன் அண்டு டூப்ரோ என்ற 600 கோடி மூலதனமுள்ள கம்பெனியை அம்பானி கைப்பற்றியிருந்தார். அதை நுஸ்லி வாடியா - கோயாங்கா கும்பல் அம்பலப்படுத்தியது; வி.பி.சிங் ஆட்சிக்கு வந்ததும் நிர்பந்தம் கொடுத்து அம்பானியை அக்கம்பெனி தலைமையில் இருந்து விரட்டியது. போஃபர்ஸ் விவகாரத்தில் ராஜீவின் கூட்டாளியான இந்துஜா மீதான பிடி இறுகி ஊழல் இரகசியங்கள் அம்பலமாகும் நேரம் நெருங்கியது.

இவ்வாறு தரகு அதிகார முதலாளிகளும், அரசியல் கட்சிகள் - தலைவர்களும் இரு முகாம்களில் சேர்ந்து ஆட்சியைத் தக்க வைத்துக் கொள்ளவும், கவிழ்க்கவுமான முயற்சிகளில் ஈடுபட்டிருந்தனர். மண்டல் கமிஷன் மற்றும் அயோத்தி விவகாரங்கள் முற்றின. அம்பானி - இந்துஜா கும்பலுக்கு



படிப்பகம்

www.padippakam.com

சிவசேனா, பாரதீய ஜனதா ஆகிய இந்து மதவெறி அமைப்புகளிலும் நிறைய செல்வாக்கு உள்ளது. எனவே ஜனதா தள ஆட்சியைக் கவிழ்ப்பதும் சாத்தியமாயிற்று.

பாரதீய ஜனதா கட்சி தவிர அனைத்துக் கட்சிகளும் எம்.பிக்களும் தேர்தலைச் சந்திப்பதற்கு அஞ்சுகின்றனர். வெற்றி பெறும் நம்பிக்கை அவர்களுக்கே கிடையாது. பாரதீய ஜனதாவும் அசாம், பஞ்சாப், காஷ்மீர் மாநிலங்களில் தேர்தல்கள் நடத்துவதை எதிர்க்கிறது. ஜனதா தளம் - தேசிய முன்னணி ஆட்சியில் நீடிக்கவும் முடியாது; குறிப்பாக பாரதீய ஜனதா, காங்கிரசு எம்.பிக்களை இழுக்கும் முயற்சியில் தோற்றுப் போனது. இந்த நிலைமையையும் ஏற்கனவே, கட்டியிருந்த ராஜீவ் - சந்திரசேகர் - தேவிலால் கூட்டை வைத்தும் பணம், பதவி, ஐந்து நட்சத்திர விருந்து, விபச்சாரம் மூலம் எம்.பிக்களை விலை பேசியும் தனது எடுபிடிகளின் பினாமி ஆட்சியை அமைத்துள்ளது. இந்துஜா - அம்பானி கும்பல்.

### அரசியல் வியாபாரச் சந்தையில் அம்பானி - இந்துஜா கும்பல்

**வி.பி.சிங் ஆட்சிக் கவிழும் நெருக்கடி முற்றியதும் பம்பாய் கடத்தல் ஆள்கள் சுறுசுறுப்படைந்து விட்டார்கள்.**

கோடி கோடியாய் ரொக்கத்தை ஒரு சிலரே எடுத்துச் செல்லவும் முடியாது. வழியில் மடக்கிப் பறிமுதல் செய்தால் என்ன செய்வது? வங்கிகள் மூலமாகவும் அனுப்ப முடியாது - அதுவே ஆதாரமாகிவிடும். அவ்வளவும் கருப்புப்பணம்.

எனவே பம்பாயில் இருந்து ஒரு லட்சம் ரூபாய் டில்லி கொண்டு போய் சேர்ப்பதற்காக கமிசன் தொகை வழக்கமான 300 யிலிருந்து 700 ரூபாய் வரை ஏறியது. இப்படிக் குறைந்து 100 கோடி ரூபாய் வரை டில்லியில் போய் இறங்கியது.

இந்துஜா, அம்பானி, கமல் மொரார்கா, ஜெயந்த் மல்ஹோத்ரா, ஆகியவர்களோடு கே.கே.பிர்லா, அபய் ஓஸ்வால் போன்ற தரகு அதிகார முதலாளிகள் அரசியல் வியாபாரச் சந்தையில் முழுமூச்சில் இறங்கியவர்கள். ஜனதா தள அரசு கவிழ்வதையும், சந்திரசேகர் - தேவிலால் அரசு பதவியேற்பதையும் அவர்கள் பிரதிநிகளும், குடும்ப உறுப்பினர்களுமே நேரில் வந்து கண்டு களித்தனர்.

எம்.பி.க்களின் ஒவ்வொரு செயலுக்கும் கூட ஒரு விலை வைக்கப்பட்டது. சந்திரசேகர் - தேவிலால் நடத்தும் பத்திரிக்கையாளர் கூட்டத்திற்கு வருகை தந்து முகத்தை காட்டினாலோ, அந்தக் கும்பலோடு புகைப்படம் எடுத்துக் கொண்டாலோ, போதும் 5 லட்சம் ரூபாய் தரப்பட்டது. அந்த கும்பலின் முகாமில் இருப்பதாகவும் வி.பி.சிங் பதவி விலக வேண்டும் என்று கையொப்பமிட்டாலே 15 லட்சம் ரூபாய்.

தேவிலால் - சந்திரசேகர் முகாமில் சேருவதற்கான விலை 25 லட்சம் ரூபாயிலிருந்து 50 லட்சம் ரூபாயாக உயர்ந்தது; கூடவே மந்திரி பதவியும் தருவதாக வாக்களித்தனர். அவையும் எம்.பி.க்களின் நடவடிக்கைகளை ஒட்டி தவணை முறையில் தருவதாக ஒப்பந்தம் போடப்பட்டது.



வி.பி.சிங் அமைச்சரவையில் துணை மந்திரியாக இருந்தவர் பேகி கோவர்தன். அவர் "கட்சி தாவினால் 50 லட்சம் ரூபாயும், மந்திரி பதவியும் தருவதாக அம்பானியின் தரகர் உறுதி கூறினார். வி.பி.சிங்கை கட்சித் தலைமையிலிருந்து நீக்கி சந்திரசேகரைத் தேர்ந்தெடுக்க வாக்களிக்கும் போது ஒரு தவணையும், வி.பி.சிங்கிற்கு எதிராக நாடாளுமன்றத்தில் வாக்களித்தால் ஒரு தவணையும், சந்திரசேகர் ஆட்சிக்கு ஆதரவாக வாக்களித்தால் ஒரு தவணையும் — ஆக மூன்று தவணைகளில் பணம் பட்டுவாடா செய்வதாகச் சொன்னார்" என்று வி.பி.சிங் முன்னிலையில் பத்திரிகையாளர் மத்தியில் பகிரங்கமாகச் சொன்னார்.

பிறகு அதே பேகி கோவர்தன் கட்சி மாறி சந்திரசேகர் மந்திரி சபையில் சேர்ந்து விட்டார். யூசுப் பெய்க் என்ற உ.பி. எம்.பியின் மாவட்டத்தையே தொழிலற்றதாக அறிவித்து தாராள லைசென்சுகள் தருவதாக முதல்வர் முலயாம் சிங் யாதவ் வாக்குறுதி அளித்தார்.

வி.பி.சிங் அரசோ தனக்கு பாராளுமன்றத்தில் பெரும்பான்மை கிடைக்கும் என்று கடைசிவரை சாதித்து வந்தது; குறிப்பாக எதிர்த் தரப்பிலிருக்கும் பிற்பட்ட சாதி எம்.பி.க்கள் தன்னை ஆதரிப்பார்கள் என்று நம்பவும் செய்தது; ஜார்ஜ் பெர்ணான்டஸ், முஃப்தி முகம்மது சையது போன்றவர்கள் அதற்காக அனுப்பப்பட்டனர். காங்கிரசு எம்.பிக்களின் ஆதரவை அவர்கள் பல முறை நாடியும் வெற்றிபெற முடியவில்லை.

இந்த முயற்சி காங்கிரசுத் தலைமைக்கு உதறல் எடுக்க வைத்து விட்டது. குறைந்தது 15 எம்.பி.க்களாவது கட்சி மாறிஓட்டுப் போடுவார்கள் என்று அது அஞ்சியது. எனவே எல்லோருக்கும் காவல் - கண்காணிப்புப் போட்டது. குறிப்பாக அதன் கூட்டணிக் கட்சியான அ.இ.அ.தி.மு.கவின் 11 எம்.பிக்கள் விலை போய் விடுவார்கள் என்று அஞ்சியது.

ஆனால் இதுதான் வாய்ப்பென்று கணக்குப் போட்ட ஜெயலலிதா 11 எம்.பி.க்களையும் பெங்களூரிலே பூட்டிவைத்து அம்பானி - இந்துஜா கும்பலுடன் பேரம் பேசத் துவங்கினார். சிலகோடி ரூபாயும், தி.மு.க. ஆட்சிக் கவிழ்ப்புக்கும் உறுதியளித்ததன் பேரில் அவர்களிடம் 11 பேரும் ஒப்படைக்கப் பட்டார்கள். ஜெயலலிதா கட்சிக்கு மிகவும் பழக்கமான பாணியில் உல்லாசப் பயணமாக அவர்கள் டில்லிக்கு அழைத்துப் போகப்பட்டு முதலில் அசோகா ஐந்து நட்சத்திர ஓட்டலில் தங்க வைத்தனர். பிறகு, சுமிடோமோ ஊழல் பிரபலம் லலித்சூரியின் 'ஹாலிடே இன்' என்ற ஐந்து நட்சத்திர ஓட்டலில் 'சகல' வசதிகளுடன் அடைக்கப்பட்டிருந்தனர்.

இவ்வாறு நாட்டின் ஆட்சியுரிமை ஏலத்தில் எடுக்கப் பட்டதையும், அரசியல் வியாபாரத்தில் தரகு அதிகார முதலாளிகள் ஈடுபட்டதையும் பதவியிழந்த வி.பி.சிங் தவிர வேறு எவருமே கண்டு கொள்ளவில்லை. போலிக் கம்யூனிஸ்டுகள் நாடாளுமன்றத்தில் முணுமுணுத்ததோடு சரி. குறைந்தது 25 கோடி ரூபாயாவது அரசியல் வியாபாரத்தில் முதலீடு செய்வதற்காக தங்களிடம் உள்ளதென்று காங்கிரசுத் தலைவர் ஒருவரே ஒப்புக்கொண்டார்; ஆனால் அதே அளவு எதிர்த் தரப்பினரிடம் உள்ளதென்று கூறினார்.

இதெல்லாம் சகஜமானதுதான் என்கிற தோரணையில்தான் அனைத்துக் கட்சிகளும், பத்திரிகைகளும் நடந்து கொள்ளுகின்றன. கட்சி தாவுவதற்காக 4 லட்சம் ரூபாய் ஜெயலலிதா லஞ்சம் கொடுத்தார் என பெரம்பலூர் எம்.பி. தங்கராஜ் நாடாளுமன்றத்தில் ரொக்கமாகப் பணத்தைக் கொட்டிய போதும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப் படவில்லை. அப்படித்தான் இப்போது நடந்த வியாபாரத்தையும் யாரும் கண்டு கொள்ளவில்லை.

### கட்சி தாவும் கலையும் தடைச்சட்டத்தின் ஓட்டைகளும்

பணத்துக்கும், பதவிக்கும், சுகத்துக்கும் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் விலைபோவதும், கட்சி தாவுவதும் புதிய விவகாரம் அல்ல. அது நாடாளுமன்ற ஜனநாயகத்தின் கூடப் பிறந்த வியாதிதான்! பொறுக்கி அரசியலுக்கு முன்னோடியாக விளங்குவதைப் போல் இதிலும் தமிழகம் தான் முன்னோடியாக விளங்குகிறது. அதுவும் குறிப்பாக திராவிட இயக்கங்களின் தாய்க்கட்சியான நீதிக் கட்சிக்காரர்கள் கட்சி தாவும் கலையையும் பினாமி ஆட்சியை நிறுவுவதையும் இந்தியாவில் துவக்கி வைத்த பெருமைக்குரியவர்கள்.



படிப்பகம்

www.padippakam.com

1952 தேர்தல்களில் சென்னை மாகாணத்தில்தான் காங்கிரசு பெரும்பான்மை பலம் பெற முடியாமல் போனது. அரசியல் ஓய்வு பெற்றிருந்த ராஜாஜியை அழைத்தது காங்கிரசு. காங்கிரசை எதிர்த்துப் போட்டியிட்டு பல இடங்களைப் பெற்றிருந்தன, ராமசாமி (படையாச்சி) மற்றும் மாணிக்கவேல் (நாயக்கர்) தலைமையிலான இரு வன்னியர் சாதிக் கட்சிகள். அவர்கள் திராவிட நாடு கோரிக்கையை ஆதரிப்பதாக கையெழுத்துப் போட்டுக் கொடுத்து தி.மு.க. ஆதரவையும் பெற்று தேர்தல்களில் வென்றவர்கள். இருந்தாலும் 'கட்சி தாவி' மந்திரி பதவிகளை ஏற்று ராஜாஜி அமைச்சரவையில் சேர்ந்தனர்.

1957இல் கேரளாவில் ஆட்சிக்கு வந்த போலிக் கம்யூனிஸ்டு மந்திரிசபையைக் கவிழ்த்து கட்சி மாறிகளை வைத்து பட்டம் தாணு (பிள்ளை) தலைமையில் காங்கிரசின் பினாமி ஆட்சி அமைத்தார் இந்திரா. அப்போது அதைக் கடுமையாக எதிர்த்த போலிக் கம்யூனிஸ்டுகள் 1967க்கும் பிறகு காங்கிரசு கட்சி மாறிகளோடு சேர்ந்து மேற்கு வங்கத்திலும், கேரளத்திலும் கூட்டணி மந்திரிசபை அமைத்தனர்.

**மொத்தமுள்ள 4000 நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களில் 2000 பேர் 1967-72 கால கட்டங்களில் கட்சி மாறினர். 1971 மார்ச்சுக்குள் 50% சட்டமன்ற உறுப்பினர்கள் கட்சி மாறி விட்டனர்.** ஒரு எம்.எல்.ஏ. மந்திரியாவதற்காகவே 5 தடவை கட்சி மாறினார்; அவரும் 5 நாட்களே மந்திரியாக இருந்தார். மந்திரி, முதல்மந்திரி பதவிக்காகவே கட்சி மாறுவதில் சாதனை படைத்தவர் மண்டல் கமிசன் பிரபலம் பி.பி. மண்டல். பலமுறை கட்சி மாறி, ஆட்சிக் கவிழ்ப்புகள் நடத்தியும் ஒரு சில மாதங்களே மந்திரியாகவும், ஒரு சில நாட்களே முதல்வராகவும் மண்டல் நீடித்தார்.

1967-72 காலகட்டங்களில் கட்சி தாவுவது காரணமாக மாதத்துக்கு சராசரி ஒரு மந்திரிசபை கவிழ்ந்தது! 1967இல் மட்டும் கட்சிதாவிய 200 எம்.எல்.ஏ.களில் 116 பேர் மந்திரிகளாயினர். இரண்டு பெரும் ஆளும் 'தேசியக்' கட்சிகள் உருவாகி விட்டால் கட்சி மாறும் அரசியலுக்கு முடிவு வந்து விடும் என்று அறிவு ஜீவிகள் பிரச்சாரம் செய்தனர். 1977 தேர்தல்களுக்கு பிறகு காங்கிரசு, ஜனதா கட்சி ஆகிய இரண்டு பெரும் 'தேசிய' ஆளும் கட்சிகள் இருந்தன; ஆனால் அவற்றுக்கிடையே கட்சி தாவுவதும், ஆளும் கட்சிகளில் பிளவு ஏற்பட்டு ஆட்சிக் கவிழ்ப்பும் அடிக்கடி நிகழ்ந்தன.

1979இல் அரியானா ஆளும் ஜனதாக் கட்சிப் பிரிவு, மந்திரி சபையுடன் பஜன்லால் தலைமையில் கட்சி தாவியது; அங்கு 1983இல் தேவிலால் கட்சி பெரும்பான்மையாக வென்றபோது, எம்.எல்.ஏக்களை விலைபேசி மீண்டும் பஜன்லால் மந்திரிசபையை காங்கிரசு அமைத்தது; 1984இல் ஆந்திராவில் என்.டி.ஆர். ஆட்சியைக் கவிழ்த்து பாஸ்கர்ராவ் தலைமையிலும், காஷ்மீர் ஃபரூக் ஆட்சியைக் கவிழ்த்து ஜி.எம்.ஷா தலைமையிலும் இந்திரா காங்கிரசு பினாமி மந்திரிசபைகள் அமைத்தது —



ஆகியவை மாநில மட்டத்தில் ஆட்சிக் கவிழ்ப்பு - கட்சி தாவுவதில் வரலாறு படைக்கும் நிகழ்ச்சிகளாயின.

கட்சி மாறுவதும் - ஆட்சி கவிழ்ப்பும் நாடாளுமன்ற ஜனநாயகத்தைக் கவ்விக் கொண்டுள்ள பெருநோய் என்பது எல்லாக் கட்சிகளுக்கும், தலைவர்களுக்கும் தெரியும்; அவற்றுக்கு எதிராகக் கூச்சல் போடாதவர்கள் கிடையாது; ஆனாலும் அவற்றைத் தடுப்பதற்கான நடவடிக்கைக்கு யாரும் முக்கியத்துவம் அளிக்கவில்லை; தட்டிக் கழிக்கவே செய்தனர்.

கட்சித் தாவலைத் தடுக்கும் நடவடிக்கை பற்றி கமிட்டி அமைப்பது என்று 1967 டிசம்பரில் அதிகார பூர்வமற்ற தீர்மானம் நிறைவேறி 1968 மார்ச்சில் கமிட்டி அமைத்து 1969இல் அறிக்கை கிடைத்தது. 1977ல் அதற்கான மசோதாவைக் கொண்டு வந்து விட்டு, அதை நிறைவேற்றாமலேயே நாடாளுமன்றத்தைக் கலைத்து தேர்தல் நடத்தினார் இந்திரா. பிறகு அது கிடப்பில் போடப்பட்டது. 1974ல் ஆட்சி கவிழ்ப்பதற்கு சில நாட்கள் முன்பாக ஒரு மசோதாவை ஜனதா அரசு கொண்டு வந்து நிறைவேறாமல் போனது. மீண்டும் ஆட்சிக்கு வந்த இந்திரா அதைக் கண்டு கொள்ளவே இல்லை.

1985 தேர்தல்களில் நாடாளுமன்றத்தில் மிருக பலம் பெற்ற பாசிச ராஜீவ் கும்பல், தனது பதவியைக் காப்பாற்றிக் கொள்வதற்காகவே கட்சி தாவல் தடைச்சட்டம் கொண்டு வந்தது. ஜனநாயகத்தின் மாண்பை, மரியாதையைக் காப்பதற்கான மகத்தான நடவடிக்கை என்று அப்போது அது பலரது பாராட்டைப் பெற்றது.

ஆனால் இந்தச் சட்டமானது ஒன்று, மிருக பலம் கொண்ட கட்சிக்குள் நியாயமான காரணத்திற்காக மாறுபடும் சிறுபான்மையைப் பழிவாங்கும் ஜனநாயக விரோதமானது; இரண்டு, ஒரு தனி நபர் அல்லது மிகச் சிறுபான்மையினர் கட்சி மாறுவதைத் தான் தடுக்கிறது, பிளவு என்கிற பெயரில் மூனறில் ஒரு பங்கினர் கட்சி தாவுவதைத் தடுக்கவில்லை. மூன்று, சபாநாயகரே இறுதி முடிவு செய்யும் அதிகாரம் உள்ளவர். அவரும் கட்சி நபராக இருப்பதால், அல்லது அவரே கட்சி தாவி விட்டால் சபைகளில் ரௌடித்தனம் நடக்கிறது; இதனால் தீராத பல வழக்குகள் 'நீதி'மன்றங்களில் குவிந்துள்ளன; சிக்கல் காரணமாக சம்பந்தப்பட்ட அவைகளே கலைக்கப்பட்டு மறு தேர்தல்கள் நடந்த போதும் 'நீதி'மன்றத் தீர்ப்புகள் வரவே இல்லை.




இவ்வாறு கட்சி தாவல் தடைச்சட்டம் நாடாளுமன்ற ஜனநாயகத்தை மேலும் கேலிக் கூத்தாக்கி விட்டது. இந்நிலையில் நாட்டின் நான்கு பெரும் சட்டமன்றங்களிலும், நாடாளு மன்றத்திலுமே கட்சி தாவுவதும், ஆட்சிக் கவிழ்ப்புகளும் நடந்து தீராத சிக்கலை ஏற்படுத்தியுள்ளது.

இலட்சியப் பிடிப்பும், ஒழுக்கம், கட்டுப்பாடும் மிக்கதாகக் கூறப்படும் ஆர்.எஸ்.எஸ்., பாரதீய ஜனதாக் கட்சி தனது ராஜஸ்தான் ஆட்சியைக் காப்பாற்றிக் கொள்வதற்காக, பலருக்கு மந்திரி பதவி கொடுத்து, ஜனதா தளத்திலிருந்து கட்சி தாவிகளைக் கூட்டணியில் சேர்த்துக் கொண்டது. அதேசமயம், இதே மாதிரியான கட்சி தாவலுக்காக தனது பீகார் எம்.எல்.ஏ.க்கள் மீது பாய்ந்துள்ளது.

இப்பொழுது இந்த இந்த வியாதி, எய்ட்ஸ் நோயைப் போல நிவாரணமில்லாத நாடு தழுவிய அளவுக்கு வளர்ந்துவிட்டது. இந்த நோய் நாடாளுமன்ற ஜனநாயகத்தையே சாகடிக்காமல் விடாது.

• • •

இப்போதைய அரசியல் நிலைமைகள் பற்றி பத்திரிகையாளர்கள் பொது மக்களைப் பேட்டி கண்டனர். கான்பூர் பொதுத் துறை நிறுவனத்தில் பணிபுரியும் திருமதி மம்தா கூறினார்: "எல்லா அரசியல்வாதிகளையும் தூக்கிவிட வேண்டும். மக்கள் நலனில் அவர்களுக்கு அக்கறை கிடையாது; அவர்களுக்கு வேண்டியதெல்லாம் பணமும் பதவியும் தான்."

பொது மக்களிடையே பரவிவரும் இந்தக் கருத்து நியாயமானதுதான். ஒரு புரட்சிகர புதிய ஜனநாயக அமைப்புக்கான போராட்டத்துக்கு இது அடித்தளம் அமைத்துத் தரும். அவ்வாறு செய்யத் தவறினால் பொது மக்களிடையே இன்னொரு கருத்து ஆழப்படும். அகமதாபாத் கோதக் கிராமத்து சஞ்சய் பட்டேல் சொன்னார், "அரசியல்வாதிகள் அனைவருமே நம்மைக் கைவிட்டு விட்டார்கள். இந்த நாட்டுக்குத் தேவை ஒரு குறுகிய கால சர்வாதிகாரம் தான்."

இம்மாதிரியான விரக்தியும், எதிர்மறைத் தீர்வும்தான் பாசிஸ்ட்டுகளும், இராணுவ சர்வாதிகாரிகளும் விரும்பும் சூழ்நிலையை உருவாக்கும். முன்வாசல் வழியே நாடாளுமன்ற ஜனநாயகவாதிகள் என்ற நரிகளை விரட்டுவது சரிதான். ஆனால் பின்வாசல் வழியே ஓநாய்களை அனுமதிப்பது சரியாகுமா?

ஆர்.கே.



படிப்பகம்

www.padippakam.com

## தி.மு.க. அரசின் மதச்சார்பின்மை லட்சணம்

# மதவெறியை எதிர்த்த ம.க.இ.க. தோழர்கள் கைது!

மதவெறியைத் தூண்டிப் படுகொலைகள் செய்யவும், பாபர் மசூதியை இடிக்கவும் கிளம்பிய இந்து மதவெறியை எதிர்த்தும், அனைத்து மதவெறி அமைப்புகளையும் தடை செய்யக் கோரியும், ராமன் பிறந்த இடம் என்பதற்கு ஆதாரமே இல்லாத பாபர் மசூதியை முஸ்லீம்களுக்கு ஒப்படைக்கக் கோரியும் கோவை மக்கள் கலை இலக்கிய கழகத் தோழர்கள் சுவரொட்டி இயக்கம் நடத்தினர்.

அதற்காக கடந்த அக்டோபர் 30ந்தேதி தோழர்கள் நசீம் இக்மத், கதிரவன் ஆகியோரைக் கைது செய்த போலீசு, அவர்களை விடுவிக்கக் கோரி சுவரொட்டிகள் தயாரித்ததற்காக தோழர்கள் மணிவண்ணன், காளி ஆகியோரையும் கைது செய்தது. ம.க.இ.க. அலுவலகமான தோழர் நசீம் இக்மத் வீட்டை சோதனையிட்டது; சட்டம் - ஒழுங்கைக் காரணங்காட்டி அவர்களைச் சிறையிலடைத்திருந்து, அன்று நள்ளிரவில் விடுவித்தது.

ஏற்கனவே மதவெறிப் படுகொலையைத் தூண்டி, பாபர் மசூதியை இடிப்பதற்குக் காரணமான கிரிமினல் குற்றவாளி அத்வானி அதே நோக்கங்களுக்காக கடந்த வாரம் தமிழக சுற்றுப்பயணம் வந்தார். அப்போது "மத்திய, மாநில அரசுகளே மதவெறி அமைப்புகளைத் தடை செய்! மதவெறியூட்டி மக்களைக் கொல்லும் கொலைகாரன் அத்வானியே திரும்பிப் போ! உழைக்கும் மக்களே, மதவெறியர்களை விரட்டியடிப்போம்!" என்கிற சுவரொட்டிகளை ம.க.இ.க. ஒட்டியது.

அந்தச் சுவரொட்டிகளைச் சுரண்டி அழித்த போலீசு, சட்டம் - ஒழுங்கு, அத்வானிக்குப் பாதுகாப்பு என்ற பெயரில் தோழர் நசீமைக் கைது செய்தது; அத்வானி திருப்பூர் போய் சேர்ந்த பிறகு, இரவு 10 மணிக்கு மேல் நசீமை விடுதலை செய்தது. அடுத்த நாள் போலி ஜனநாயகத்தையும், போலி மதச் சார்பின்மையையும் அம்பலப்படுத்தி பேருந்துகளில் பிரச்சாரம் செய்தனர் ம.க.இ.க. தோழர்கள். அவர்களிடம் பத்திரிகைகளை வாங்கியும் விசாரித்தும், பாராட்டியும் மதவெறியை முறியடிக்கும் இயக்கத்துக்கு மக்கள் ஆதரவைக் காட்டினர்.

மதவெறியை எதிர்த்துப் போராடும் ம.க.இ.க.வின் குரல்வளையை நெறிக்க முயலும் போலீசோ, ஆர்.எஸ்.எஸ்., பாரதீய ஜனதா, இந்து முன்னணி மதவெறியைப் பரப்புவதைத் தடுக்காதது மட்டுமல்ல; பாதுகாப்பும் கொடுத்தது.

"அந்நிய பாபரா? பாரதத்தின் ஸ்ரீராமனா? எது தேசபக்தி? இந்துக்களின் எழுச்சி நாயகன் எல்.கே.அத்வானி அவர்களே வருக! வருக!" என்றும் "பாகிஸ்தானியர் படை நடுநடுங்கிட இந்துக்களின் இரண்டாவது சுதந்திரப் போருக்கு தலைமையேற்க வரும் இந்துக்களின் தள நாயகன் எல்.கே.அத்வானியே வருக! வருக!" என்றும் மதவெறிச் சுவரொட்டிகள் ஒட்டினர்.

ஆர்.எஸ்.எஸ். கும்பல் தவிர அனைவரும் தேச விரோதிகள் என்றும், பாபர் மசூதியை இடித்தது இந்துக்களின் வெற்றி என்றும் கூறும் சுவரொட்டிகள் அனுமதிக்கப்பட்டன

அவிநாசி தேர் எரிந்து போன சம்பவத்தைக் கூட அவர்கள் தமது மதவெறித் தூபத்துக்குப் பயன்படுத்திக் கொண்டனர். எம்.எல்.ஏ, எம்.பி.க்கள்; அதிகாரிகள் நடத்திய மத ஒற்றுமை பேரணியின் போது அதை எதிர்த்து ஆர்.எஸ்.எஸ். கும்பல், "அவிநாசி தேர் எரிந்து விட்டது. மத ஒற்றுமை பேரணி நடத்தும் அதிகாரிகளே, உங்கள் பதில் என்ன?" என்று கேட்டு சுவரொட்டி ஒட்டியது. அவிநாசி தேர் எரிந்ததை சி.பி.ஐ. விசாரிக்க வேண்டுமென்றும் பொதுக்கூட்டத்தில் மதவெறியுடன் அத்வானி கோரினார்.

பொள்ளாச்சி அனுமார் கோவிலுக்கு வெடிகுண்டு வைத்து மதக் கலவரத்தைத் தூண்ட முயன்ற இந்து மதவெறியர்கள் பிடிபட்டனர். அதைப்போல அவிநாசி தேரையும் அவர்கள் கொளுத்தியிருக்கக் கூடாதா? இம்மாதிரியான சதிகாரர்கள், மதவெறிக் கொலைகாரர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்குப் பதில் அவற்றை எதிர்ப்பவர்கள் மீது பாய்கிறது கருணாநிதி அரசும், போலீசும்; இப்படித்தான் முன்பு ஆர்.எஸ்.எஸ். - காங்கிரசு கூச்சலைக் கண்டஞ்சி தஞ்சை தன்னுரிமை மாநாடுக்குத் தடைவிதித்துக் கைது செய்தது.

விழிப்புறும் மக்கள் இந்து மதவெறியர்களோடு சேர்த்து மதச்சார்பின்மை வேடதாரிகளையும் முறியடிப்பார்கள்.

# குடிநீர் கொடுக்க மறுக்கும் போலிகளின் திமிர்தனம்!

**குடிநீர் தட்டுப்பாட்டுக்கெதிராக இங்கே போராட்டம் நடத்தும் போலிக் கம்யூனிஸ்ட்டுகள் தங்கள் அதிகாரத்தில் குடிநீர் இருந்தும் கொடுக்க மறுக்கிறார்கள்.**

கோவை மாவட்டம் விளாங்குறிச்சி கிராமம்; சி.பி.எம். கட்சியின் உறுப்பினரும் மிகப் பெரும் சாராய வியாபாரியுமான சுந்தரசாமி இவ்வூர் பஞ்சாயத்து தலைவர். தன் தோட்டத்திலேயே தொட்டி கட்டி சாராயம் காய்ச்சி சாதனை படைத்தவர். சாராய பணத்தில் ஒரு ஓட்டுக்கு 50 ரூபாய் கொடுத்து வெற்றி பெற்றவர்.

இந்த 'புரட்சி' நாயகருக்கும், அவரது 'புரட்சி' கட்சிக்கும் அவ்வூர் 1,5 வார்டுகளில் உள்ள மக்கள் பஞ்சாயத்து தேர்தலில் ஓட்டு போடவில்லை. தனது சாராய ரௌடித்தனத்தை மக்களிடம் காட்டினார், 'தோழர்' சுந்தரசாமி! அவ்வூரின் வடக்கு பகுதியிலுள்ள அரிசனப் பகுதியின் 'போர்வெல்' தண்ணீர் 5 வது வார்டு பெருமாள் கோவில் தண்ணீர் தொட்டியில் இறைக்கப்பட்டு ஊரின் மற்ற பகுதிகளுக்கு விநியோகிக்கப்படுகிறது. கடந்த 30 ஆண்டுகளாக உள்ள நடைமுறை இது. 1, 5 ஆகிய வார்டு மக்களுக்கு குடிநீரை தடுக்க, புதிய குழாய் இணைப்பு போட்டார் பஞ்சாயத்து தலைவர். இதன் மூலம் தனக்கு ஓட்டு போட்ட 3வது வார்டு மக்களுக்கு மட்டும் தண்ணீர் குடிக்க உரிமையுண்டு எனறு நிலைநாட்டினார்.

ஊரில் பொதுமக்களும் மற்ற அனைத்து அரசியல் கட்சிகளும் ஓரணியாக திரண்டு இதை எதிர்த்தனர். மாவட்ட மற்றும் வட்டார வளர்ச்சி அதிகாரிகள், தாசில்தார், கலெக்டர் என்று மக்கள் இந்த விவகாரத்தை எடுத்துச் சென்றனர். புதிய இணைப்பை அகற்றி விடும் உத்திரவு கோரி வெற்றி பெற்றனர். ஆனால், போலிக் கம்யூனிஸ்ட்டுகள் ஒன்றாகத் திரண்டு, சாராய வியாபாரி சுந்தரசாமி தலைமையில் சென்னை உயர்நீதி மன்றத்தில் அந்த ஆணைக்கு 'ஸ்டே' வாங்கி விட்டனர். இதற்காக ரு.10,000 'தண்ணீராக' செலவழித்து போராடியவர்களுக்கு 'பாடம்' புகட்டினர்! கலெக்டர் உத்திரவு 'பஞ்சாயத்து அதிகாரத்தை பறிப்பதாக உள்ளது' என்று வாதாடி இதை சாதித்தனர்.

சாராய வியாபாரிகளிடம் வசூலித்த பணத்தில் மிகப் பெரும் கட்சி கட்டிடம் கட்டிக் கொண்டு, பஞ்சாயத்துக்கு சொந்தமான 'டி.வி'யை அங்கு வைத்துக் கொண்டு கூத்தடிப்பது, பஞ்சாயத்து அலுவலகத்தை ஊரின் மத்தியில் கட்டாமல் இவர்கள் பகுதியான 3-வது வார்டில் கட்டி பயன் இல்லாதவாறு முடக்கி வைத்திருப்பது, ஆகியவை இவர்கள் செய்த அக்கிரமங்களில் ஒரு சில! தண்ணீர் தொட்டியைக் கூட 3-வது வார்டிலேயே கட்டி அதன் கீழ் அறையை கட்சி கிளை சங்கமாக்கி விட்டார்கள்.

பஞ்சாயத்து துணைத் தலைவர் வி.கே. செல்லக்குட்டி, விளாங்குறிச்சி ஞான மடாலயத்தையும், அறவான் கோவில் திருவிழாவையும் குட்டி சுவராக்கியவர். கிடைத்ததை சுருட்டிக் கொண்டு அவற்றை நாசப்படுத்தியவர். பஞ்சாயத்து தலைவர் சுந்தரசாமியின் மனைவியோ அரிசனங்களின் 'ரேசன்' கார்டுகளை வட்டிக்கு அடமானம் பிடித்து, அதில் வாங்கிய 'ரேஷன்' பொருட்களை அவர்களுக்கே அதிக விலைக்கு விற்கும் சமூக தொண்டர்! மக்கள், இந்த அதிகார வெறியர்களிடம் மாட்டிக் கொண்டு இப்போது குடிக்கவும் நீரின்றி தவிக்கிறார்கள். கடுகளவு பஞ்சாயத்து அதிகாரத்திற்கே இப்படி தினவெடுத்து திரியும் இக்கூட்டம், முழு நாடே கையில் கிடைத்தால்.... என்ன செய்யும்?

தகவல்: தொழிலாளர் பிரச்சாரக் குழு
கோவை.



படிப்பகம்

www.padippakam.com

## அதிர்ச்சி!

# போதை மருந்து கடத்தி இஸ்ரேலிடம் ராணுவ பயிற்சி!


## புலிகளின் சீரழிவு பற்றி புதிய ஆதாரங்கள்

ஈழத்தை புலிகளின் பிடியிலிருந்து கைப்பற்றுவது, இலங்கையின் காலனியாக்குவது என்ற திட்டத்துடன் சிங்கள இனவெறி அரசு முப்படைகளையும் குவித்து உக்கிரமாகத் தாக்குதலைத் தொடுத்து வருகிறது. தொடர்ந்து ஊரடங்கு உத்திரவு போட்டும், அப்பாவி சிவிலியன்களைக் கொன்று குவித்து பயபீதியூட்டியும் அத்தியாவசியப் பொருட்கள் கூட கிடைக்காதபடி பட்டினி போட்டும் ஈழத் தமிழ் மக்களை அகதிகளாக விரட்டியடித்தும், புதிய சிங்கள குடியிருப்புகளை நிறுவியும் தமிழினத்தை அடிமைப்படுத்தி அடக்கும் முயற்சியில் தீவிரமாக இறங்கியுள்ளது.

'இந்நிலையில் சிங்கள இனவெறிக்கு எதிராக உறுதியாகப் போரிட்டு வரும் ஒரே அமைப்பாக புலிகள் மட்டுமே உள்ளனர். 107 நாட்கள் தொடர்ந்த யாழ் கோட்டைப் போரில் சிங்கள முப்படைகளின் தாக்குதலை முறியடித்து ஒரு புதிய திருப்பத்தைச் சாதித்துள்ளனர். எனவே சிங்கள இனவெறியை எதிர்க்கும் ஒவ்வொருவரும், ஈழ விடுதலையை நேசிக்கும் ஒவ்வொருவரும் புலிகளை ஆதரிப்பதுதான் சரியானது; அவர்களது குறைகளைப் பற்றியோ, ஜனநாயக மறுப்புச் செயல்களைப் பற்றியோ விமர்சிப்பதற்கு நேரம் இதுவல்ல; அவ்வாறு செய்வது ஈழ விடுதலை இயக்கத்தைப் பலவீனப்படுத்துவது மட்டுமல்ல; அதற்கு எதிரானதாகும்' என்பதாக தமிழகத்திலுள்ள புலிகளின் துதிபாடிகளும் இனவாதி, பிழைப்புவாதிகளும் நிலைப்பாடு கொண்டுள்ளனர்.

சில மார்க்சிய - லெனினிய குழுக்கள் கூட இதே நிலைப்பாட்டைக் கொண்டுள்ளன. களத்தில் நின்று வீரத்துடன் போரிட்டு வரும் புலிகளைப் பற்றியோ, இதர போராளி குழுக்கள் மீது அது நடத்திவரும் தாக்குதலைப் பற்றியோ இந்நேரத்தில் விமர்சிக்கக் கூடாது; புலிகளைப் பற்றி மட்டுமல்ல; பொதுவாக புரட்சிகர மா-லெ குழுக்களைப் பற்றி 'விமர்சிப்பது கூட புரட்சிகர இயக்கத்தை பலவீனப்படுத்துவதாகும்; எதிரிக்கு சாதகமானதாகும் என்று கருதுகின்றனர். இன்னும் சொல்லப் போனால் புலிகளை முழுக்க முழுக்க ஆதரிக்க வேண்டும் என்ற நிலையிலிருந்து புலிகள் இதர சிறிய போராளி குழுக்களுக்குத் தடைவிதித்து தாக்குவதைக் கூட துரோகிகளுக்கு எதிரான செயல் என்பதாக புலிகளின் துதிபாடிகளும், இனவாத, பிழைப்புவாதிகளும் நியாயப்படுத்தி வருகின்றனர். புலிகளை விமர்சிப்போரை ஈழ விடுதலைக்கே எதிரானவர்களாக முத்திரை குத்தவும் அவர்கள் தயங்குவதில்லை.

ஆயுதமேந்தி களத்தில் நிற்கு புலிகள் இயக்கப் போராளி; யாரிடமிருந்து பெற்ற ஆயுதங்கள்?



ஆனால், புலிகளை விமர்சிப்பதோ, புலிகள் உள்ளிட்டு ஈழ விடுதலைப் போராளி அமைப்புகளின் சீரழிவுகளை, துரோகத்தனங்களை அம்பலப்படுத்துவதோ ஈழ விடுதலைக்கு எதிரானதல்ல; ஈழ விடுதலைப் போரை பலவீனப்படுத்துவதும் அல்ல. போராளி குழுக்களின் நடத்தைகளை நேர்மறையில் விமர்சிப்பதன் மூலம் ஈழ விடுதலை இயக்கம் எதிர்மறையில் படிப்பினை பெற முடியும்; குறைகளைக் களைந்து கொண்டு மேலும் முன்னேற முடியும் என்பதாலேயே புரட்சிகர இயக்கத்தின் கடமையாக கருதி நாம் தொடர்ந்து அவ்வாறு செய்து வருகிறோம்.

குறிப்பாக, ஈழ விடுதலை இயக்கத்தை இந்திய உளவுப் படை 'ரா' சீர்குலைக்க முயன்று, சில போராளிக் குழுக்களை ஜீரணித்து விட்டபோது, முதன்முதலாக நாம் மட்டுமே எச்சரித்து விமர்சித்தோம். பின்னர் 'ரா'வின் சதிகள் ஒவ்வொன்றாக அம்பலமான பிறகு, ஈழ விடுதலை ஆதரவு இயக்கத்தினர் பலர் நமது கருத்தை சரியானதென வரவேற்றனர். புலிகளின் பாசிசப் போக்குகளையும், அதன் கொலைகளையும் நாம் அம்பலப்படுத்தி எழுதியபோது, இது துக்ளக் "சோ" போன்ற ஈழ விடுதலை எதிர்ப்பு நிலைப்பாடாகும் என்று சிலர் விமர்சித்தனர். ஆனால் புலிகளின் நடவடிக்கைகளைக் காட்டி ஈழ விடுதலையையே எதிர்க்கும் "சோ" முதலானவர்களை நாம் அம்பலப்படுத்தியதோடு, இந்திய ஆக்கிரமிப்பு ராணுவத்திற்கெதிராக ஈழ மக்களுடன் இணைந்து போரிட்டபோது புலிகளை ஆதரிக்கவே செய்தோம். அதேபோல சென்னையில் ஈ.பி.ஆர்.எல்.எப் துரோகக் கும்பல் புலிகளால் அழித்தொழிக்கப் பட்டபோது, ஈழ விடுதலை ஆதரவு இயக்கத்தினர் கூட அதை நியாயப்படுத்த தயங்கி, 'புலிகள் செய்திருக்க மாட்டார்கள்; இது பத்மநாபா குழுவுக்குள்ளேயே நடந்த சண்டை' என்று சப்பைகட்டுப் போடத்தான் செய்தார்கள். அப்போது தமிழகத்தில் புலிகளின் செயலுக்கு எதிரான கருத்து நிலவியபோதிலும் கூட நாம் துணிவுடன், 'துரோகத்தின் விலை - சாவு' என்று அட்டைப்படக் கட்டுரை எழுதினோம்.

இவ்வாறு ஒவ்வொரு விவகாரத்திலும் பருண்மையாக ஆய்வு செய்து எது சரியானதோ, எது ஈழ விடுதலைக்குச் சாதகமானதோ அதை ஆதரிப்பதையும் அதே சமயம் எதிரானவற்றை சமரசமின்றி அம்பலப்



படிப்பகம்

www.padippakam.com

படுத்துவதையும் புரட்சிகர இயக்கத்தின் கடமையாகக் கருதி தொடர்ந்து செய்து வருகிறோம்.

இப்போது ஈழ விடுதலை இயக்கமே சிதைந்து போகும் அளவுக்கு அதிர்ச்சி ஊட்டக்கூடிய செய்திகள் ஆதாரங்களுடன் வெளியாகி உள்ளது. 1984 முதலாக புலிகள் போதை மருந்து கடத்தலில் ஈடுபட்டு வந்துள்ளனர்; இதில் கிடைத்த பணத்தைக் கொண்டு, இஸ்ரேலிய ஜியோனிச இன வெறி பிடித்த கொலைகார-மொசாத் படையிடம் பயிற்சியும் ஆயுதங்களும் பெற்றுள்ளனர் என்ற கசப்பான உண்மை இப்போது வெளிவந்துள்ளது. இதுநாள்வரை வதந்தியாகவும், ஊகங்களாகவும் இருந்து வந்த செய்தி இப்போது உண்மையென நிருபணமாகி உள்ளது. ஈழ விடுதலை இயக்கத்திற்குப் பேரழிவைத் தரக்கூடியது என்பதால் இச்சீரழிவை அம்பலப்படுத்தி எச்சரிப்பது நமது கடமையாக உள்ளது.

☆ ☆ ☆

விக்டர் ஆஸ்ட்ரோவ்ஸ்கி என்பவன், அமெரிக்காவின் பேட்டை ரெளடியாகச் செயல்பட்டு வரும் இஸ்ரேலிய மொசாத் படையின் முன்னாள் உளவுப்படை அதிகாரி. இவன் எழுதியுள்ள ''மோசடிகளின் ஊடே'' (By way of Deception) என்ற நூலில், தான் முன்பு மொசாத் படையில் செயல்பட்டபோது புலிகளுக்குப் பயிற்சியும் ஆயுதங்களும் அளித்ததாகக் குறிப்பிட்டுள்ளான். இவன் இஸ்ரேலுக்கு எதிராகச் செயல்பட்டதாகக் குற்றம் சாட்டப்பட்டதால், இஸ்ரேலிய கொலைகாரர்களிடமிருந்து தப்பிக்க கனடாவில் தஞ்சம் புகுந்து இப்போது தலைமறைவாக உள்ளான்.

''இஸ்ரேலில் கபார் சிர்கின் தளத்தில் புலிகளுக்குப் பயிற்சி தரப்பட்டது. அவர்கள் சுமார் 28 பேரைக் கொண்ட குழுக்களாக இருந்தனர். புலிகள் கையில் ஏராளமாகப் பணம் இருந்ததால் அவர்கள் நினைத்த எதையும் வாங்கக் கூடிய நிலையில் இருந்தனர். இலங்கை அரச படையினருக்கு பெருமளவு சேதத்தை விளைவித்த கண்ணி வெடிகள் அனைத்தும் மொசாத் படையினரிடமிருந்து புலிகள் வாங்கியவைதான். இது தவிர அவர்கள் பலதரப்பட்ட நவீன ஆயுதங்களைப் பெருமளவில் கொள்முதல் செய்தனர்'' என்று அந்நூலில் குறிப்பிட்டுள்ளான்.

இதில் வேடிக்கை என்னவென்றால் மொசாத் கும்பலிடம் புலிகள் பயிற்சி பெற்ற அதே நேரத்தில்தான் சிங்கள படைகளும் பயிற்சி பெற்றன. ''கபார் சிர்கின் தளம் மிகப் பெரியதாக இருந்ததால் அவர்கள் ஒருவருக்கொருவர் அடையாளம் காண முடியவில்லை. பின்னர் சிங்களப் படைகளை வேறிடத்துக்கு கொண்டு சென்று பயங்கரவாத எதிர்ப்புப் பயிற்சிகள் அளித்தோம். அதே நேரத்தில் புலிகளுக்கு அரச படைகளை முறியடிப்பது பற்றிய உத்திகளை விளக்கி பயிற்சி அளித்தோம். இவ்வாறு ஒருவருக்குத் தெரியாமல் மற்றவருக்குப் பயிற்சி அளித்தது, அரசியல் இரட்டை வேடம். 'இவர்களை சண்டையிடுவதற்கு ஏன் இலங்கைக்கு அனுப்ப வேண்டும்? இங்குள்ள மைதானம் ஒன்றில் இவர்களை மோதவிட்டால் அநியாயமாக பொதுமக்கள் உயிரிழப்பதைத் தடுக்கலாமே!' என்று மொசாத் படையினர் தமக்குள் நகைச்சுவையாகப் பேசிக் கொள்வார்கள்'' என்று அந்நூலில் விவரித்துள்ளான் (பக். 127 - 131).



பாலசிங்கத்தின் ட்ராட்ஸ்கியவாத சித்தாந்த தலைமையும் தனிமனித சர்வாதிகார வெறிபிடித்த பிரபாகரனது இராணுவத் தலைமையும் சேர்ந்து புலிகள் இயக்கத்தை சமூக பாசிஸ்டுகளின் அமைப்பாக சீரழித்து விட்டது.



இதை உறுதிப்படுத்தி கடந்த அக்டோபர் மாதத்தில் ''அப்சர்வர்'' பத்திரிக்கையின் நியூயார்க் நிருபருக்கு பேட்டியும் அளித்துள்ளான். இச்செய்தியை அமெரிக்காவிலிருந்து வெளிவரும் ''நியூயார்க் டைம்ஸ்'' ஏடும் உறுதிப் படுத்தியுள்ளது.

இவையெல்லாம் ஒரு ரகசிய உளவாளியின் கட்டுக்கதை; இவற்றை உண்மை என்று எப்படி நம்ப முடியும் என்று சிலபேர் வாதிடலாம். ஆனால், இந்திய உளவுப் படை ''ரா''விடம் ரகசியமாகப் பயிற்சி பெற்ற புலிகள், பாசிச ராஜீவ் கும்பலிடம் மாகாண ஆட்சிக்காக 100 கோடி ரூபாய்க்கு ரகசியமாக பேரம் நடத்திய புலிகள், இந்திய ஆக்கிரமிப்புப் படை வெளியேறியபோது சிங்கள இனவெறியன் பிரேம்தாசாவிடம் ரகசிய பேச்சுவார்த்தை நடத்திய புலிகள் இதையும் செய்வார்கள்; இன்னமும் செய்வார்கள். மேலும், இச்செய்திகள் இந்திய, இலங்கை மற்றும் மேலை நாட்டுப் பத்திரிக்கைகளிலும், ஈழத் தமிழர்களே நடத்தும் கனடா நாட்டு ''தாயகம்'' மற்றும் பிரிட்டனின் ''தமிழ் டைம்ஸ்'' ஏடுகளிலும் வெளிவந்து ஒரு மாத காலமான பின்னரும் இன்றுவரை புலிகள் மறுப்பு ஏதும் தெரிவிக்காததிலிருந்து இச் செய்திகள் உண்மை என்று நிருபணமாகிறது.

மேலும், சர்வதேச போதை மருந்து கடத்தல் மா•ஃபியாக்களான கொலம்பியாவின் மெடலின் கும்பலுடன் புலிகள் ரகசிய உறவு வைத்திருந்தனர்; போதை மருந்து கடத்தும் இழிசெயலிலும் இறங்கினர் என்கிற செய்தியும் இப்போது ஆதாரங்களுடன் வெளி வந்துள்ளது.

கொலம்பியாவிலிருந்து அமெரிக்காவுக்கு போதை மருந்து கடத்தும் மெடலின் மா•ஃபியா கும்பலில் பெரும்புள்ளிகளில் ஒருவனான ரோட்ரிக்ஸ் கச்சா என்பவன் ஆசியாவிலும் ஐரோப்பாவிலும் தனது தொழிலை விரிவுபடுத்த விரும்பினான். இஸ்ரேலிய இனவெறியர்களான மொசாத் படையின் மூலம் விடுதலைப் புலிகளுக்குப் பயிற்சி அளிப்பது; பிரதிபலனாக புலிகளைக் கொண்டு ஐரோப்பிய நாடுகளுக்கு கொகைன் போன்ற மருந்தைக் கடத்துவது என்பது அவனது திட்டம். இதில் கிடைக்கும் லாபத்தை விடுதலைப் போருக்கு ஆயுதங்கள் வாங்கப் பயன்படுத்திக் கொள்வது என்ற நோக்கத்துடன் புலிகளும் இதற்கு இணங்கினர். இதை 'வாஷிங்டன் போஸ்ட்' எனும் அமெரிக்கப் பத்திரிக்கையும், கொலம்பியாவின் தலைநகரான பகோடாவிலிருந்து வெளிவரும் 'எல் டியம்போ' எனும் பத்திரிக்கையும் உறுதிப் படுத்தியுள்ளன. இந்த போதை மருந்து கடத்தல் மன்னன் ஆன்டிகுவா எனும் கரீபிய தீவில் பயிற்சி முகாம் அமைத்து கொலம்பிய கடத்தல் காரர்களுக்கும் புலிகளுக்கும் பயிற்சி அளிக்க இஸ்ரேலிய மொசாத் படையின் முன்னாள் ராணுவ அதிகாரியை ஏற்பாடு செய்தான்.

யாயிர் க்லீயின் என்பவன் இஸ்ரேலிய படையில் லெப்டினன்ட் கலோனலாகப் பணியாற்றியவன். இவன் அரசு வேலையாக - ரகசியமாக ஆயுதங்கள் வாங்க கொலம்பியாவுக்கு வந்து கடத்தல்காரர்களுடன் தொடர்பு கொண்டான். ஆனால் ஆயுத பேரம் இருதரப்பினருக்கும் சாதகமாக அமையாததால் கைவிட வேண்டியதாயிற்று.

பின்னர் அவன் ரோட்ரிக்ஸ் கச்சாவின் ஏற்பாட்டின்படி அவனது கடத்தல்காரர்களுக்கு மாக்டெலனா எனுமிடத்தில் ரகசிய பயிற்சி அளித்தான். அதைத் தொடர்ந்து புலிகளுக்கு பயிற்சி தர ஏற்பாடு செய்யப்பட்டது. ஆனால் 1989ல் இந்த ரகசிய பயிற்சி பற்றி செய்திகள் கசியத் தொடங்கியதும் க்லீயின் பிரேசிலுக்குத் தப்பியோடி தலைமறைவாகி விட்டான்.

ஆயுதப் பயிற்சிக்கான ஏற்பாடு தோல்வி அடைந்தாலும் புலிகள் கொலம்பிய போதை மருந்து கடத்தல்காரர்களுடன் தொடர்பு கொண்டு இருந்தனர். வெட்கமின்றி கடத்தல் வேலையிலும் ஈடுபட்டனர். ஜனவரி 90ல் அமெரிக்காவின் நியூ ஓர்லியான்ஸ் துறைமுகத்தில் 20 லட்சம் டாலர் மதிப்புடைய கொகைன் என்ற போதை மருந்து கிரேக்க வணிகக் கப்பலில் கைப்பற்றப்பட்டது. இக் கடத்தலில் சிக்கிய மூவர் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள். இக் கப்பல் கொலம்பியாவிலிருந்து புறப்பட்டதாகும். புலிகளுக்கும் மெடலின் போதை மருந்து மா•ஃபியாக்களுக்கும் உள்ள கள்ள உறவுக்கு இதுவொன்றே போதும். இது தவிர இன்னும் பல கடத்தலில் புலிகள் சிக்கியிருக்கின்றனர்.



படிப்பகம்

www.padippakam.com

# புலிகள் பாணி ஜனநாயகம்

ஈழ விடுதலைக்கும் தமிழினத்துக்கும் தாம் மட்டுமே ஏகபோக குத்தகைக்காரர் என்ற ஆணவத்துடன் செயல்பட்டு வரும் புலிகள், இப்போது ''தமிழ் மக்கள் பாதுகாப்புப் பேரவை'' என்ற புரட்சிகர போராளி அமைப்பின் மீது தடைவிதித்து, அதன் செயல்வீரர்கள் பலரைக் கைது செய்துள்ளனர். இன்னும் பலர் தேடப்பட்டு வருகின்றனர். இதற்கான காரணமும் புலிகளால் தெரிவிக்கப்படவில்லை. தமது சமஸ்தானத்தில் வேறெந்த குழுவும் இயங்கக் கூடாது என்ற சுயநல பாசிச சர்வாதிகாரத்தைத் தவிர வேறெந்த காரணமும் இருக்க முடியாது என்பதுதான் உண்மை.

இலங்கை இனவெறி அரசு தனது முழு பலத்தையும் பிரயோகித்து தமிழ் மக்கள் மீது காட்டுமிராண்டித் தனமான தாக்குதலை நடத்திவரும் இவ்வேளையில், அதற்கான அனைத்து சக்திகளையும் ஐக்கியப்படுத்துவதில் அக்கறை காட்டாமல், ஈழ விடுதலை இயக்கம் பலவீனப்பட்டாலும் பரவாயில்லை என்று சக போராளி குழுக்களையே அடக்கி மேலாதிக்கம் செய்வதையே புலிகள் நோக்கமாகக் கொண்டுள்ளனர். ஈழத்தில் மட்டுமல்ல; கடல் கடந்து மேலை நாடுகளில் வாழும் ஈழத் தமிழர்கள் கூட புலிகளைப் பற்றி முணுமுணுத்தாலே மிரட்டப்படுகின்றனர். தங்களைத் தவிர இதர போராளி குழுக்கள் அனைத்தும் துரோகிகள், விமர்சிப்போர் எதிரிகளின் கைக்கூலிகள் என்று தமது சர்வாதிகாரத்துக்குப் புலிகள் நியாயம் கற்பிக்கவும் தயங்குவதில்லை.

போதை மருந்து கடத்தலிலும், இஸ்ரேலிய மொசாத் படையிடம் பயிற்சியும் ஆயுதங்களும் பெறும் துரோகத்தனத்திலும் இறங்கி ஈழ விடுதலை இயக்கத்தைச் சீர்குலைக்கும் புலிகளுக்கு இதர போராளி அமைப்பினரைத் தண்டிக்க என்ன அருகதை இருக்கிறது?

**போதை மருந்தை ஆயுதமாகக் கொண்டு புரட்சியில் இறங்கும் இளைஞர்களைச் சீரழிக்கும் ஏகாதிபத்தியங்களின் எதிர்ப்புப் புரட்சி வேலைக்கும் புலிகளின் நடவடிக்கைக்கும் என்ன வித்தியாசம் இருக்கிறது?**

இது ஒரு புறமிருக்க, 1984லிருந்தே புலிகள் போதை மருந்து கடத்தலில் ஈடுபட்டு வந்துள்ளனர் என்பதை பிரபல மேலைநாட்டு ஏடுகளும், போதை மருந்து ஒழிப்புத் துறை அதிகாரிகளும் ஆதாரங்களுடன் உறுதிப்படுத்தியுள்ளனர்.

1984 முதலாக ஐரோப்பிய கண்டத்தில் புலிகள் போதை மருந்து கடத்தலில் ஈடுபட்டு வந்துள்ளனர். 1984 - 85-ல் மேற்கு ஐரோப்பிய நாடுகளில் கைது செய்யப்பட்ட ஈழத் தமிழர்களில் 80 சதவீதத்தினர் போதை மருந்து கடத்திய குற்றத்திற்காகவே கைதானார்கள். புலிகள் மட்டுமின்றி டெலோ, ப்ளாட் முதலான இதர போராளி அமைப்புகளைச் சேர்ந்தவர்களும் இதில் அடங்குவர்.

1987ல் லண்டன் ஹீத்ரு விமான நிலையத்தில் சுங்க அதிகாரிகளின் கண்களில் மண்ணைத் தூவிவிட்டு 25,000 பவுண்டு மதிப்புடைய ஹெராயின் போதை மருந்தை புலிகள் சாதுரியமாக கடத்தி வந்தனர். அதைத் தொடர்ந்து போதை மருந்து ஒழிப்புத் துறையினரின் தீவிர வேட்டைக்குப் பிறகு 10 பேர் சிக்கினார்கள். ''அவர்கள் தனிப்பட்ட கடத்தல்காரர்களாகத் தெரியவில்லை. ஏதோ ஒரு குழு - கும்பலினால் இயக்கப்படுகிறார்கள் என்பதை விசாரணையின் மூலம் நாங்கள் உணர முடிந்தது'' என்கிறார் லண்டன் நகர போதை மருந்து ஒழிப்புத் துறையின் தலைவர்.

இதன் பிறகு லண்டன் டைம்ஸ் ஏடு மேலும் சில கசப்பான உண்மைகளை அம்பலப்படுத்தியது. 1987ல் மேற்கு ஜெர்மனியில் உள்ள புலிகள் இயக்கத் தலைவர் சூரிய குமாரன் செல்வதுரை லண்டன் டைம்ஸ் பத்திரிக்கை நிருபர் ஒருவரிடம் 2 கிலோ எடையுள்ள போதை மருந்துக்கு 80,000 பவுண்டு ரொக்கமாகக் கொடுத்தால், பிரிட்டனில் உள்ள தமது ஆட்கள் மூலம் சரக்கை சேர்ப்பிப்பதாக கூறியுள்ளார். அந்நிருபர் இந்த இழிசெயலை விமர்சித்தபோது, ''உங்களைப் போலவே எங்களுக்கும் இது பிடிக்காத விஷயம்தான். நாங்கள் இலாபத்துக்காக செய்யவில்லை; எமது நாட்டு விடுதலைக்காக போரிட ஆயுதங்கள் வாங்குவதற்குப் பணம் தேவையாக உள்ளது'' என்று நியாயவாதங்களை அடுக்கினாராம், செல்வதுரை.

போதை மருந்து கடத்தலுக்குப் புலிகள் இரண்டு வழிகளைத் தேர்வு செய்துள்ளனர். இந்தியாவிலிருந்து அரபு நாடுகளுக்கும் பின்னர் அங்கிருந்து ஐரோப்பிய நாடுகளுக்கும் என்பது ஒருவழி. இந்தியாவிலிருந்து ஆப்பிரிக்க நாடுகளுக்கும் பின்னர் அங்கிருந்து லண்டனுக்கும் என்பது மற்றொரு வழி. இந்த இரண்டாவது வழியிலான கடத்தலுக்கு கென்யா, நைஜீரியா நாட்டு கடத்தல்காரர்களை புலிகள் பயன்படுத்திக் கொண்டனர் என்று சுவிஸ் நாட்டு சுங்கத் துறை அதிகாரிகள் கூறுகின்றனர். முதல் வழியிலான கடத்தல், பம்பாயிலுள்ள தமிழ் பேசும் மாஃபியாக்கள் மூலம் பாகிஸ்தான், ஆப்கான் வழியாக, மத்திய கிழக்கு நாடுகளில் உள்ள மாஃபியாக்களின் உதவியுடன் லண்டனுக்கு 1986 முதலாக கடத்தப்பட்டது என்று பிரிட்டிஷ் சுங்கத்துறை அதிகாரிகள் ஒப்புக்கொள்கின்றனர்.

— இவையெல்லாம் புலிகள் இயக்கம் ஒரு சதிகார, சமூக விரோத சுயநல பாசிச கும்பலாகச் சீரழிந்து விட்டதைத்தான் காட்டுகிறது. அதற்கான அடிப்படையும் புலிகளிடமே உள்ளது. பாலசிங்கத்தின் ட்ராட்ஸ்கியவாத சித்தாந்த தலைமையும், தனிமனித சர்வாதிகார வெறிபிடித்த பிரபாகரனது இராணுவத் தலைமையும் சேர்ந்து தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை ஏற்கனவே சமூக பாசிஸ்டுகளின் அமைப்பாக சீரழித்துவிட்டது. இன்று மேலும் ஒரு படி முன்னேறி போதை மருந்து கடத்தும் கீழ்த்தரமான செயலில் இறங்குமளவுக்கு, மொசாத் படையிடம் ரகசியமாக பயிற்சியும் ஆயுதங்களும் பெறுமளவுக்கு கொண்டுபோய் நிறுத்திவிட்டது.

அதனாலென்ன? நாய் விற்ற காசு குரைக்கவா போகிறது? போதை மருந்து கடத்தி மொசாத் படையிடம் பயிற்சி பெற்றாலும் புலிகள் தமது லட்சியத்தில் உறுதியாக இருக்கிறார்கள் என்று தமிழகத்தில் உள்ள புலிகளின் துதிபாடிகளான இனவாத, பிழைப்புவாதிகள் நியாயப்படுத்தலாம். யாழ் கோட்டைப் போரில் புலிகள் அடைந்த வெற்றியை வீர காவியமாகப் பிரச்சாரம் செய்து அந்த அயோக்கியத் தனங்களை மூடி மறைக்கவும் செய்யலாம். புலிகளின் நடவடிக்கையைக் காட்டி, தமிழகத்தில் சட்டம் - ஒழுங்கு கெட்டுவிட்டது என்று கூப்பாடு போட்டு காங்கிரசு, சந்திசேகர் மற்றும் பார்ப்பன கும்பல்கள் கருணாநிதி ஆட்சியை நெறுக்கிவரும் வேளையில் இப்படி அம்பலப்படுத்தி எழுதுவது தமிழினத் துரோகம், பார்ப்பன சதி என்று அவர்கள் நம்மீது வசை பொழியவும் கூடும்.

ஆனால், கொள்கை, லட்சியம் ஏதுமின்றி யாருடனும் ரகசிய உறவு கொள்ளும் புலிகள் நாளை இந்தியாவிலுள்ள இந்து வெறி பாசிஸ்டுகளான ஆர்.எஸ்.எஸ். பார்ப்பன கும்பலுடன் கூட்டுச் சேரமாட்டார்கள் என்பதற்கு என்ன உத்திரவாதம் இருக்கிறது?

புலிகளுக்கு எதிராக தென்னிலங்கை முஸ்லிம்கள், சிங்கள இனவெறி பிரேமதாசா கும்பலுடன் கூட்டுச் சேர்வதைக் கண்டு, ஆர்.எஸ்.எஸ்.ன் இந்து வெறி பாசிசத்தை ஈழத்தில் கட்டவிழ்த்துவிட்டு சிறுபான்மை முஸ்லிம்களைத் தாக்கமாட்டார்கள் என்பதற்கு என்ன உத்திரவாதம்?

போதை மருந்தையும் ஆபாசப் படங்களையும் ஆயுதமாகக் கொண்டு புரட்சியில் இறங்கும் இளைஞர்களைச் சீரழிப்பதை ஏகாதிபத்தியங்கள் நோக்கமாகக் கொண்டுள்ளன. வட கிழக்கிந்திய சுயநிர்ணய உரிமைப் போரை நசுக்க போதை மருந்தையும் ஆபாசப் படங்களையும்தான் இப்போது இந்திய ஆட்சியாளர்கள் முக்கிய ஆயுதமாக ஏந்தியுள்ளனர். வடகிழக்கிந்திய போராளிகள் போதை மருந்து ஒழிப்பை நோக்கமாகக் கொண்டு இப்போது தீவிரமாகப் போராடி வருகின்றனர். ஏகாதிபத்தியவாதிகளும் இன ஒடுக்குமுறையாளர்களும் செய்யும் எதிர்புரட்சி வேலைக்கும் புலிகளின் நடவடிக்கைக்கும் என்ன வித்தியாசம் இருக்கிறது?

அதைவிட, பாலஸ்தீன விடுதலை இயக்கத்தை ஆதரித்து பளபளப்பான போஸ்டர் ஒட்டும் புலிகள், பாலஸ்தீன மக்களையே ஒடுக்கி நரவேட்டையாடி வரும் இஸ்ரேலிய ஜியோனிச இனவெறியர்களுடன் ரகசியமாக கூடிக் குலாவுவது எவ்வளவு பெரிய அரசியல் மோசடி?

● மனோகரன்



படிப்பகம்

www.padippakam.com

# அவதூறுகளையே விமர்சனங்களாக்கும் வீரமணி கும்பல்

கேடயம், உண்மை ஆகிய ஏடுகள் நடத்தி வந்த வாதப் பிரதிவாதங்களின் ஒரு பகுதியாக மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனின் ஆகியோர் மீது அவதூறுச் சேற்றை வாரி இறைத்திருந்தது (1-15 மே '90) உண்மை ஏடு. அதற்கு (16-30 ஜூன் 90) புதிய ஜனநாயகம் இதழில் மறுப்பு எழுதியிருந்தோம். அம்மறுப்பையே 'பார்ப்பனத்தனமான புதிய ஜனநாயக விமர்சனம்' என்று நம் மீதும் அவதூறு எழுதியது உண்மை ஏடு.

(1-15 மே '90) உண்மை ஏடு எழுதியதை புதிய ஜனநாயகம்தான் திரித்து எழுதிவிட்டதென்று குற்றஞ்சாட்டியது. ஆனால் உண்மை ஏடு முன்பு எழுதியது அவதூறுதானே தவிர, புதிய ஜனநாயகம் ஒன்றும் திரிக்கவில்லை என்பதை மார்க்ஸ், எங்கெல்ஸ் வாழ்க்கை விவகாரங்களில் நாம் நிரூபித்துக் கடந்த இதழில் எழுதினோம். அதன் தொடர்ச்சியாக...

### லெனினுடைய தியாகங்களைக் கேலிசெய்கிறது, உண்மை ஏடு

லெனினுடைய சைபீரியா வாழ்க்கையோடு, இந்திய தேசியப் பார்ப்பன ஆட்சியின் போக்கை ஒப்பிட்டு 'உண்மை' ஏடு எழுதியதாகவும் ''இதனை லெனின் சைபீரிய வாழ்க்கை, 'ஜாலியான வாழ்க்கை', 'ஜாலி தேனிலவு வாழ்க்கை' என்று 'புதிய ஜனநாயகம்' புரிந்து கொண்டால் இது அதன் பார்வையில் உள்ள கோளாறே ஆகும்'' என்று இப்போது (1-30 செப்) உண்மை ஏடு எழுதுகிறது.

ஆனால் புதிய ஜனநாயகம் விமர்சனத்துக்குள்ளாக்கி இருந்த கட்டுரையில் இதே உண்மை ஏடு என்ன எழுதியிருந்தது?

''லெனின் வாழ்க்கையிலேயே மிகவும் கஷ்டமான காலமாக அவர் நகரத்திலிருந்து 'அரசால்' அப்புறப்படுத்தப்பட்டு சைபீரியாவில் வாழ்ந்த வாழ்க்கையைத்தான் குறிப்பிடுவார்கள். லெனின் சைபீரியாவில் எப்படி வாழ்ந்தார்? லெனின் தனியான ஒரு வீட்டில் வாழ்ந்தார். பனிச்சறுக்கு, வேட்டையாடல் போன்ற களியாட்டங்களில் லெனின் தமது ஓய்வு நேரத்தைக் கழித்தார். தேவைப்படும் புத்தகங்களை வரவழைத்துப் படித்தார். அவருடைய நண்பர்கள் அவரைச் சந்திக்க முடிந்தது.

''லெனினின் காதலியான 'குருப்ஸ்கயா' அரசை எதிர்த்து போராட்டத்தில் ஈடுபட்டதால் அவரையும் வேறு நாட்டுக்கு 'நாடு கடத்தல்' செய்தார்கள். ஆனால் லெனின் காதலி என்பதால் வேறு எந்த நாட்டிற்கும் 'நாடு கடத்தாமல்' லெனின் வாழ்ந்த பகுதிக்கு 'நாடு கடத்தி' 'தண்டனை'யை நிறைவேற்றியது ஜார் அரசு. இந்த 'தண்டனை'யின் விளைவாக லெனின் காதல் வலுப்பெற்றது. பின் திருமணமும் அங்கு நடைபெற்றது.''

இதன் பொருள் என்ன? லெனினுடைய வாழ்க்கையிலேயே மிகவும் கஷ்டமான காலமாகக் கூறப்படும் காலத்திலேயே களியாட்டங்கள், தேவையான வசதிகள், காதல் - திருமண வாழ்வு என்றிருந்தார் என்பதாகத்தானே 'உண்மை' ஏடு எழுதியிருந்தது? இது லெனினுடைய சைபீரியா வாழ்க்கை 'ஜாலித் தேனிலவு' 'ஜாலி வாழ்க்கை' என்கிற வக்கிரமான அவதூறுதானே?

ஆகவே 'புதிய ஜனநாயகம்' எதையும் பார்ப்பனத்தனமாக எழுதவுமில்லை; திரிக்கவும் இல்லை.

இப்போது கூட இந்திய தேசியப் பார்ப்பன ஆட்சியோடு ஜார் ஆட்சியை ஒப்பிடுவதாகக் கூறிக்கொண்டு, லெனினிடம் ஜார் அரசு எவ்வளவு நீக்குப்போக்காக நடந்து கொண்டது என்று பட்டியலிடுகிறது 'உண்மை' ஏடு. லெனின் நாடு கடத்தப்பட்டார், தண்டிக்கப்பட்டார் என்பதைக் கூட 'உண்மை' ஏடு ஒப்புக் கொள்ளவில்லை. நாடு கடத்தப்பட்டார் என்பதற்குப் பதில் ''நகரத்தில் இருந்து அப்புறப்படுத்தப்பட்டார்'' என்று முன்பு எழுதியது. அப்போதும், பிறகும் கூட 'நாடு கடத்தல்', 'தண்டனை' என்று சந்தேகத்துக்குரிய மேற்கோள் குறியிட்டுத்தான் எழுதுகிறது. ஆனால், ''உண்மை இதழின் எடுத்துக்காட்டில் தோழர் லெனினை சிறுமைப்படுத்துதல் என்ற நோக்கமே இல்லை என்பதும் தெளிவாகும்'' என்று பச்சையாகப் புளுகுகிறது.

வருடத்தில் பெரும்பான்மையான நாட்கள் பனி மூடிக்கிடக்கும் சைபீரியா சாதாரணமாக மனிதர்கள் வாழ முடியாத கடுங்குளிப் பிரதேசம். எனவேதான் 'ஜார்' மன்னர்களையே கொல்லவும் புரட்சியில் அரசை வீழ்த்தவும் முயன்ற 'டிசம்பரிஸ்டுகள்' போன்ற புரட்சியாளர்களையும் அங்கு நாடு கடத்தித் தண்டித்தது 'ஜார்' அரசு. சமூக - நகர வாழ்வு, அரசியல் ஆகியவற்றில் இருந்து துண்டித்து திறந்தவெளிப் பனிப்பிரதேசச் சிறையில் அடைப்பதுதான் தண்டனையே. அதிலேயே பலர் இறந்தும், பைத்தியம் பிடித்தும் போயுள்ளனர்.

அப்படிப்பட்ட வாழ்க்கை ஒரு தண்டனை அல்ல என்றும் இங்குள்ள நிலப்பிரபுக்களைவிட வசதியான உயர்வான வாழ்க்கை என்றும் 'உண்மை' ஏடு சித்தரிக்கிறது. இதன் மூலம் ஜார் மன்னனைக் கொல்லவும், புரட்சி செய்யவும் முயன்ற - சதிசெய்தவர்களையே சகல வசதிகளுடன் நடத்தியது என்று திரித்து எழுதுகிறது. இது லெனின் உட்பட ருசியப் புரட்சியாளர்கள் அனைவரையும் சிறுமைப்படுத்துவதைத் தவிர வேறென்ன?

''உண்மையில் இன்று தமிழ்நாட்டில் பெரும்பாலான கிராமங்களில் உள்ள 'நிலப்பிரபுக்கள்' வாழமுடியாத உயர் வாழ்க்கையைத்தான் லெனின் சைபீரியாவில் 'தண்டனைக் காலத்தில்' வாழ்ந்தார்'' என்று 'உண்மை' ஏடு எழுதுகிறது. தண்டனைக் காலத்திலேயே இவ்வளவு உயர்வான வாழ்க்கை என்றால் சாதாரணக் காலத்தில் இன்னும் உயர்வான வாழ்க்கை வாழ்ந்திருப்பார் என்கிற பொருளில் எழுதுகிறது.

அப்படி என்ன உயர்வான வாழ்க்கை என்று 'உண்மை' ஆதாரங்கள் கூறுகின்றன?

மூன்றாண்டு சைபீரியா வாழ்க்கையையும் ஜைரினாவா மற்றும் பெத்ரோவா ஆகிய விவசாயிகளின் வீடுகளில் அக்குடும்பங்களோடுதான் லெனின் வாழ்ந்தார். அதை தனிவீட்டில் வாழ்ந்தார் என்று 'உண்மை' ஏடு புளுகுகிறது. பனிமூடிய பிரதேசத்தில் வீட்டுக்கு வெளியே வந்து காலில் கட்டையோ, உருளையோ கட்டிக் கொண்டு சறுக்கி விளையாடினார்; நமது ஊரில் கூட

## தோழர் மாதுவை உடனே விடுதலை செய்!

1.12.'90 அன்று விவசாயிகள் விடுதலை முன்னணி மாநில ஒருங்கிணைப்பாளர் தோழர் மாது ஈரோடு-பவானி போலீசு கும்பலால் கைது செய்யப்பட்டு பவானி போலீசு நிலையத்தில் அடைக்கப்பட்டுள்ளார். வன்முறையைத் தூண்டி தேசவிரோத செயலில் ஈடுபட்டதாக 124ஏ பிரிவின் கீழ் அவரை காவலில் அடைத்துள்ளது, போலீசு. இன்னும் பல வி.வி.மு., ம.க.இ.க. முன்னணி தோழர்களை பொய் குற்றச்சாட்டுகளின் கீழ் கைது செய்ய தேடுதல் வேட்டையில் இறங்கியுள்ளது.

காரணம், செப்டம்பர் மாதம் நடைபெற்ற அம்மாபேட்டை ஒன்றிய வி.வி.மு. வட்டார மாநாட்டில் இத்தோழர்கள், 'வன்முறையைத் தூண்டி தேச விரோத செயலில் ஈடுபடுமாறு மக்களைத் தூண்டினார்களாம். ஆளும் வர்க்கத்தின் தலையில் இடியென இறங்கும் வி.வி.மு. வைக் கண்டு குலை நடுங்கும் அரசு எந்திரத்தின் உதறல் நடவடிக்கை இது! இக்கும்பல் மிக விரைவில் மக்கள் மத்தியில் சூடுபட போவது திண்ணம்!

இவண்

விவசாயிகள் விடுதலை முன்னணி, மக்கள் கலை இலக்கியக் கழகம்

படிப்பகம்

www.padippakam.com

# புதிய ஜனநாயகம் - கேடயம் -உண்மை

# எது நேர்மைக்கு வகைமாதிரி?

மார்க்சிய - லெனினிய ஆசான்கள் மீதான 'உண்மை' ஏட்டின் வக்கிரமான அவதூறுகளுக்கு நாம் பதிலளித்து வருவதானது, "புதிய ஜனநாயகத்தின் வாத நேர்மைக்கு ஒரு வகைமாதிரி" என்று 16-30 நவம்பர் '90 கேடயம் ஏடு எழுதியுள்ளது.

'பு.ஜ.வின் வாத நேர்மைக்கு' ஒரு வகைமாதிரியாக இதை எடுத்துக் கொள்வதை நாம் மகிழ்வோடு வரவேற்கிறோம். நாம் அளிக்கும் சிறு விளக்கத்தையும், சில கேள்விகளையும் படித்துவிட்டு முடிவுக்கு வரும்படி வாசகர்களைக் கோருகிறோம்.

முதலாவதாக, கேடயத்தின் தத்துவார்த்த வாதங்களை மறுத்துப் பேசமுடியாமல் ஊமையாகிப்போன 'உண்மை' பத்திரிக்கை, கேடயத்தின் வாதங்களுக்குப் பதிலளிக்காமலேயே விவாதத்தைத் திசை திருப்பி விடும் முயற்சியில் இறங்கியது என்று கேடயம் எழுதுவது உண்மையா? 1990 ஏப்.1-15, ஏப்.16-30 ஆகிய இரு இதழ்களில் கேடயத்தின் வாதங்களுக்குப் பதிலளித்துவிட்டு மூன்றாவதாக 1-15 மே இதழில் மா-லெ ஆசான்கள் மீதான அவதூறுகளைத் துவங்கியது உண்மை. முதல் இரு பகுதிகளில் 'உண்மை' எழுதியதை கேடயம் ஏற்காமல் தவறானவை என்ற முடிவுக்கு வரலாம்! அது அதன் உரிமை. ஆனால், "மறுத்துப் பேசமுடியாமல் ஊமையாகிப் போனது" "பதிலளிக்காமலேயே திசை திருப்பிவிட்டது" என்று கேடயம் புளுகுகிறதே இது எதன் 'நேர்மைக்கு' வகைமாதிரி?

இதிலே வேடிக்கை என்னவென்றால் 'உண்மை' முன்வைத்த கேள்விகளுக்கு 'கேடயம்' பதில் சொல்லவில்லை என்பதை 'உண்மை' சுட்டிக்காட்டி உள்ளது. 'கேடயம்' பதில் தரமுடியாத 'உண்மை'யின் கேள்விகளுக்கு 'இதோ! நாங்கள் கொள்கை ரீதியிலான விளக்கங்களைத் தருகிறோம்' என்று சொல்லி, 'புதிய ஜனநாயகம்' முன் வந்திருந்தால் அதன் அறிவு நாணயத்தைப் பாராட்டலாம்" என்று 'உண்மை' ஏடு எழுதுகிறது.

'உண்மை', 'கேடயம்' இரண்டுமே தமது வாதங்கள் கேள்விகளுக்கு பதில் சொல்லவில்லை என்று ஒருவரை ஒருவர் குற்றஞ்சாட்டிக் கொண்டு அவற்றின் வேலையை 'புதிய ஜனநாயகம்' செய்ய வேண்டும் என்று எழுதியுள்ளன.

இரண்டாவதாக, "பு.ஜ.வுக்கு தத்துவார்த்த நேர்மை இருந்திருந்தால் 'உண்மை' பத்திரிக்கையின் திசை திருப்பும் முயற்சியைக் கண்டித்து மார்க்சியம் - பெரியாரியம் பற்றிக் கேடயம் முன்வைத்துள்ள ஆழமான வாதங்களுக்கு பதிலளிக்குமாறு அதனை நிர்பந்தித்திருக்க வேண்டும்; அல்லது கேடயத்தின் வாதங்கள் தவறானவை; பெரியாரியமே இந்தியாவுக்கான மார்க்சியம் என்று பிரகடனப்படுத்தி இருக்க வேண்டும்".

கேடயத்தின் வாதங்களுக்கு பதிலளிக்குமாறு நிர்பந்தித்திருக்க வேண்டியது பு.ஜ.வின் வேலையுமல்ல, கடமையுமல்ல; அதற்கு அவசியமுமில்லை. பு.ஜ.விடம் மட்டுமல்ல; வேறு யாரிடமும் அவ்வாறு கோருவதற்கு கேடயத்திற்குத் தார்மீக ரீதியிலான, தர்க்க ரீதியிலான உரிமையுமில்லை. ஏனெனில், 1990 ஏப்.1-15, ஏப்.16-30 ஆகிய இரு இதழ்களில் கேடயத்தின் வாதங்களுக்குப் பதிலளித்து விட்டுத்தான் மூன்றாவது பகுதியாக மா-லெ ஆசான்கள் மீதான அவதூறுகளை 'உண்மை' ஏடு எழுதியது. 'உண்மை'யுடன் விவாதத்தை தொடர வக்கற்றுப் போய் கேடயம் ஊமையாகிவிட்ட நிலையில் யார்தான் நேர்மையற்ற முறையில் 'உண்மை' ஏட்டைப் பதிலளிக்க நிர்பந்திக்க முடியும்?

ஆனால், அவ்வாறு "நிர்ப்பந்தித்திருக்க வேண்டும்; அல்லது கேடயத்தின் வாதங்கள் தவறானவை; பெரியாரியமே இந்தியாவுக்கான மார்க்சியம் என்று பிரகடனப் படுத்தியிருக்க வேண்டும்" - இதுதான் தத்துவார்த்த நேர்மை என்கிறது கேடயம். ஒன்று கேடயத்தின் வாதங்களுக்கு நாம் வக்காலத்து வாங்க வேண்டும்; அல்லது அவை தவறானவை என்றால் 'உண்மை'யின் வாதங்களை ஏற்பதாகப் பிரகடனப் படுத்த வேண்டும். இதுதான் தத்துவார்த்த நேர்மையா? இரண்டுமே தவறானவை என்று முடிவு செய்வதற்கும் மூன்றாவதாக நிலைப்பாடுகள் எடுப்பதற்கும் நமக்கு உரிமை இல்லையா? இவ்வாறு செய்வது தத்துவார்த்த நேர்மையாகாதா? தலைகனத்துத் தப்பட்டை தட்டுவதாக பு.ஜ.வை ஏசும் கேடயம், ஒன்று தனது நிலைப்பாடுகளை ஏற்க வேண்டும் அல்லது நாம் ஏற்காத இன்னாரு நிலைப்பாட்டை சரியானதென்று பிரகடனப் படுத்த வேண்டும் என்று 'நேர்மைக்கு' வகைமாதிரி காட்டுகிறது.

மூன்றாவதாக, "பு.ஜ.வோ 'இந்த விவாதத்துக்குள் புகுந்து அலசுவது இப்போது எமது நோக்கமல்ல' என்று பொறுப்பின்றி கூறிவிட்டு 'உண்மை'யின் திசை திருப்பும் முயற்சிக்குக் கொம்பு சீவிவிட்டது.

ஏழை விவசாயிகள் மீன் பிடிக்கவும் முயல் வேட்டைக்கும் போவதைப் போல சகதோழனாக விவசாயிகளுடன் போனார்; அதுமட்டுமல்ல; இசை கேட்டார்; சதுரங்கம் விளையாடினார்; எதற்காக — ருசியாவில் முதலாளித்துவத்தின் வளர்ச்சி உட்பட புரட்சிக்கான திட்டம், அமைப்பு முறை உட்பட 30 படைப்புகளை மூன்றாண்டுகளில் எழுதி முடிக்க கடுமையான மூளை உழைப்பிற்கு ஒரு இடை ஓய்வு (RELAXATION)க்காக; ஆனால் இவற்றையே களியாட்டங்கள் என்று 'உண்மை' ஏடு புளுகுகிறது.

ஆனால் இதையே தமிழ்நாட்டில் பெரும்பாலான கிராமங்களில் உள்ள 'நிலப்பிரபுக்கள்' வாழ முடியாத உயர் வாழ்க்கை என்று 'உண்மை' புளுகுகிறது. அதன் மூலம் தனது பகுத்தறிவை இழந்து விட்டதோடு, தமிழக நிலப்பிரபுக்களுக்கு வீரமணி கும்பலுக்குள்ள விசுவாசத்தையும் காட்டி விடுகிறது.

இங்கேயும் நகரத்திலுள்ள சாதாரண தொழிலாளி, நிலப்பிரபுக்களைவிட அதிகமான சில நவீன, அறிவியல் தன்மையுடைய சில வசதிகளைப் பெற முடிகிறது. மாறாகத் தமது பழைமை, பிற்போக்கு, வக்கிரக் கண்ணோட்டம் காரணமாக நிலப்பிரபுக்கள் அவற்றை உயர்வான வாழ்க்கையைக் குறிப்பதாக ஏற்பதில்லை. எண்ணெய் தேய்த்து உடம்பு பிடித்துவிட்டு குளிப்பாட்டிவிட ஆள்; மனைவிக்கு வடம் வடமாகத் தங்க நகைகள் போடுவது, வைப்பாட்டிகள் வைத்துக் கொள்வது, கோவில் விழாக்களில் பரிவட்டம் மரியாதை பெறுவது, அமாவாசை பௌர்ணமிக்கு, 'ரேக்ளா' பந்தயம் விடுவது போன்றவைதான் நிலப்பிரபுக்களால் உயர்வான வாழ்க்கையாகக் கருதப்படுகிறது.

'உண்மை' ஏடு தனது 'பகுத்தறிவு' கண்களை மூடிக் கொண்டு இவற்றைக் காணாது, முதலாளித்துவ வளர்ச்சியும் ஐரோப்பியத் தாக்கத்தையும் கணக்கில் கொள்ளாமல் லெனினைச் சிறுமைப்படுத்த முயன்றுள்ளது.

### இந்திய தேசிய பார்ப்பன ஆட்சியில் கருணாநிதி - எம்.ஜி.ஆர் ஆட்சியும் அடங்குமா?

இங்குள்ள நிலப்பிரபுக்களைவிட உயர்வான வாழ்க்கையை லெனின் சைபீரியத் தண்டனைக் காலத்தில் வாழ்ந்தார் என்று வாதாடுவதற்காக 'உண்மை' ஏடு ஜார் ஆட்சியை வலியப் புகழ்ந்தும் தள்ளியிருக்கிறது.

"இந்திய தேசிய பார்ப்பன ஆட்சியுடன் ஒப்பிடுகையில் 'ஜார்' மன்னனின் ஆட்சி மனிதப் பண்புகளில் மேம்பட்ட ஆட்சியாக இருந்தது" என்று எழுதுகிறது.

"இன்றைய இந்திய தேசிய பார்ப்பன ஆட்சியில் தண்டிக்கப்படும் 'தீவிரவாதி' தண்டிக்கப்பட்ட தன் 'தீவிரவாத' காதலியுடன் ஒரே இடத்தில் 'தண்டனை'க் காலத்தைக் கழிக்கவும் விருப்பமான விளையாட்டுக்களில் (பொழுது போக்கு விளையாட்டுகளில்) ஈடுபடவும், திருமணம் செய்து கொள்ளவும் முடியுமா? லெனின் சைபீரியாவில் வாழ்ந்ததைப் போல் 'இந்திய தேசிய' பார்ப்பன ஆட்சியில் 'தீவிரவாதி', தண்டனை காலத்தில் தனிவீட்டில் வாழவும், விருப்பமான புத்தகங்களை வரவழைத்துப் படிக்கவும் 'பனிச்சறுக்கு, வேட்டையாடல் போன்றவற்றில் ஈடுபட முடியுமா?" என்று 'உண்மை' ஏடு கேட்கிறது.

"இந்திய 'தீவிரவாதிகள்' பெற்ற தண்டனையோடு இதனை ஒப்பிட்டால் 'சார்' ஆட்சி இந்திய தேசிய பார்ப்பன ஆட்சியை விட மேலானது" என்று எழுதுகிறது.



படிப்பகம்

www.padippakam.com

ப்பொழுது பு.ஜ.வும் 'உண்மை' பத்திரிக்கையும் சேர்ந்துகொண்டு, மார்க்சியம் லனினியம் பற்றிய தத்துவார்த்த விவாத்தை தலைவர்களின் தனி வாழ்க்கையைக் காச்சைப் படுத்தும் குழாயடிச் சண்டையாக மாற்றியிருக்கின்றன'' என்று கேடயம் ழுதுகிறது.

'உண்மை'யும் 'கேடயமும்' நடத்தும் விவாதங்களுக்குள் ஏன் நாம் புகுந்து அலசவில்லை என்பதைத்தான் 'உண்மை' ஏடும் கேட்டது! அதற்குச் சொன்ன பதிலையே இப்போதும் சொல்கிறோம். 1984 முதல் புதிய லாச்சாரம், புதிய ஜனநாயகம் ஏடுகளில் ராவிடர் இயக்கத்தின் மீதான நமது விமர்சங்கள், கேள்விகளை எழுதியுள்ளோம். விவாதத்தைத் துவக்கி வைத்த 'விடுதலை' உண்மை'க்காரர்களே தொடர்ந்து பதிலளிக்காமல் ஒதுங்கி விட்டனர். அப்படி இருக்கும் போது கேடயத்தின் நிலைப்பாடுகளுக்கு க்காலத்து வாங்கியோ, எதிர்த்தோ எழுதினால்தான் மார்க்சியம், பெரியாரியம் பற்றிய தத்துவார்த்த விவாதத்தில் ஈடுபட்டதாகும்; இல்லையானால் அறிவு நாணயமற்றது என்று 'உண்மை' ஏடும், திசைதிருப்பும் முயற்சிக்கு கொம்பு சீவிவிடுவதாகும் என்று 'கேடயம்' ஏடும் நம்மீது பாய்வது சரியா?

நான்காவதாக, கேடயத்தின் தத்துவார்த்த வாதங்களுக்குப் பதிலளிக்காமல் திசை திருப்பிவிடும் முயற்சியாக மார்க்சிய ஆசான்களின் தனிவாழ்க்கை பற்றிக் கொச்சைப் படுத்துவதில் 'உண்மை' ஏடுதான் இறங்கியது; பு.ஜ.தான் அதற்குக் கொம்பு சீவிவிட்டது என்றே வாதத்திற்கு வைத்துக் கொள்வோம். திசை திரும்பும் முயற்சியை அம்பலப்படுத்தி, கண்டிப்பதும், 'கேடய'த்தின் 'ஆழமான' வாதங்களுக்கு பதிலளிக்கும்படி 'உண்மை' ஏட்டை நிர்ப்பந்திப்பதும் 'கேடய'த்தின் கடமையல்லவா? திசைதிருப்பும் முயற்சியின் ஒரு அங்கமாக மார்க்சிய ஆசான்கள் மீது வக்கிரமான அவதூறுகளை 'உண்மை' எழுதியுள்ளதே அவற்றை மறுக்க வேண்டியது 'கேடய'த்தின் பொறுப்பல்லவா? அப்படிச் செய்திருந்தால் தலைவர்களின் தனி வாழ்க்கையைக் கொச்சைப் படுத்தும் குழாயடிச் சண்டையாக மாற்றாது, தத்துவார்த்த விவாதத்தை எவ்வாறு நடத்துவது என்பதை கற்றுக் கொண்டிருக்கலாம்!

ஆனால், தலைவர்களின் தனிவாழ்க்கையைக் கொச்சைப் படுத்தும் 'குழாயடிச் சண்டை'யை ரசிப்பதுதான் 'கேடய'த்தின் 'நேர்மைக்கு' வகைமாதிரி போலும்! அதனால்தான் ஆறு மாதங்களாகியும் 'கேடயம்' மூச்சு விடவில்லை! உண்மை என்னவென்றால் பெரியாரைப் பற்றிய பொய்யெழுதி 'குழாயடிச் சண்டை'யைத் துவக்கி வைத்ததே 'கேடயம்'தான்!

ஐந்தாவதாக, ''பெரியாரின் விஞ்ஞான பூர்வமற்ற பாதிவழி சுயமரியாதை, பாதிவழி மனிதநேய தத்துவத்திற்கான காரணம் அவரது பார்ப்பனரல்லாத வர்க்க சார்பே என்று விளக்க வந்த கேடயம், 'அவர் மிகப் பெரிய பார்ப்பனரல்லாத தனவந்தக் குடும்பத்தில் பிறந்தார். மிகப் பெரிய தனவந்தராகவே வாழ்ந்தார்' என்று எழுதியது. பெரியாரின் வர்க்க சார்பு குறித்து அனைவரும் அறிந்த உண்மையை இப்படி கேடயம் எழுதியதைத் திரித்து, 'கேடயம் குறிப்பிட விரும்புவதைப் போல பெரியார் ஆடம்பரமாக வாழவில்லை' என்று எழுதியது பு.ஜ. 'தனவந்தராக' என்ற வார்த்தையை 'ஆடம்பரமாக' என்று திரித்துப் புரட்டிக் கூறுவதன் மூலம் பெரியாரின் வர்க்க சார்பு பற்றிய கருத்தை அவரது வாழ்க்கை நெறிமுறை பற்றிய குற்றச்சாட்டாகக் காட்ட முயன்றது புதிய ஜனநாயகம். பு.ஜ.வின் வாத 'நேர்மைக்கு' ஒரு வகைமாதிரிதான் இவ்விசயம்'' என்று 'கேடயம்' எழுதுகிறது.

பெரியாரது அந்தத் தத்துவத்திற்கான காரணம் அவரது பார்ப்பனரல்லாத வர்க்க சார்பே என்று விளக்க வரும்போதுதான் ''அவர் மிகப்பெரிய தனவந்தராகவே இறுதி வரையில் வாழ்ந்தார்'' என்று 'கேடயம்' எழுதியது என்பதில் கருத்து வேறுபாடில்லை. புதிய ஜனநாயகமே அவ்வாறுதான் எடுத்துச் சொல்லியிருக்கிறது. ஆனால் கேடயம் அவரது சமூக குடும்ப வர்க்கப் பின்னணியை மட்டும் எழுதவில்லை. ''மி[illegible]ரிய தனவந்தராகவே இறுதிவரையில் வ[illegible]ந்தார்'' என்று எழுதுவது அவரது வாழ்க்கை நெறிமுறையைப் பற்றியதுதான். அது அவர் ஆடம்பரமாக வாழ்ந்தார் என்பதை மட்டுமல்ல; தனவந்த வாழ்க்கைக்குரிய வேறுபல மோசமான - ஆதிக்கப் பண்புகளையும் கொண்டிருந்தார் என்கிற அவதூறான குற்றச்சாட்டையும் கூட சுமத்துகிறது.

இவ்வாறு பெரியாரைப் பற்றிய அவதூறான ஒரு குற்றச்சாட்டை எழுதிவிட்டு, மேலும் நியாயப்படுத்த முடியாத நிலையில் அது அவரது வர்க்க சார்பு பற்றிய கருத்துத்தான், அவரது வாழ்க்கை நெறிமுறை பற்றியது அல்லவென்று மழுப்புகிறது. இதன் மூலம் செய்துவிட்ட தவறைத் திருத்திக் கொள்ளாத அற்பவாதக் குணத்தைத்தான் கேடயம் காட்டுகிறது. மார்க்சிய ஆசான்கள் மீது அவதூறுகள் பொழிவதற்கு முகாந்திரத்தை ஏற்படுத்திக் கொடுத்தாலும் சுய கௌரவம் என்கிற அற்பவாதக் கண்ணோட்டத்துடன் செய்துவிட்ட தவறை திருத்திக் கொள்ள மறுக்கிறது. அதற்காக மார்க்சிய ஆசான்கள் அவதூறுகளுக்குள்ளானாலும் கண்டு கொள்ள மறுக்கிறது.

ஆகவே, பு.ஜ.வின் வாத நேர்மைக்கு மட்டுமல்ல, கேடயத்தின் வாத நேர்மைக்கும் இதையே வகைமாதிரியாகக் கொண்டு தீர்மானிக்கும்படி வாசகர்களை, குறிப்பாக 'உண்மை' பத்திரிக்கையுடனான குழாயடிச் சண்டையில் இறக்கிவிட்ட வாசகர்கள், மாற்றுக் குழுத் தோழர்களைக் கோருகிறோம்.

— ஆசிரியர் குழு

தமது குடும்பத்தினரையும் அழைத்துக் கொண்டு கூடி வாழ்வது, சக கைதிகள் - நண்பர்களுடன் பழகுவது; படிக்கவும் வேட்டையாடவும், விளையாடவும் நாடு கடத்தப்பட்ட கைதிகள் அனைவருக்கும் ஜார் அரசின் கீழிருந்தது 'உரிமைகள்'. இந்த உரிமைகளையே தண்டனைக் காலத்திலும் புரட்சிக்கு ஆவணங்கள் எழுதுவது, அமைப்பை நிறுவுவது, மக்களுடன் இணைந்து வாழ்வது - உதவுவது என்று பயனுடைய வகையில் லெனின் மாற்றிக் கொண்டார். காதலை வலுப்படுத்தவும் திருமணம் செய்து கொள்வதும் தான் நோக்கம் என்றில்லாமல் இதற்கு உதவவும் குருப்ஸ்கயாவுடன் சேர்ந்து வாழ்ந்தார்.

ஜார் ஆட்சியில் மேற்கண்ட 'உரிமைகள்' இருந்த போதும் புரட்சிகர அமைப்புகள், இலக்கியங்கள், இயக்கங்கள் தடை செய்யப்பட்டு, புரட்சியாளர்களை வேட்டையாடிக் கொன்றதும் அதிகமாக இருந்தது. மே தினம் நடத்தவும் உரிமையில்லை; மீறிய போது சுட்டுக் கொல்லப்பட்டனர்.

அதைப்போலவே, இந்திய தேசிய பார்ப்பன ஆட்சியின் நெருக்கடி நிலை பாசிசத்திலும், மிசா அரசியல் கைதிகளுக்கு வழமையான சிறை உணவை மறுத்துத் தனியே சமைத்துக் கொள்ளவும், தண்டனைக் கால ஈட்டுத் தொகை பெறவும், படிக்கவும், விளையாடவும் 'உரிமைகள்' இருந்தன. ஆனால் இவையாவும் 'தீவிரவாதி'களுக்கு மறுக்கப்படுவதோடு சிறை, சித்திரவதை, படுகொலைககு ஆளாகிறார்கள்.

ஆகவே, இந்திய தேசிய பார்ப்பன ஆட்சியையும் ஜார் ஆட்சியையும் காலம், இடம் (நாடு) ஆகிய காரணிகளைப் புறக்கணித்துவிட்டு 'உண்மை' ஒப்பிடுவதும் தவறு. இந்திய தேசிய பார்ப்பன ஆட்சி ஜார் ஆட்சியைவிட மேலானது, மனிதப் பண்புகளில் மேம்பட்ட ஆட்சி என்று மார்க்சிய - லெனினியப் புரட்சியாளர்கள் யாரும் கருதவும் இல்லை.

ஆனால் ஜார் ஆட்சியைவிட மோசமான, மனிதப் பண்புகளில் கீழான இந்திய தேசிய பார்ப்பன ஆட்சிக்குத் தலைமையேற்ற நேருவைப் பற்றி, ''புத்தருக்குப் பிறகு மாபெரும் ஞானி'' என்று சித்தரிக்கிறது திராவிட இயக்கம். பார்ப்பன வாரிசும், பாசிஸ்டுமான இந்திராவைப் பற்றி ''இந்தச் சமுதாயத்தை மாற்றவேண்டும் என்பதற்

இந்திய தேசிய பார்ப்பன ஆட்சியின் தீவிரவாதிகள் மீதான கொலை வெறியாட்டத்தை எதிர்த்துப் போராடுவதிலோ, கண்டிப்பதிலோ, திராவிடர் கழகத்தின் பங்கு ஏதாவது இருந்திருக்கிறதா? இல்லை 'விடுதலை', 'உண்மை' ஆகிய அதன் ஏடுகளில் தலையங்கமோ, செய்திகளோ வந்திருக்கிறதா? அவற்றைக் கண்டு கொள்ளாமலிருப்பதன் மூலம் இந்திய தேசியப் பார்ப்பன ஆட்சிக்கு ஒத்துழைப்புத் தருவதுதானே வீரமணி கும்பலின் போக்காக உள்ளது.



படிப்பகம்

www.padippakam.com

காக திருமதி இந்திராகாந்தி அம்மையார். அரசியல் துறையிலே இருப்பது மட்டுமல்ல, அனைத்துத் துறைகளிலும் வரவேண்டும் என்ற உணர்வோடு அறிவியல் மனப்பான்மையை இந்தச் சமுதாயத்திற்கு ஊட்டுவதற்காக இந்நாட்டை ஒரு புதிய நாடாக ஆக்குவதற்காக முழு முயற்சியை செய்திருக்கிறார்கள்'' என்று வீரமணியே எழுதியுள்ளார்.

''நேருவின் மகளே வா! நிலையான ஆட்சி தா!'' என்று 'திராவிட இனத் தலைவர்' கருணாநிதி அழைத்துத் தேர்தல் கூட்டு வைத்து அமைத்ததும் இந்திய தேசிய பார்ப்பன ஆட்சியைத்தானே! இப்படிப் பார்ப்பன ஆட்சிக்கும் அதன் தலைமைக்கும் துதிபாடி உடந்தையாக இருந்துவிட்டு இப்போது அதே இந்திய தேசிய பார்ப்பன ஆட்சி தீவிரவாதிகளுக்கு இழைக்கும் கொடுமைகளைப் பற்றி நீலிக் கண்ணீர் வடிக்கிறார்கள்.

"இந்திய தேசிய பார்ப்பன ஆட்சியில் ''தீவிரவாதிகள்'' என்று கைதானவர்கள் 'மோதலில் சாவு' என்ற பெயரில் சுட்டுக் கொல்லப்பட்ட நிகழ்ச்சிகளும், விசாரணையின்றி சிறையில் அடைக்கப்பட்டுள்ளதையும் கடுஞ்சித்திரவதைகளுக்கு உள்ளானதையும் பற்றிய தகவல்கள் மனித உரிமை அமைப்புகளின் முயற்சிகளால் பத்திரிக்கைகளில் வெளிவந்துள்ளன'' என்று 'உண்மை' ஏடு இப்போது எழுதுகிறது.

உண்மைதான்! இந்திய தேசிய பார்ப்பன ஆட்சியின் இந்தக் கொலை வெறியாட்டத்தை எதிர்த்துப் போராடுவதிலோ, கண்டிப்பதிலோ, திராவிடர் கழகத்தின் பங்கு ஏதாவது இருந்திருக்கிறதா? இல்லை; 'விடுதலை', 'உண்மை' ஆகிய தன் ஏடுகளில் தலையங்கமோ, செய்திகளோ வந்திருக்கிறதா? அவற்றைக் கண்டு கொள்ளாமலிருப்பதன் மூலம் இந்திய தேசியப் பார்ப்பன ஆட்சிக்கு ஒத்துழைப்புத் தருவது தானே வீரமணி கும்பலின் போக்காக உள்ளது.

ஜார் ஆட்சியைவிட மனிதப் பண்புகளில் கீழான இந்த இந்திய தேசிய பார்ப்பன ஆட்சியில் கருணாநிதி, எம்.ஜி.ஆர். ஆட்சிகளும் அடங்குமா, இல்லையா? மோகன்தாஸ் - தேவாரம் கொலைவெறிக் கும்பலை வைத்துக் கொண்டு 30க்கும் மேற்பட்ட 'தீவிரவாதி'களைக் கொன்றது எம்.ஜி.ஆர். ஆட்சி. இதற்காகவே அமைக்கப்பட்டுள்ள 'கியூ' பிரிவு போலீசு படையே கருணாநிதியின் மூளையில் உதித்ததுதான்! அதே கியூ' பிரிவை வைத்துத்தான் ஈழப் போராளிகளையும், ஈழ ஆதரவாளர்களையும் தமிழின தன்னுரிமைக்குப் போராடுபவர்களையும் ஒடுக்குகின்றன எம்.ஜி.ஆர், கருணாநிதி ஆட்சிகள். தோழர் அப்புவைப் பிடித்துக் கொன்றதன் மூலம் 'தீவிரவாதி'களைக் கொல்லும் அக்கிரமத்தைத் தொடங்கி வைத்ததே கருணாநிதி ஆட்சிதான்!

இதையெல்லாம் மறைத்துவிட்டு 'தீவிரவாதி'களுக்காக இப்போது 'உண்மை' ஏடு நீலிக்கண்ணீர் வடிப்பதைக் கண்டு புரட்சியாளர்களும் ஏமாந்துவிட மாட்டார்கள்! இந்திய தேசியப் பார்ப்பன ஆட்சியை எதிர்ப்பதாக வீரமணி கும்பல் சவடால் அடிப்பதைக் கேட்டு உண்மையான பகுத்தறிவுள்ளவர்களும் ஏமாந்துவிட மாட்டார்கள்.

(தொடரும்)

# ஜனநாயக வேடம் கலைந்தது!

ரஷியாவின் அதிபர் கோர்பச்சேவ் கொண்டு வந்த சீர்த்திருத்தங்களைக் காட்டி ஜனநாயகம் மலர்ந்து விட்டதாகத் துதிபாடினார்கள், ரஷிய அடிவருடிகள். முற்போக்கானது என்று நாடகமாடினார்கள் அறிவுஜீவி பண்டிதர்கள். உலகின் மிகச் சிறந்த மனிதர் என்று பாராட்டி கௌரவித்தது ஏகாதிபத்திய உலகம். அத்தனையும் இப்போது கோர்ப்பசேவின் கொள்கையோடு சேர்ந்து புஸ்வாணமாகி விட்டது. ஜனநாயகத் தூதுவனாக சித்தரிக்கப்பட்ட கோர்பி கும்பல், அடுத்தடுத்து அதிகாரங்களைக் குவித்துக் கொண்டு இப்போது சர்வாதிகார சதிராட்டம் போடத் தொடங்கிவிட்டது. தானே உருவாக்கிய ''கிளாஸ்நாஸ்ட்'' எனும் 'ஜனநாயகத்தை'த் திறந்துவிடும் கொள்கையை தானே குழிதோண்டிப் புதைத்துவிட்டது.

ஒருபுறம் உணவுப் பொருட்கள் தட்டுப்பாடு; மறுபுறம் பதுக்கல் - கள்ளச் சந்தை என்று அரசியல், சமூக, பொருளாதாரத் துறையில் கோர்பியின் கொள்கைகளுக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடி; பிரிந்து செல்லும் உரிமை கோரி ருஷ்ய ஒன்றியத்திலுள்ள தேசிய இனங்களின் எழுச்சி; ருஷ்யாவின் உள்ளேயும் வெளியேயும் உள்ள தீவிர முதலாளித்துவ 'சீர்திருத்த' வாதிகளின் கூடிவரும் பலம் — ஆகிய மும்முனைத் தாக்குதல்களினால் கோர்பச்சேவ் கும்பல் விழிபிதுங்கி நிற்கிறது.

எனவே கிளர்ந்தெழும் தேசிய இனங்களை அடக்கி ஒடுக்குவது, முதலாளித்துவ 'சீர்திருத்த' வாதிகளுடன் சமரசம் கொண்டு, ஆட்சியைத் தக்கவைத்துக் கொள்வது என்ற திட்டத்துடன் கோர்பி கும்பல் ரகசிய ஆட்சிக் கவிழ்ப்பில் இறங்கியுள்ளது. ''தேசிய இனங்கள் பிரிந்து செல்ல அனுமதிக்க முடியாது; ரஷிய ஒன்றியம் பிளவுபட்டால் தேசிய இனங்கள் மோதிக் கொண்டு ரத்த ஆறு ஓடும். அதை உடனடியாகத் தடுக்க வேண்டும்'' என்று கூறிக் கொண்டு மேலும் கூடுதலாக அதிகாரங்களை குவித்துக் கொண்டுள்ளார், கோர்பி. மறுபுறம், ''ரஷ்ய பொருளாதாரத்தைக் காப்பாற்ற பெரிஸ்த்ரோய்கா கொள்கையை ஆதரிப்போர் இனியும் தற்காப்பு நிலையில் இருக்க முடியாது; பழமையை தாக்கி அழித்து முன்னேற வேண்டும்'' என்று கூறிக்கொண்டு முதலாளித்துவ சந்தைப் பொருளாதாரத்தை அம்மணமாகத் திறந்துவிட்டு 'சீர்திருத்த' வாதிகளுடன் சமரசம் செய்து கொண்டுள்ளார்.

இதன்படி ரஷியாவில் முதன்முதலாக முதலாளித்துவ பங்குச் சந்தை துவக்கப்பட்டு விட்டது. ரஷியாவின் பெரும் வங்கிகளும் கூட்டுறவு நிறுவனங்களும் சேர்ந்து துவக்கியுள்ள இப்பங்குச் சந்தை நிறுவப்பட்டவுடனேயே முன்னாள் போலீசு கம்யூனிச கருப்புப் பண பேர்வழிகள் போட்டி போட்டுக் கொண்டு பங்குகளை வாங்கியுள்ளனர். வேறு வார்த்தைகளில் சொன்னால் திட்டமிட்ட பொருளாதாரத்துக்குப் பதில் முதலாளித்துவ சந்தை விதிகளின் கொடிய கரங்களில் ரஷ்ய பொருளாதாரம் ஒப்படைக்கப்பட்டு விட்டது.

ரஷிய பொருள்தார நெருக்கடியை தீர்க்க முடியாத கோர்பி, பழியை பிரதமர் ரிஜ்கோவ் மீது சுமத்திவிட்டு முதலாளித்துவ பாதையாளர்களான எல்ஸ்டின் கும்பலின் அச்சுறுத்தலை சமாளிக்க அவர்களுடன் சமரசம் செய்து கொண்டு கூட்டணி அரசாங்கம் நிறுவவும் பேரம் நடத்தியுள்ளார். அதன்படி தனது சகபாடிகளான பிரதமர் ரிஜ்கோவ் உட்பட போலிக் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களை அரசு பொறுப்பிலிருந்து தூக்கியெறிந்துவிட்டு பிரதமர், நிதிமந்திரி, ராணுவ மந்திரி ஆகிய முக்கிய பொறுப்புகளில் எல்ஸ்டின் ஆட்களை நியமிக்கவும் முடிவு செய்துள்ளார்.

சுருக்கமாகச் சொன்னால், மருந்துக்குக் கூட கம்யூனிச வாடையே இல்லாமல் அப்பட்டமான முதலாளித்துவ பொருளாதாரத்தையும் முதலாளித்துவ சர்வாதிகாரத்தையும் கோர்பி கும்பல் நிறுவியுள்ளது. ஆனால் சர்வாதிகாரத்தைக் கொண்டு நெருக்கடிகளை ஒருக்காலும் தீர்க்க முடியாது. அது மேலும் தீவிரமாகி கோர்பி கும்பலையே பதம் பார்க்க க்காத்துக் கொண்டிருக்கிறது.

**வீட்டில் உணவில்லை. காய்ந்த வயல்களில் உருளைக் கிழங்கைத் தோண்டி வேக வைத்து உண்ணும் ரஷிய சிறுவர்கள்.**





படிப்பகம்

www.padippakam.com

# வர்த்தக சூதாடிகள் பாய்ச்சல்! தொழிற்சங்கங்களின் மலட்டுத்தனம்!

3.11.90 முதல் 20 நாட்களாக நடைபெற்ற தொலைபேசி, தந்தி ஊழியர்களின் போராட்டம் முடிந்துவிட்டது. பம்பாய், டில்லி நகரைச் சேர்ந்த ஊழியர்களுக்கு மட்டும் வி.பி.சிங் அரசு கொடுத்த ரூ.100/- இடைக்கால நிவாரணம், நாடு முழுவதிலுமுள்ள அனைத்து ஊழியர்களுக்கும் தரப்பட வேண்டும் என்பதுதான் கோரிக்கை. ஆனால் இந்தக் கோரிக்கை நிறைவேற்றப்படாமலேயே போராட்டத்தை வாபஸ் பெற்றுள்ளது துரோகத் தொழிற்சங்கத் தலைமை.

ஓவர்டைம் வேலைக்கான ஊதியத்தில் 1986-இலேயே கொடுத்திருக்க வேண்டிய உயர்வு, தற்போது 1.2.90-இலிருந்து தரப்பட்டுள்ளது. "10.12.90-க்குள் ஊதிய வேறுபாடுகளைக் களைய முயலப்படும்; தொலை தொடர்புத் துறையை கார்ப்பரேஷன் ஆக்குவது பற்றி விவாதிக்கப்படும்" என்ற அரசின் வாக்குறுதிகளையே தனது மாபெரும் சாதனைகளாகச் சித்தரித்துக் கொள்கின்றன தொழிற்சங்கத் தலைமைகள்.

எந்தவொரு குறிப்பிடத்தக்க பலனும் இல்லாமல் முதுகில் குத்தப்பட்ட தொலைபேசி தொழிலாளர்களின் போராட்டம், ஆரம்ப நாளிலிருந்தே எதிரிகளால் மூர்க்கமாகத் தாக்கப்பட்டது. விரல் நகத்தில் அழுக்குப்படாமல் திண்டில் சாய்ந்து கொண்டு தொலைபேசியை சுழற்றி வர்த்தக சூதாட்டத்தில் ஈடுபடும் கும்பல் திடீரென நாட்டு நலன், மக்கள் நலன் என்று பெருங்கூச்சல் போட்டது. "நோயாளி உறவினர்களைப் பற்றி மருத்துவமனையில் விபரம் அறிய முடியவில்லை! மக்கள், தாய், தகப்பன் இழவு செய்தியைக் கூட அனுப்ப முடியவில்லை!" என்று இக்கும்பல் ஒப்பாரி வைத்தது. உண்மையிலேயே பாதிக்கப்பட்ட மக்களையும் சிந்திக்க விடாமல் உசுப்பிவிட்டது.



தொலைபேசி இக்கும்பலுக்கு இரைபிடிக்கும் தூண்டில்; இது செயலிழந்தவுடன் கை, கால்களை இழந்தது போல் ஊளையிட்டார்கள். கிரிமினல்கள் - குண்டர்களை வாடகைக்கு அமர்த்தி போராடிய தொழிலாளர்களை குடந்தை, திருவாரூர், நாகப்பட்டினம் முதலான பல இடங்களில் தாக்கினார்கள். தொலைபேசித்துறை ஊழியர்களின் வீடுகளுக்கு குடிநீர், மின்சாரம் வழங்குவதை துண்டித்தனர். கடைகளில் உணவுப் பொருட்கள், மளிகை சாமான்கள் தொலைபேசி ஊழியர்களுக்கு விற்பதையும் தடை செய்தனர்.

முதலாளித்துவ பத்திரிக்கைகள் அதிகார வர்க்கத்தைப் போலவே கீழ்த்தரமாக நடந்துக் கொண்டன. "டெலிபோன் ஊழியர்கள் குடியிருப்புகளுக்கு மின் சப்ளை நிறுத்தம், கோவையில் பதிலடி" என்று மகிழ்ச்சியுடன் வர்ணித்தது தினமலர். வர்த்தக சூதாடிகளின் அக்கிரமத்தை - தாக்குதலை, "முற்றுகைப் போராட்டம்" என்று தீட்டி துள்ளிக் குதித்தது தினத்தந்தி. "ஆதரிக்க முடியாத வேலை நிறுத்தம்" என்று தலையங்கம் தீட்டி எஜமானர்களை குஷிப்படுத்தியது, தினமணி.

மறுபுறம் அமைச்சர்களும் அதிகாரிகளும் சின்னவீடு, பெரியவீடு என்று போனில் அரட்டை அடிக்க முடியாமல் குமுறினார்கள்! முதலாளிகளை குசலம் விசாரிக்க முடியாமல் கண்கலங்கினார்கள்! தஞ்சையில் பயணம் செய்த முதல்வர் கருணாநிதி சென்னையில் இருக்கும் இரண்டு மனைவிமார்களோடும் பேச முடியாமல் சித்தம் கலங்கினார்; 'தஞ்சை பகுதியே தீவுபோல் ஆகிவிட்டது' என்று வாடிப்போய் வசனம் பேசினார். இதயத்தை அ.தி.மு.க.விலும், வயிற்றை காங்கிரசிலும் வைத்திருக்கும் வாழப்பாடி "போராட்டம் தொடர்ந்தால் மக்கள் தாக்குவார்கள்" என்று பயம் காட்டினார். 'மானமிகு அய்யா' வீரமணி "போராட்டம் சட்ட விரோதமானது" என்று 'சோ' பாணியில் சட்டம் பேசினார்!

இப்படி ஒரு மிகப் பெரும் எதிர் போராட்ட கும்பல் விடாமல் குரைத்ததிலிருந்தே தொலைபேசி தொழிலாளர்கள் போராட்டம் யாரை பாதித்தது என்பது தெளிவு! மத்தியில் ஆட்சி கவிழ்ந்த சூழ்நிலையில் புதிய அரசு நிலையாக அமையாத நேரத்தில் இப்படி போராடுவது நியாயமா? என்று இக்கும்பல் பசப்பியது. நிலையான அரசு இருந்தால் பிரச்சினையை தீர்க்கும் என்று அல்ல, முழுமூச்சுடன் ஒடுக்குமே என்பதுதான் இவர்களது ஆதங்கம்!

எதிரிகளின் வெளிப்படையான தாக்குதலைவிட மிகவும் அபாயகரமானது, நயவஞ்சகத்தனமானது - தலைமையின் துரோகம். வரலாறு காணாத வகையில் 20 நாட்களாக நடைபெற்ற இந்த வேலை நிறுத்தத்தின் கோரிக்கை, நிரந்தர ஊழியர்களுக்கு 100 ரூபாய் சம்பள உயர்வு என்பது மட்டும்தான். பத்தாண்டுகளுக்கும் மேலாக அன்றாடக் கூலிகளாகவே பணியாற்றி வரும் 80,000 'காசுவல் மஸ்தூர்'கள் நிரந்தரம் செய்யப்பட வேண்டும் என்ற கோரிக்கை கண்டு கொள்ளாமல் விடப்பட்டது ஏன்? துரோகத் தலைமையின் சட்டையைப் பிடித்திழுத்து நிறுத்தி இந்தக் கேள்வியை எழுப்புவது அந்தத் தொழிலாளிகளின் உரிமை. இதை ஆதரிப்பது நிரந்தரத் தொழிலாளரின் கடமை.

**தொலைபேசி ஊழியருக்கெதிராக நடைபெற்றுள்ள தாக்குதல்கள் தற்செயலான நிகழ்ச்சிகளல்ல; தொழிலாளிகளின் வேலை நிறுத்த உரிமையை கேள்விக்குள்ளாக்கும் மிரட்டல்கள் இவை.**

இது உழைக்கும் வர்க்கத்திற்கு விடப்பட்டிருக்கிற சவால்! இன்று போராடிய தொலைபேசி ஊழியர்களை குறிவைத்து தாக்கிய வர்த்தக சூதாடிகள் நாளை போராடும் அனைவரின் மீதும் பாயக் கூடும்! அரசின் அடக்குமுறை, ஓட்டுக் கட்சிகளின் நயவஞ்சகத்தனம், பத்திரிக்கைகளின் பொய் பிரச்சாரம் இவற்றோடு இந்த வன்முறை கும்பலின் - வர்த்தக சூதாடிகளின் - தாக்குதலை எதிர்கொள்ள எதிர்த்தாக்குதல் வியூகம் வகுக்க வேண்டும். இதற்கு துரோக தலைமைகளும், பிழைப்புவாத தொழிற் சங்கங்களும் முகங்கொடுக்காது, முதுகுதான் காட்டும்! இதற்கான தகுதியும், திராணியும் உடைய, புரட்சிகர அமைப்புகளை, தொழிற் சங்கங்களை தட்டியெழுப்புவதும் அதை நோக்கித் திரளுவதுமே போராடும் தொழிலாளர்களின் ஒரே வழியாக இருக்கிறது.

தொலைபேசி ஊழியருக்கெதிராக நடைபெற்றுள்ள தாக்குதல்கள் தற்செயலான நிகழ்ச்சிகளல்ல; தொழிலாளிகளின் வேலை நிறுத்த உரிமையை கேள்விக்குள்ளாக்கும் மிரட்டல்கள் இவை.



படிப்பகம்

www.padippakam.com

# தொடர்கிறது மதக்கலவரம்! படர்கிறது இந்துவெறி பாசிசம்!

"ராமர் கோவில் கட்டும்பணி முடிந்து விடவில்லை; தொடரும். இப்பொழுதுதான் இந்துராஷ்டிரத்திற்கான போர் தொடங்கியிருக்கிறது" என்று ஆர்.எஸ்.எஸ்., பாரதிய ஜனதா கட்சி, விசுவ ஹிந்து பரிஷத், பஜ்ராங் தள் முதலிய மதவெறி அமைப்புகள் அறிவித்துள்ளன. அக்டோபர் 30-ல் அயோத்தியில் உள்ள பாபர் மசூதியை இடித்து ராமர் கோவில் கட்டுவதற்காக 'கர்சேவா இயக்கம் நடத்தினர். அன்று மசூதியின் குவி மாடங்களை சிதைத்து காவிக்கொடி நட்டு வெற்றியும் ஈட்டினர். அதற்குப்பின் அறிவித்த அறிவிப்புதான் இது.

அக்டோபர் 30க்குப்பின் நாடெங்கும் நடந்த கலவரங்களில் மட்டும் இதுவரை 1000க்கும் மேற்பட்டவர்கள் படுகொலை செய்யப்பட்டனர்; எண்ணற்றவர்கள் படுகாயமுற்றனர். ஊரடங்கும், ராணுவ அணிவகுப்பும் இருந்த பொழுதே பல இடங்களில் கலவரங்கள் நடத்தப்பட்டன. வீடுகளும், கடைகளும், வாகனங்களும் எரிக்கப்பட்டன. பல மசூதிகள் தாக்கப்பட்டன; சில தகர்க்கப்பட்டன. அனைத்துக் கலவரங்களுக்கும் மூலக் காரணமாக இருந்தவர்கள் இந்து மதவெறி ஆர்.எஸ்.எஸ். கும்பலே. போலீசும், ராணுவமும் கலவரத்தை தீவிரமாக்கியதில் மதவெறியர்களுக்கு இணையாக பங்கு வகித்தன.

### முஸ்லீம்கள் படுகொலைக்கு அரசும், அரசு எந்திரமும் உடந்தை

உத்திரபிரதேசத்தில் அயோத்தி, பைசாபாத் அலகாபாத், கெசியாபாத், பிஜ்நோர், மீரட், அலிகார், திபை, ஆஷாம்கர் முதலான 26 மாவட்டங்கள் அடங்கிய பகுதிகளுக்கு கலவரம் பரவியது. அக்-30க்குப் பின் 5 நாட்களில் மட்டும் 300க்கும் மேற்பட்டவர்கள் கொல்லப் பட்டனர். ஆயிரக்கணக்கானோர் காயமடைந்தனர் கெசியாபாத்தில் 2 மசூதிகள் குண்டு வைத்து தகர்க்கப்பட்டன. முராத் நகரில் ஒரு மசூதி தரைமட்டமாக்கப் பட்டது. ஹாபூர், பிலாக்வியா முதலான கிராமப் புறங்கள், சிறு நகர்கள் எங்கும் ஆர்.எஸ்.எஸ். கும்பலின் தாக்குதல்கள் தொடர்ந்தன. ஊரடங்கு இல்லாத பகுதிகளிலும் கடைகள் மூடப்பட்டிருந்தன. மக்கள் வெளிவரவே பயந்தனர்.

பிஜ்நோர் நகரில் அக்டோபர் 30ந் தேதி காலையில் இந்த வெறியர்கள், அயோத்தியில் பாபர் மசூதி இடிக்கப்பட்ட செய்தி எட்டியதும் ஆரிய சமாஜ் கோவிலின் முன்பு கூடினர். தமது வெற்றியைக் கொண்டாட உடனே ஒரு ஊர்வலத்தை ஏற்பாடு செய்தனர். மிகத்கான் மற்றும் காசாவான் பகுதிகளில் முஸ்லீம்களை இழிவுபடுத்தி கோஷம் எழுப்பி வெறிக் கூச்சலிட்டதைத் தொடர்ந்து கலவரமாக வெடித்தது. ஒருவரையொருவர் தாக்கிக் கொண்டனர். முஸ்லீம்களின் வீடுகள் தாக்கப்பட்டன; எரிக்கப்பட்டன. உடனே ராணுவம் மற்றும் உ.பி. ஆயுதப்படைப் போலீசு வரவழைக்கப்பட்டு, அவை நடத்திய துப்பாக்கிச் சூட்டில் குறைந்தது 50 பேர் கொல்லப்பட்டனர்.

உ.பி. ஆயுதப்படை போலீசு, இந்து வெறியர்களுடன் சேர்ந்து முஸ்லீம்கள் மீதும், சாதாரண இந்துக்கள் மீதும் தமது தாக்குதலைத் தொடுத்தன. "சோதனை என்ற பேரில் திடீரென என் வீட்டிற்குள் புகுந்து எனது இரு மகன்களையும் காரணமேயில்லாமல் சுட்டுப் போட்டனர்" என்று பத்திரிக்கையாளர்களிடம் கதறியழுதார் அனிஷாபேகம் என்ற தாய். "அக்-31ந் தேதி எனது வீட்டிற்கு வந்து எங்களை தாக்கிவிட்டு எனது 14 வயது மகளை பலவந்தமாக தூக்கிச் சென்றது ஒரு போலீசு கும்பல்" என்கிறார் சப்னம் பிரவீன். இவை பத்திரிக்கைகளில் வெளியானதும் உ.பி. அரசு பத்திரிக்கையாளர்கள் உட்பட எவரையும் பிஜ்நோருக்குள் அனுமதிக்கவில்லை.

மீரட்டில் 5 நாட்களில் 35 பேர் கொல்லப்பட்டனர். மசூதி ஒன்றிலிருந்து வெள்ளிக்கிழமை தொழுகை முடித்து வெளியே வந்தவர்கள் மீது திடீரென பலத்த ஆயுதங்களுடன் லாரியில் வந்திறங்கிய கும்பல் தாக்குதல் தொடுத்து பலரைக் காயப்படுத்தியது. ஊரடங்கு அமுலில் உள்ள போதே முஸ்லீம் வீடுகளில் திடீர் தாக்குதல் நடத்தியது. "வல்லபாய் பட்டேல் மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டிருந்தவர்கள் பலருக்கு ரத்தம் தேவைப்பட்டது. ஆனால் மருத்துவமனையின் ரத்த வங்கியில் ரத்தம் தீர்ந்து விட்டது; ஊரடங்கு அமுலில் இருந்ததால் உறவினர்களும், பிறரும் ரத்த தானம் வழங்க வெளியே வரமுடியாமலும் போய் விட்டதால் பல முஸ்லீம்கள் அவதிப்பட்டனர்" என்கிறார் ஒரு பத்திரிக்கையாளர்.

அலிகாரில் 8க்கும் மேற்பட்டவர்களும், திபை, ஆஷாம்கர் பகுதிகளில் மூவரும் கொல்லப் பட்டனர். பல வீடுகளும், கடைகளும் எரிக்கப்பட்டன. பல பகுதிகளில் போலீசும், ராணுவமும் இந்து வெறியர்கள் சுதந்திரமாக உலாவுவதை வேடிக்கைப் பார்த்து நின்றன.

### பா.ஜ.க. ஆளும் மாநிலங்கள் ஹிட்லரிசத்திற்கு முன்னுதாரணம்

மத்திய பிரதேசத்திலுள்ள இந்தூர் நகரில் நடந்த கலவரத்தில் இதுவரை 20க்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டனர். 250 பேர் காயமடைந்தனர். தசராதினம், ராமஜோதி, விஜய் யாத்திரை, ரதயாத்திரை, பா.ஜ.க.வின் பாரத் பந்த் என ஒவ்வொன்றிற்கும் ஆர்.எஸ்.எஸ். கும்பல் முஸ்லீம்களை இழிவுபடுத்தி வெறிக் கூச்சலிட்டு நடத்திய ஊர்வலத்திற்கும் கூட்டத்திற்கும் 'ம.பி. அரசு அனுமதியளித்து, வேடிக்கைப் பார்த்தது. இது பதற்ற நிலைக்கும், கல்லெறி சம்பவத்திற்கும் வித்திட்டது. அக்டோபர் 30க்குப் பின் ஆர்.எஸ்.எஸ். கும்பல் வெற்றிக் களிப்பில் மேலும் வெறியாட்டம் போடவே இந்தூரில் பெரிய அளவு கலவரமாக வெடித்தது. ஜபல்பூர், குவாலியர், தேவா, மௌ முதலான பல பகுதிகளுக்கு பரவியது.

பிஜ்நோர் கலவரம்: இந்து வெறியர்கள் தாக்கிய பிறகு ரோந்து சுத்தும் போலீசு





படிப்பகம்

www.padippakam.com

ம.பி. போலீசு மற்றும் எல்லை பாதுகாப்பு படையும் முஸ்லீம்கள் மீது அத்துமீறிய தாக்குதல் தொடுத்தன. ஆர்.எஸ்.எஸ். கும்பல் மசூதிகளுக்கும், முஸ்லீம்கள் கடைகளுக்கும், வீடுகளுக்கும் தீ வைத்தது. பல இடங்களில் ஆர்.எஸ்.எஸ். கும்பலுக்கு போலீசே தலைமை கொடுத்து தாக்குதல் நடத்தியது. போலீசு பல முஸ்லீம் வீடுகளில் புகுந்து சூறையாடியது. முஸ்லீம்கள் மட்டுமல்ல சாதாரண இந்துக்கள் வீட்டிலும் புகுந்து சூறையாடியது. கலவரங்களுக்கும் தாக்குதலுக்கும் பக்கபலமாகவும், பின்னணியாகவும் இருந்து பா.ஜ.க. எம்.எல்.ஏ. மற்றும் எம்.பிக்கள் பலர் செயல்பட்டனர். இவை அம்பலமானதும். ம.பி. முதல்வர் சுந்தர்லால் பட்வா "இவையெல்லாம் சில மஃபியாக்களின் செயல்கள்" என புளுகினார்.

ராஜஸ்தானில் ஜெய்ப்பூர் நகரில் அக்-24-ந் தேதி பா.ஜ.க. நடத்திய பாரத் பந்தின் பொழுது நடந்த கலவரத்தில் 100 பேர் கொல்லப் பட்டனர். 300 பேர் காயமடைந்தனர். ரத யாத்திரையின் போது பா.ஜ.க. தலைவர்களும், அமைச்சர்களும் பல பொதுக் கூட்டங்களில் முஸ்லீம்களைத் தாக்கி வெறித்தனமாக பேசியதைத் தொடர்ந்து நகரில் பதற்றநிலை காணப்பட்டது.

பின்னர் ஒரு வீட்டில் இந்துக்களை முஸ்லீம்கள் பூட்டி வைத்துள்ளதாக ஆர்.எஸ்.எஸ். கும்பல் புரளி கிளப்பி விட்டனர். இதைக் காரணமாகக் கொண்டு கோட்வாலி, ராம்கன்ஞ், சோமு, ஜோத்பூர், பியாவார் என பல பகுதிகளில் முஸ்லீம்கள் வீடுகளை ஆர்.எஸ்.எஸ். கும்பல் தாக்கியது. இவ்வளவையும் அரசு நிர்வாகமும் போலீசும் ராணுவமும் வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தன; கலவரத்தில் முஸ்லீம்கள் மீதே அத்துமீறிய தாக்குதல் நடத்தின. கொல்லப்பட்ட முஸ்லீம்களின் சடலத்தை உறவினர்கள் அடையாளம் காணக்கூட யாரையும் அனுமதிக்கவில்லை. சில சடலங்களைப் போலீசு ரகசியமாக மறைத்து விட்டது. அயோத்தி சம்பவத்திற்குப்பின் நான்கு நாட்களில் மட்டும் 52 பேர் கொல்லப் பட்டனர். தொடர்ந்து ஊரடங்கு அமுலில் உள்ளது.

### கிராமப்புறங்கள் வரை பாய்கிறது சூலாயுதம்

குஜராத்தில் அகமதாபாத், பரோடா, பாரோச், போர் பந்தர், பான்ஞ் மஹால், பாலான்பூர், தபோய், கோத்ரா முதலிய பகுதிகளில் நவ-13ந் தேதி வரை நடந்த கலவரங்களில் 70க்கும் மேற்பட்டவர்கள் கொல்லப் பட்டனர். ஜம்மு - தாவி எக்ஸ்பிரஸ்ஸின் மூன்று பெட்டிகள் ஆர்.எஸ்.எஸ். கும்பலால் கொளுத்தப்பட்டன. பான்ஞ் மஹாவில் உள்ள காடாரா கிராமத்தில் 8 முஸ்லீம்களை உயிரோடு கொளுத்தியது கொலைகார ஆர்.எஸ்.எஸ். கும்பல். குடிசைகளும் எரிக்கப்பட்டன. பலர் தீக்காயங்களுடன் உயிர் தப்பினர். அகமதாபாத்தில் முன்னாள் பா.ஜ.க. அமைச்சர் ஒருவர் மதவெறி கும்பலுக்கு தலைமை தாங்கிச் சென்று மசூதி ஒன்றை தாக்கினார். அங்கு ராமர் சிலை இருந்ததாகப் புளுகினார். பரோடா, போர் பந்தர் என பல பகுதிகளில் உள்ள மசூதிகளும் தொடர்ந்து தகர்க்கப்பட்டன. கலவரங்கள் பெரும்பாலானவை கிராமப்புறங்களில் நடந்தன; அதுவும் பா.ஜ.க.வின் சட்டமன்ற பிரதிநிதிகளின் தூண்டுதலிலேயே நடத்தப் பட்டன.



இந்தூர் கலவரத்தில் பாதிக்கப்பட்ட பெண் ஷேநாஸ்,

பீகாரில் நான்கு நாட்களில் 6க்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டனர். பழைய பாட்னா நகரமும் பல கிராமபுறங்களும் கலவரங்களால் மிகவும் பாதிக்கப்பட்டன. ராஞ்சி, கிரிதிஹ் முதலிய பகுதிகளுக்கும் கலவரம் பரவியது. நகரில் பல கட்டிடங்களுக்கும் கிராமத்தில் குடிசைகளுக்கும் இந்த வெறியர்கள் தீ வைத்தனர். எண்ணற்றவர் படுகாயமுற்றனர்.

அஸ்ஸாமின் தெற்கிலுள்ள ஹிலகந்தி பகுதியில் ஆர்.எஸ்.எஸ். கும்பல் நவம்பர் 18ந் தேதி 7 முஸ்லீம் மக்களை கொன்றனர்; 110 பேரை காயப்படுத்தினர். அடுத்த நாளும் பன்ச்கிராம் பகுதியில் 7 பேரை கத்தியால் குத்தியும் வெட்டியும் படுகாயப் படுத்தினர். இன்று கடாகால் மற்றும் எய்னாகால் தேயிலைத் தோட்டங்களுக்கும் கலவரம் பரவியுள்ளது.

திரிபுராவில் நவ-10ந் தேதி தர்மாநகர் பகுதியில் 2 முஸ்லீம்கள் வெட்டிக் கொல்லப் பட்டனர். ஆர்.எஸ்.எஸ். வெறியர்கள் பல குடிசைகளுக்கும் வீடுகளுக்கும் தீ வைத்தனர். இதைத் தொடர்ந்து வடக்கு திரிபுராவிலுள்ள பள்ளிகள் அனைத்தும் 5 நாட்கள் இழுத்து மூடப்பட்டன.

கர்நாடகா விலும், ஆந்திரா விலும் கலவரங்கள் பற்றி படர்ந்தன. பெங்களூரில் 2 நாளில் மட்டும் 5க்கும் மேற்பட்டவர்கள் கொல்லப் பட்டனர். இந்து மதவெறிக் கும்பல் ஒரு மசூதியைத் தாக்கி 13 இடங்களை சேதப்படுத்தினர். தவ-1ந் தேதி மட்டும் ஹைதராபாத், செகந்திராபாத்தில் கொல்லப் பட்டவர்கள் 14 பேர். பல பகுதிகளில் ஊரடங்கு அமுலாக்கப்பட்டது.

### சிறுபான்மை மதவெறிக்கு மூலம், இந்துமதவெறி பாசிசமே!

பஞ்சாப்பில் உள்ள குருத்வாராவில் நவ-13ந் தேதி தனித்தனியே இரண்டு இடங்களில் ஆர்.எஸ்.எஸ். கும்பல் சீக்கியர்களின் குரு கிரந்த் சாகிப்பின் (புனித) நூல்களை கொளுத்தினர். செய்தி பரவியதும் பல பகுதிகளில் சீக்கியர்கள் வெகுண்டெழுந்து கலவரத்தில் குதித்தனர். தொலைகாட்சி நிலையத்திற்கு வெளியே நின்ற வாகனங்களை கொளுத்தினர். ஆர்.எஸ்.எஸ். கும்பலின் இச்செயலைக் கண்டித்து நாக்கடார் நகரில் உள்ள கல்லூரி மாணவர்கள் வகுப்பை புறக்கணித்து போராடத் தொடங்கினர். ஜலந்தர் நகரத்தில் பல இடங்களில் சீக்கியர்களுக்கும் ஆர்.எஸ்.எஸ். கும்பலுக்கும் இடையே கல்லெறி சம்பவங்களும், கத்திக் குத்துக்களுக்கும் நடந்து நகரமே பதட்ட நிலையில் காணப்பட்டது. இதில் ஏழுபேர் இருதரப்பிலும் படுகாய முற்றனர். சீக்கிய மதத்தலைவர்கள், அமைப்புகள், கட்சிகள் ஒன்று கூடி அவசரக் கூட்டம் நடத்தி புனித நூல் எரித்ததைக் கண்டித்து 15ந் தேதியிலிருந்து 17 வரை பந்த் நடத்த அழைப்பு விடுத்தனர்.

நவ-17ந் தேதி பாரித்கோட் மாவட்டத்திலுள்ள கில்லியன்வாலி கிராமத்தில் ஆர்.எஸ்.எஸ். கும்பல் முகாம் அமைத்து பயிற்சி எடுத்தனர். சீக்கியத் தீவிரவாத அமைப்பைச் சேர்ந்த நால்வர் வாகனத்தில் வந்து எதிர்பாராத தாக்குதல் தொடுத்ததில் 11 ஆர்.எஸ்.எஸ். குண்டர்கள் மாண்டனர்.

இத்தருணத்தைப் பயன்படுத்தி அரசும் தனது அடக்கு முறையை வலுப்படுத்தியது. பல பகுதிகளை கலவரப் பகுதிகளாக அறிவித்து ஊரடங்கு பிறப்பித்து இராணுவ அணிவகுப்பு நடத்தியது. அத்தியாவசியப் பொருட்களுக்குக் கூட எவரும் வெளிவர முடியவில்லை. பல வீடுகளில் புகுந்து சோதனை என்ற பெயரில் அக்கிரமம் பண்ணியது. நவ-17ந் தேதி தோபிமொஹல்லா என்ற இடத்தில் முந்தர்சிங் என்ற 10 வயது சிறுவன் வீட்டைவிட்டு வெளியே வந்தான் என்பதற்காக போலீசு கும்பல் ஒன்று அவனை வட்டமிட்டு பலமாக தாக்கியது. மறுநாள் மருத்துவமனையில் அச்சிறுவன் பரிதாபமாக இறந்து போனான்.

தெற்கு டில்லியிலும் கைலாஷ் காலனியில் இதே நாளில் சீக்கியர்களின் புனித நூ' ஆர்.எஸ்.எஸ். கும்பலால் எரிக்கப்பட்டதைத் தொடர்ந்து நகரமே பதற்ற நிலையில் காணப்பட்டது. அக்-30-ல் அயோத்தி பாபர்மசூதி இடிக்கப்பட்ட பின் வங்கதேசத்தில் பல பகுதிகளில் முஸ்லீம்கள் எதிர்ப்பு தெரிவித்துப் போராடினர். டாக்கா நகரில் வெகுண்டெழுந்த முஸ்லீம் இளைஞர்கள் இந்துக்கள் பலரைத் தாக்கினர்; இந்துக் கோயில்களை தகர்த்தனர். இந்தியாவிலும்

படிப்பகம்

www.padippakam.com

ஃபைசாபாத், மீரட் முதலான பலபகுதிகளில் முஸ்லீம் இளைஞர்கள் பாபர் மசூதி இடிக்கப்பட்டதற்கு பதிலாக இந்துக் கோயில்களை தாக்கிய சம்பவங்களும் நடந்தன. இந்து மதவெறி பாசிசத்தின் தாக்குதலில் இருந்து தம்மை பாதுகாத்துக் கொள்ள தற்காப்பு முயற்சியாகக் கூட சிறுபான்மை மத தீவிரவாதம் தலையெடுக்கின்றன. தவிர்க்க முடியாமல் முஸ்லீம், சீக்கிய இளைஞர்கள் இந்நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள்.

### மதஒற்றுமைக்கும் வேட்டு!

சீக்கியர், முஸ்லீம்கள் மற்றும் தலித்கள் ஐக்கிய முன்னணி என்ற அமைப்பை முப்பிரிவினரின் பல அமைப்புகள் ஒன்றிணைந்து உருவாக்கி மத ஒற்றுமைக்காக செயல்படப் போவதாக அறிவித்தன. டில்லி யில் நவம்பர் 14-ந் தேதி மத ஒற்றுமையை வலியுறுத்தி 'நல்லெண்ண ஊர்வலம்' ஒன்றையும் நடத்தினர். ''தமக்கு எதிராக ஒரு அணியா? கூடாது, முளையிலேயே கிள்ள வேண்டும்'' எனக் கொக்கரித்து ஆர்.எஸ்.எஸ். கும்பல் 'நல்லெண்ண ஊர்வலம்' இட்காக் என்ற இடத்தில் முடிவடைந்த பொழுது கல்லெறிந்ததைத் தொடர்ந்து கலவரம் வெடித்தது.

சதார்பஜார் நவாப் ரோட்டில் வாகனங்களும், வீடுகளும், கடைகளும் கொளுத்தப்பட்டன. திலக் நகர் பள்ளி மாணவர்கள் கலவரத்தில் குதித்து 20 டில்லி பேருந்துகளுக்கு தீ வைத்தனர். ஒரு மசூதியைக் கொளுத்தினர். இக் கலவரத்தில் கத்திக் குத்திலும், துப்பாக்கிச் சூட்டிலும் குறைந்தது 8 பேர் இறந்தனர். 50க்கும் மேற்பட்டோர் காயமுற்றனர். ''புனித நூல்கள் கொளுத்தப் பட்டதும், ஊர்வலத்தில் கல்லெறிந்ததும் பாகிஸ்தானின் ஏஜெண்டுகள் செய்த சதிவேலை'' என்று புளுகியது ஆர்.எஸ்.எஸ். கும்பல். இதை 'நடுநிலை' நாளேடுகள் உட்பட அனைத்து பத்திரிக்கைகளும் கண்காது வைத்து பிரச்சாரம் செய்தன; ஆர்.எஸ்.எஸ். கும்பல்தான் இவற்றிற்கு காரணம் என வாசகர்கள் மறந்தும் சிந்தித்து விடாதபடி எழுதி தனது பார்ப்பன விசுவாசத்தைக் காட்டின.

பம்பாயில் மத ஒற்றுமையை வலியுறுத்தி நேரு மையத்தில் நடத்தப்பட்ட கூட்டம் ஒன்றிலும் பா.ஜ.க. மற்றும் விசுவ இந்து பரிஷத் கும்பல் புகுந்து கூட்டத்தினரை தாக்கி கலைத்தது.

பம்பாய் பள்ளி ஒன்றில் மூன்றாவது படிக்கும் மாணவியின் தந்தை சந்திரசேகர்; அவர் விசுவ இந்து பரிஷத்தின் 'ஸ்டிக்கரை' ஆசிரியர்கள் விற்றதை வாங்க மறுத்து எதிர்த்ததால் தாக்கப்பட்டார். அவரது குடும்பத்தினரும் கொடூரமாக தாக்கப்பட்டனர். இதுவல்லாமல் வட இந்தியாவெங்கும் நிலவிய பதற்ற நிலையை தனக்குச் சாதகமாக பயன்படுத்திக் கொண்டு பம்பாய் ஆக்ரிபாடாவில் சமூக விரோத கும்பல்கள் பொது மக்களை தாக்கி காயப்படுத்தினர்; கடைகளிலும் வீடுகளிலும் புகுந்து சூறையாடினர்.

### எதிர்க்கத் துணியாவிட்டால் நமக்கு விடிவில்லை

போலிக் கம்யூனிஸ்டுகள் உட்பட அனைத்து ஓட்டுக் கட்சியினரும் ஏதோ ஒரு வகையில் இந்துமதவெறிக் கும்பலுக்கு வால் பிடிக்கவே செய்கின்றனர். ஆர்.எஸ்.எஸ். பா.ஜ.க. கும்பலை எதிர்க்க துணியாதது மட்டுமல்லாமல் குற்றம் சாட்டக் கூட தயங்குகின்றனர். அனைத்து ஓட்டுப் பொறுக்கிகளும் தாங்கள் எதிர்க்கட்சியாக உள்ள மாநிலத்தில் நடந்த கலவரங்களுக்கு சட்டம் ஒழுங்கு கெட்டு விட்டதாகவும், கோர்ட் விசாரணை நடத்தும்படியும் ஒப்பாரி வைத்தனர். அவர்களே தாங்கள் ஆளுங்கட்சியாக உள்ள மாநிலத்தில் நடக்கும் கலவரங்களுக்கு சமூக விரோதிகளை குற்றஞ்சாட்டி நிலைமை கட்டுக்குள் இருப்பதாக புளுகினர்; கோர்ட் விசாரணைக்கு உட்படுத்த மறுத்தனர். மத்தியில் ஆட்சி நெருக்கடி வந்ததும் மதக் கலவரப் பிரச்சினையை கிடப்பில் போட்டு விட்டு ஆட்சிமாற்றத்திற்கான பதவிப் பேரங்களில் மும்முரமானார்கள்.

நாட்டில் எத்தனையோ பிரச்சினைகள்; அடிப்படைப் பிரச்சினைகளே தீர்க்கப்படாமல் இருக்கின்றன. வேலையில்லாதோர், வறுமைக் கோட்டிற்கு கீழே வாழ்வோர் எண்ணிக்கை நாளும் அதிகரிக்கின்றன. குந்த குடிசையில்லை; குடிக்க கூழில்லை; சுகமாக வாழ சுகாதாரமில்லை; சாலை - சாக்கடை - மின்சாரம் குடிநீர் வசதியில்லை. விலைவாசி ஏற்றம், கடன்சுமை கழுத்தை நெறிக்கிறது... ஆனால், ராமஜென்ம பூமி பாபர் மசூதி பிரச்சினையை நாட்டின் மையப் பிரச்சினையாக்கி வருகிறார்கள் இந்து வெறியர்கள். அரசியலின் கவனத்தை தம்மை நோக்கி குவியச் செய்து வெற்றி பெற்றிருக்கிறார்கள்; அந்த அளவிற்கு வளர்ந்து நிற்கிறார்கள்.

ஒன்றுமில்லாத, உப்புக்கும் உதவாத விஷயங்களை பெரிதாக்குவதன் மூலம் நாட்டிலுள்ள மக்கள் பிரச்சினைகளை இரண்டாம் நிலைக்குத் தள்ளுவது - மக்களின் கவனத்தை திருப்புவது ஆளும் வர்க்கங்களின் சூழ்ச்சிகளில் ஒன்று. இதை பிசகாமல் செய்து கொடுத்திருக்கிறார்கள் அவர்களின் சேவகர்கள்.

புரட்சிகர சக்திகள் பிளவுபட்டு பலம் குறைந்து இருப்பதும், ஜனநாயக சக்திகள் அணி திரட்டப்படாமல் இருப்பதும் இந்து மதவெறி பாசிசம் வளருவதற்கு சாதகமான சூழ்நிலைகளாக இருக்கின்றன. இந்நிலை தொடருமாயின், இந்தியா இந்து நாடாக அறிவிக்கப்படும்; இந்தி மட்டுமே இங்கு ஆட்சி மொழியாகும்; ஒடுக்கப்பட்டோர் மேலும் ஒடுக்கப்படுவார்கள்; ஜெர்மனியில் யூதர்களை நரவேட்டையாடிய நாஜி இனவெறியன் பாசிச ஹிட்லரைப் போன்று இங்கு பல ஹிட்லர்கள் உருவாகுவார்கள்; சிறுபான்மை மதத்தினர் நர வேட்டையாடப்படுவார்கள்; சிறுபான்மையினர் மட்டுமல்ல, பெரும்பான்மையினரான இந்துக்களில் தாழ்த்தப் பட்டவர்களும் ஒடுக்கப் பட்டவர்களும் மேல்சாதி ஆதிக்க வெறியர்களுக்கு அடிமைகளாக வாழ நேரிடும்; பகுத்தறிவிற்கு பாடை கட்டப்படும்; பிற்போக்கு சனாதன கருத்துக்கள் தலைவிரித்து கொட்டமடிக்கும் - இத்தகையதொரு அபாயநிலை இன்று நம்மை எதிர்கொண்டு நிற்கிறது.

● ராசு

### அறிவிப்பு

**அன்பார்ந்த வாசகத் தோழர்களே,**

தவிர்க்க இயலாத காரணங்களால் இவ்விதழில் கேள்வி - பதில் வெளிவரவில்லை. அடுத்த இதழிலிருந்து தொடர்ந்து வெளிவரும். உங்களது கேள்விகள், ஐயங்களை ஆவலுடன் வரவேற்கிறோம்.

— ஆசிரியர் குழு.

## இந்துவெறி பாசிசத்துக்கு எதிராக....

வரலாற்றுப் புரட்டையும், பொய் புனைச் சுருட்டுகளையுமே / தனது ஆயுதமாகக் கொண்டு அயோத்தியில் ராமர் ஜென்ம பூமியை நிலை நாட்ட அலைகிறது, ஆர்.எஸ்.எஸ்! பாரதீய ஜனதா கட்சி அதன் ஏவல்நாயாக இருந்து சிறுபான்மை முஸ்லீம் மக்களின் ரத்தத்தின் மேல் தனது இந்து மத வெறி பிரச்சாரத்தை நடத்துகிறது.

மதச் சார்பின்மை கொள்கையை வாய்கிழிய பேசும் பிற ஓட்டுக் கட்சிகள், கையைப் பிசைந்து கொண்டிருக்கின்றன அல்லது இந்து மதவெறியர்களின் காலடியில் சங்கமமாகி விடத் துடிக்கின்றன. வரலாறு காணாத இந்த இந்து மதவெறி புகைமூட்டத்தினூடே நம்பிக்கை ஒளியாய் உண்மையான மதச்சார்பின்மைக்கு மக்களை அறைகூவி அழைக்கின்றன, புரட்சிகர அமைப்புகள்! இந்து மதவெறியை தாக்கி வீழ்த்துமாறு நெஞ்சுரத்துடன் மக்களிடம் வீச்சான பிரச்சாரத்தை எடுத்து செல்கின்றன!

**திருப்பத்தூரில்...**

இந்து நாடு, இந்து நலன் என்று சொல்லி இந்து முன்னணி ''பூதகி வருகிறாள்! உழைக்கும் மக்களே உஷார்! உஷார்! ''பாட்டாளி மக்களே ஒன்றிணைவோம்! பாடை கட்டுவோம் மதவெறியர்களுக்கு'' என்று முழக்கங்களுடன் 26.10.90 அன்று திருப்பத்தூர் சந்தை மைதானத்தில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. 500க்கும் மேற்பட்ட மக்கள் கடைசிவரை அக்கறையாக கவனித்தனர்; ஆதரவளித்தனர்.

**திருவையாறு வட்டாரத்தில்...**

6.11.90 அன்று இளங்காடு, மைக்கேல்பட்டி, கண்டமங்கலம், வரகூர், பூதலூர், திருக்காட்டுப்பள்ளி ஆகிய கிராமங்களில் சைக்கிள் பிரச்சாரம் நடைபெற்றது. ஒவ்வொரு இடத்திலும் ஒருமணி நேரத்திற்கும் மேலாக நடந்த பிரச்சாரத்தை சகல மதத்தினரும் ஒன்று கூடி கேட்டனர். நமது கருத்தை ஆமோதித்து பாராட்டினர்.

**தஞ்சையில்...**

29.10.90 அன்று கீழவாசலில் எழுச்சிகரமான முறையில் பொதுக்கூட்டம் நடந்தது. ஆர்.எஸ்.எஸ். பா.ஜ.க. இந்து மதவெறி கும்பல்கள் செய்யும் வரலாற்று புரட்டு அங்குலம் அங்குலமாக தோலுரிக்கப்பட்டது. இந்து மதவெறிக்கு எதிரான உறுதியான போராட்டத்தின் அவசியம் மக்களுக்கு உணர்த்தப்பட்டது.



படிப்பகம்

www.padippakam.com




# ஆறாவது ஆண்டுவிழா!

புரட்சிகர இளம் போராளி புதிய ஜனநாயகம் ஏட்டிற்கு வயது 6! புரட்சிகர நெடும்பயணத்தில் மேலும் தன்னை தகுதியாக்கிக் கொள்ள, அனுபவங்களை தொகுக்க மதுரையில் 17.11.'90-ல் நடந்த ஆறாம் ஆண்டுவிழா பாதை அமைத்தது.

தமிழகத்தின் பல பகுதிகளிலிருந்தும் 600-க்கும் மேற்பட்ட வாசகர்கள் வந்திருந்து தங்கள் குடும்ப நிகழ்ச்சியாக விழாவில் பங்கு கொண்டனர். விழா நடந்த தியாகி பச்சையப்பன் அரங்கம் (சேம்பர் ஆஃப் காமர்ஸ்) போராளிக்கேயுரிய ஆரவாரமற்ற எளிமையோடும் ஆனால் உற்சாகத்தோடும் தனது நடவடிக்கைகளை துவக்கியது.

காலை 10 மணிக்கு தியாகிகளுக்கு வீர வணக்கத்துடன் நிகழ்ச்சிகள் ஆரம்பமானது. புதிய ஜனநாயகம் பத்திரிக்கையின் ஆசிரியர் குழு சார்பாக ஆசிரியர் மதியழகன் விழாவுக்கு வந்திருந்தவர்களை வரவேற்றார். விவசாயிகள் விடுதலை முன்னணியின் மாநில ஒருங்கிணைப்பாளர் தோழர் மாது விழாவுக்கு தல்லைமை வகித்தார்.

ஆசிரியர் தமது உரையில், 'புதிய ஜனநாயகம்' பத்திரிகையின் வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் புரட்சிகர அமைப்புகள் எப்படி கடுமையான சிரமங்களுக்கு மத்தியில் தோள் கொடுக்கின்றன என்று விளக்கினார். ஓட்டுக் கட்சிகள் மற்றும் அவற்றுக்கு வால்பிடிக்கும் முதலாளித்துவ பத்திரிகைகளை தமது தத்துபிள்ளைகளாக ஆளும் கும்பலும் அரசு எந்திரமும் எப்படி பராமரிக்கின்றன என்று கூறினார்.

புதிய ஜனநாயகம் ஆசிரியர் குழுவின் அழைப்பை ஏற்று விழாவில் கலந்து கொண்ட நாக்பூர், அனைத்து மகாராஷ்டிரா தொழிலாளர் சங்கத்தைச் (AMKU) சேர்ந்த தோழர் அனுராதா காந்தி தமது உரையில், முதலாளித்துவ பத்திரிகை சூழலில் புரட்சிகர பத்திரிகையின் அவசியத்தை வலியுறுத்தினார்.

மக்களுக்கு எதிரான கேடான கருத்துக்களை, சாதி, மத, இன, மொழி வெறியையும் அரசு அடக்குமுறை சுரண்டலையும் மக்கள் சிந்தனையில் பாய்ச்சுவதையும், அதற்கு அவர்கள் பலியாகியிருப்பதையும் விவரித்தார். அதற்கெதிராக புரட்சிகர அமைப்புகள் தங்களுக்கான மேடையை உருவாக்கி தாக்குதல் தொடுப்பது புரட்சிகர அரசியல் கடமை என்பதை வலியுறுத்தினார். அந்த வகையில் புதிய ஜனநாயகத்தின் சரியான பணியை பாராட்டுவதாக கூறினார்.

மேலும் வாழ்த்துரை வழங்கிய அரசு பணியாளர் சங்க (பசும்பொன் தேவர் மாவட்டம்) தோழர் சுந்தர பாண்டியன், புதுக்கோட்டை வழக்குரைஞர் தோழர் ஜி.ராமலிங்கம், தஞ்சை பேராசிரியர் இளமுருகு ஆகியோர் புதிய ஜனநாயக பத்திரிகையின் அரசியல் உறுதியையும், அரசியல் ஆய்வு முன்னறிவிப்புகளையும் - ஈழச் செய்திகள் முதல் இன்றைய மதவெறி பாசிச அபாயம் வரை உதாரணங்களுடன் எடுத்துக்காட்டி வாழ்த்திப் பேசினார்கள். தங்களுடைய பணி அரங்குகளில் அரசியலை எடுத்துச் செல்ல, அரசியல் விவாதம் நடத்த புதிய ஜனநாயகம் தங்களுக்கு ஆசிரியனாக இருக்கிறது என்று பெருமையுடன் குறிப்பிட்டார்கள்.

தோழமை அமைப்பைச் சார்ந்த பிரதிநிதிகளான உசிலை வட்ட விவசாயிகள் விடுதலை முன்னணி செயலர் தோழர் கே.பி.இராமசாமி, திருச்சி பகத்சிங் இளைஞர் முன்னணி செயலர் தோழர் ஜெகதீசன், மக்கள் கலை இலக்கியக் கழக தமிழ்நாடு மாநில பொருளாளர் தோழர் காளியப்பன் ஆகியோர் புதிய ஜனநாயகம் உழைக்கும் வர்க்கத்தின் அரசியல் ஆயுதமாக விளங்குவதை அனுபவங்கள், உதாரணங்கள் மூலம் எளிமையாக விளக்கினார்கள். ம.க.இ.க. கலைக்குழு தோழர்கள் புரட்சிகர கலை நிகழ்ச்சிகளை கூட்டத்தினரின் பலத்த கைதட்டலுக்கு நடுவே நடத்தினார்கள்.


கேள்வி - பதில் நிகழ்ச்சியில், பல்வேறு கேள்விகளை வாசகர்கள் கேட்டனர். தற்போது முக்கிய அரசியல் பிரச்சினையாக உருவெடுத்துள்ள மண்டல் கமிஷன் - இட ஒதுக்கீட்டில் புதிய ஜனநாயகத்தின் நிலை பற்றி... புரட்சிகர அமைப்புகளுக்கிடையே ஐக்கியத்தை சாதிப்பதில் புதிய ஜனநாயகத்தின் பங்குபற்றி... காஷ்மீர், பஞ்சாப், வடகிழக்கு மாநிலங்களில் நடக்கும் போராட்டங்களின் வேறுபாடுகளை பற்றி... ஈழ விடுதலை மற்றும் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரன் பற்றி... இன்னும் அரசு எந்திரம், அடக்குமுறை, அரசியல் சட்டம், அரசியல் போராட்டங்கள் பற்றி... ரஷியா, மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் சீரழிவைப் பற்றி... இப்படி பல கேள்விகள்! இரண்டரை மணி நேரம் தொடர்ந்த இந்நிகழ்ச்சியில் ஆசிரியரின் பதில்களுக்கு பிறகு தலைவர் முடிவுரையுடன் அரங்கு நிகழ்ச்சிகள் சர்வதேசிய கீதத்துடன் முடிவடைந்தது.

மாலை பொதுக்கூட்டம், ஏற்பாடுகள் தாமதம் காரணமாக, இரவு 7.45 மணிக்கு ஆரம்பமானது. திடீர் பலத்த மழை காரணமாக கூட்டம் தள்ளி வைக்கப்பட்டு மீண்டும் இரவு 9 மணிக்குத் தொடர்ந்தது. ஆசிரியர் கூட்டத்திற்கு தலைமை தாங்க, தோழர் அனுராதா காந்தி எழுச்சிமிகு உரையாற்றினார்.

நாட்டை ரத்த வெள்ளத்தில் மூழ்கடிக்கும் ஆர்.எஸ்.எஸ்., பாரதீய ஜனதா கட்சி, சிவசேனா ஆகிய இந்து மதவெறி கட்சிகளின் அபாயத்தையும், அவற்றை பின்னாலிருந்து இயக்கும் அம்பானி, கோயாங்கா போன்ற தரகு முதலாளிகளையும் தோலுரித்தார். அரசும் ஆளுங் கும்பல்களும் தாங்களே உருவாக்கிய மதவெறி கலவரங்களை காரணம் காட்டி, கறுப்புச் சட்டங்கள், அரசு பயங்கரவாதம் மூலம் நாட்டையே தனது காலடியில் கொண்டுவரும் சதியில் வெற்றி பெற்று வருவதை கவலையுடன் குறிப்பிட்டார். இன்றைய நிலையில் உழைக்கும் மக்கள் புரட்சிகர அமைப்புக்ளின் கீழ் திரள்வது அவசர அவசியக் கடமை என்று விளக்கினார். ம.க.இ.க. மாநில இணைச் செயலர் தோழர் கதிரவன் தனது உரையில் அயோத்தி ராமஜென்ம பூமியை ஆக்கிரமித்து பாபர் மசூதி கட்டியதாக புரளி கிளப்பி முஸ்லீம்களின் ரத்தம் குடிக்கும் ஆர்.எஸ்.எஸ், பா.ஜ.க. இந்து மதவெறியர்கள் இந்தியாவின் செல்வங்களை, இந்து மக்களின் உழைப்பை அற்ப கூலிகளுக்கு பெருவாரியாக சுரண்டும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தை அடித்து விரட்டுவார்களா? போபால் யூனியன் கார்பைடு போன்ற அதன் பகாசுர நிறுவனங்களை இடித்து தரை மட்டமாக்குவார்களா...? என்று மதவெறியர்களின் அயோக்கியத்தனத்தை அம்பலப்படுத்தினார். பொதுக் கூட்டத்தின் இறுதியாக நடந்த "நக்சல்பாரி இடிமுழக்கம்" என்ற புரட்சிகர கலை நிகழ்ச்சியை மக்கள் வெகுவாக பாராட்டினர். கூட்டத்திற்கு வந்திருந்த அனைத்து உழைக்கும் மக்களுக்கும் புதிய ஜனநாயகத்தின் ஆசிரியர் குழு சார்பாக ஆசிரியர் தனது நன்றியை தெரிவித்தார். இரவு 11 மணியளவில் சர்வதேசீய கீதத்துடன் விழா நிகழ்ச்சிகள் முடிவடைந்தது புதிய ஜனநாயகம் பத்திரிகையின் வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் ரத்த நாளங்களாக இருக்கும் புரட்சிகர தோழமை அமைப்புகளுக்கும் அதன் வாசகர்களுக்கும் ஜனநாயக சக்திகளுக்கும் புதிய ஜனநாயகம் தனது புரட்சிகர கடமையிலிருந்து எந்நாளும் பிறழாது என்று மீண்டும் பிரகடனப்படுத்துவதாக இந்த ஆறாம் ஆண்டுவிழா நிகழ்ச்சிகள் அமைந்திருந்தன.

படிப்பகம்

www.padippakam.com



# சிவந்த கண்கள் கவனிக்கட்டும்

"பெண்களே, அடுப்பங்கரைக்குச் செல்லுங்கள், எல்லாவற்றிலும் ஆண்களோடு போட்டி போடாதீர்கள்!" இப்படி உபதேசிப்பது வருணாசிரமத்தை உயர்த்திப் பிடிக்கும் சங்கராச்சாரி அல்ல. இந்தியாவின் தலைமை நீதிபதியான ரங்கனாத் மிஸ்ரா தான் இப்படி ஆணாதிக்க வெறியைக் கக்கியுள்ளார். கடந்த நவம்பர் 7 அன்று பிரம்ம குமாரிகள் என்ற மகளிர் மத நிறுவனக் கூட்டத்தில் உரையாற்றிய அவர், "பெண்கள் எல்லாவற்றிலும் சம உரிமை கேட்பது தவறு; குடும்பத்தைக் கவனித்துக் கொள்வது தான் அவர்கள் செய்ய வேண்டிய பணி; சட்டத்தில் உள்ள உரிமையைக் கோரினால் அன்பும் பாசமும் போய்விடும்" என்று பத்தாம் பசலித்தனமாக பெண்ணடிமைத்தனத்தை நியாயப்படுத்தியதோடு, பெண்கள் உயர்ந்தால் உலகம் உயரும் என்ற மாநாட்டில் காணப்பட்ட முழக்கத்தையும் நக்கல் செய்து பேசியுள்ளார். இதைத் தொடர்ந்து நாடெங்குமுள்ள மகளிர் அமைப்புகளும் சமூக - சீர்திருந்த அமைப்புகளும் பலமுனைகளில் கண்டனம் தெரிவிக்கத் தொடங்கியதும், அரண்டு போன நீதிபதி தனது கருத்தை வாபஸ் பெறுவதாக இப்போது கூறியுள்ளார். ஆணாதிக்க வெறியர்கள் கிராமப்புற நிலப் பிரபுக்களாக மட்டும் இருப்பதில்லை. இந்தியாவில் கோட்டு சூட்டு போட்ட தலைமை நீதிபதியாகவும் இருக்கிறார்கள்.

ஜப்பானின் மன்னராக அண்மையில் அகிஹிட்டோ முடிசூட்டிக் கொண்ட போது இடதுசாரி "செம்படை" அமைப்பின் கொரில்லா வீரர்கள் ஷிண்டோ புத்தமத மடாலயம் ஒன்றைத் தீயிட்டுக் கொளுத்தி, தமது எதிர்ப்பைக் காட்டியுள்ளனர். மதச்சார்பான இந்த விழாவுக்கு அரசு நிதி ஒதுக்கக் கூடாது என்றும், மன்னரை கடவுளின் அவதாரமாகச் சித்தரிக்கும் இந்த விழாவை ரத்து செய்ய வேண்டும் என்றும் கோரிய அவர்கள் முடிசூட்டு விழாவுக்குப் பின் மன்னர் வழிபாட்டுக்கு வரத் தீர்மானித்திருந்த கோயிலை இவ்வாறு தீயிட்டனர். நூறுகோடி ரூபாய்க்கு மேல் விரயமாக்கப் பட்டுள்ளதைக் கண்டித்து ஜப்பானின் எதிர்க் கட்சியினரான சோசலிஸ்டுகள் கூட இந்த விழாவைப் புறக்கணித்தனர். ஆனால் சோசலிசம் பேசும் ஏகாதிபத்திய அடிவருடிகளான இந்திய ஆட்சியாளர்கள் மானக்கேடான இந்த விழாவில் விசுவாசத்தோடு கலந்து கொண்டு வாழ்த்துக் கூறிவிட்டுத் திரும்பியுள்ளனர்.


டெல்லி பல்கலைக் கழக மாணவர்களால் நிறுவப்பட்ட மண்டல் கமிஷன் எதிர்ப்பு அரங்கம் (AMCF)என்ற அமைப்பு, இப்போது செயலிழந்து அதன் நோக்கமும் கிடப்பில் போடப்பட்டு விட்டது. காங்கிரசு மாணவர் சங்கத்தினரே இதில் ஆகப் பெரும்பான்மையாக உள்ளனர். மண்டல் எதிர்ப்பு போராட்டத்தில் தீவிரமாகப் பங்கேற்ற ஹரி ராம் சிங் என்ற மாணவர், காங்கிரசுப் பெருச்சாளி ஹெச்.கே.எல்.பகத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டவர். மண்டல் எதிர்ப்பு போராட்ட சாதனையைக் காட்டி, வரும் தேர்தலில் பீகாரில் தமக்கு சீட் கொடுக்குமாறு அலைகிறார். காங்கிரசிடமிருந்து ரூ.10 லட்சம் வரை நன்கொடை வாங்கி போராட்டம் நடத்திய இந்த அமைப்பு, இன்று மேல் சாதிக்குள்ளேயே சாதி ரீதியாகவும், பிராந்திய ரீதியாகவும் பிளவுபட்டுக் கிடக்கிறது. குறுகிய அரசியல் லாபத்துக்காக காங்கிரசின் பினாமியாகச் செயல்பட்ட மண்டல் எதிர்ப்பாளர்களின் யோக்கியதை இப்போது புரிகிறதல்லவா?

பாசிச ராஜீவ் சத்பவன (நல்லெண்ண) யாத்திரை நடத்திய போது வட இந்திய மக்கள் அவரைச் சூழ்ந்து கொண்டு சில நேரங்களில் கைகுலுக்குவதோடு நிறுத்திக் கொள்வார்களாம். ஆனால் தென்னிந்திய மக்கள் மகிழ்ச்சிப் பூரிப்பில் அவரைக் கட்டிப் பிடித்துக் கொண்டு விடுவார்களாம். இதனால் ராஜீவின் உடலில் ஆங்காங்கே தோலில் புண் ஏற்பட்டு விட்டதாம். காங்கிரசுப் பிரமுகர்களிடம் சோனியா இதுபற்றி கோபமாக முறையிட்டுள்ளாராம். பயங்கரவாதிகளின் தொல்லையில் இருந்து தப்பிக்க குண்டு துளைக்காத 'கோட்'டு அணியும் ராஜீவ், தென்னாட்டு மக்களின் தொல்லையிலிருந்து தப்பிக்க முள்ளம்பன்றி 'கோட்'டு சிந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

கிழக்கு ஐரோப்பிய மாற்றங்களில் சிக்காமல் தனியே சோசலிசத்தைக் கட்டிக் காக்கும் நாடாகச் சித்தரிக்கப்பட்ட அல்பேனியா, கடைசியில் முதலாளித்துவ புதை சேற்றுக்குள் இறங்கி விட்டது. அரசியல் பொருளாதார சீர்திருத்தங்களை அண்மையில் அறிவித்துள்ள அல்பேனிய அதிபர் ரமிஜ் அலியா, காலத்திற்கேற்ப தாமும் மாறிக் கொள்வதாக இவற்றை நியாயப்படுத்தியுள்ளார். இதன்படி அல்பேனியாவில் தனியார் துறையும், சந்தைப் பொருளாதாரமும் ஊக்குவிக்கப்படும்; அரசின் விவகாரத்திலிருந்து கம்யூனிஸ்ட் கட்சி பிரிக்கப்பட்டு, முதலாளித்துவ முறைப்படி "சட்டத்தின் ஆட்சி" வலுப்படுத்தப்படும்; மத நிறுவனங்களுக்கு விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டு, மதச் சுதந்திரம் அங்கீகரிக்கப்படும்; அல்பேனியாவின் தனிநபர் அதிகாரவர்க்க ஆட்சியை சோசலிசம் என்று பிதற்றிய போலிக் கம்யூனிஸ்டுகள் இந்த மாற்றங்களை எப்படி நியாயப்படுத்தப் போகிறார்கள்?

நடந்து முடிந்த பாகிஸ்தான் தேர்தலில் கைபர் கணவாய் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட ஹாஜி அயூப் அப்ரிதியும், ஆப்கான் எல்லையிலுள்ள பாஜோர் தொகுதியில் வெற்றி பெற்ற லால் கரீமும் போதை மருந்து கடத்தல் பேர்வழிகள் என்று பாக். போலீசாரே ஒப்புக் கொள்கின்றனர். ஆனால் தேர்தலில் வெற்றி பெற்ற இவர்கள் ஆளுங்கட்சி எம்.பி.க்களாகி விட்டதால் இந்த விவகாரம் வெளியே வராமல் அமுக்குவதில் குறியாய் உள்ளனர். இருப்பினும் போதை மருந்து பவுடர் பணம்தான் இவர்க

**ஆணாதிக்க வெறியை கக்கிய தலைமை நீதிபதி ரங்கநாத் மிஸ்ராவுக்கு எதிராக பம்பாயில் பெண்கள் ஆர்ப்பாட்டம்**






படிப்பகம்

www.padippakam.com

# சோசலிசமும் முதலாளித்துவமும் — செக்கோஸ்லாவிய அனுபவம்



அன்று அது சோசலிச பூமியாக இருந்தது. பாசிச எதிர்ப்புப் போராளி ஜுலியஸ் பூசிக் பிறந்த செக்கோஸ்லாவியா நாட்டிலுள்ளது கார்லோவிவாரி என்ற நகரம். இந்நகரைச் சுற்றி 12 தாது நீர் ஊற்றுக்கள் அமைந்துள்ளன. இத்தாது நீரில் குளித்தால் தீராத நோய்கள் தீர்ந்து விடும். உலகப் புகழ் பெற்ற இத்தாது நீர் ஊற்றுக்கள் நேற்றுவரை பாட்டாளி மக்கள் பயன்படுத்தி வந்த சோசலிச ஊற்றாக இருந்தது.

மிக அரிய தாதுக்கள் நிறைந்த இந்நீருற்றுக்கள் செக் நாட்டு மக்களுக்கு இயற்கை அளித்த கொடை. இந்நீரில் குளிப்பதும், நீரைக் குடிப்பதும் உடல் ஆரோக்கியத்துக்கு உகந்தது மட்டுமல்ல; நாட்பட்ட வயிற்றுக் கோளாறுகள், குடற்புண், மலச்சிக்கல், சிறுநீரக கோளாறுகள், தோல் வியாதிகள், சர்க்கரை வியாதி மற்றும் பெண்களின் மாதவிடாய் நோய்களையும் தீர்க்கவல்லது.

500 ஆண்டுகளுக்கு முன்பு பொஹிமியாவின் நான்காம் சார்லஸ் மன்னன் வேட்டையாடச் சென்றபோது இந்நீரூற்றின் சிறப்பை உணர்ந்து அப்பகுதியை இயற்கை வைத்திய நிலையமாக புனரமைத்தான். பின்னர் அது அரச குடும்பத்தினரும் மேட்டுக்குடி மக்களும் ஓய்வும் புத்துணர்ச்சியும் பெறுவதற்கான தலமாக மாறியது. இந்தியாவின் பரோடா மன்னர் கூட அங்கே ஒரு விடுதியை சொந்தமாக நிறுவி, அடிக்கடி சென்று தங்குவதுண்டு. ஜெர்மானிய இசை மேதை பீத்தோவானும், ரஷிய இலக்கியவாதி டால்ஸ்டாயும் இத்தாது நீர் ஊற்றில் வந்து குளிப்பதை தமது கோடைகால வாடிக்கையாகக் கொண்டிருந்தனர்.

1948-ல் பாசிச நுகத்தடியிலிருந்து செக் நாடு விடுதலையடைந்து, கம்யூனிஸ்டுகளின் தலைமையில் சோசலிசப் பாதையில் முன்னேறத் தொடங்கியது. அதுவரை மேட்டுக்குடியினர் மட்டுமே அனுபவித்து வந்த அந்த தாது நீர் ஊற்று மையம், பாட்டாளி மக்களின் புனர்வாழ்வு நிலையமாக மாறியது. நீரூற்றுக்களைச் சுற்றி விடுதிகள் நிறுவப்பட்டு, நோய்வாய்ப்பட்ட தொழிலாளி - விவசாயிகளுக்கு ஊதியத்துடன் விடுப்பு அளிக்கப்பட்டு இலவச மருத்துவ சிகிச்சையும் அளிக்கப்பட்டது.

போலிக் கம்யூனிஸ்டுகள் அதிகாரத்தைக் கைப்பற்றியதைத் தொடர்ந்து இதர கிழக்கு ஐரோப்பிய நாடுகளோடு செக் நாடும் இன்று முதலாளித்துவ 'சொர்க்க' பூமியாகி விட்டது. கார்லோவிவாரி நகர தாது நீரூற்றுகள் இப்போது அன்னிய நாட்டு முதலாளிகளின் பணப்பையில் அடங்கி விட்டது. அந்நகரில் அன்னிய முதலாளிகளின் நட்சத்திர ஓட்டல்கள் பெருகி, மேட்டுக்குடி சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்திழுக்கும் விபச்சார மையமாகி விட்டது. இன்று செக் நாட்டு பாட்டாளி மக்களால் அங்கே இலவச சிகிச்சை பெற முடியாது. வசதி படைத்த மேட்டுக் குடியினர் மட்டுமே உள்ளே நுழைய முடியும் என்பதே விதியாக உள்ளது.

ஒரு நாடு சோசலிச நாடா அல்லது முதலாளித்துவ நாடா என்பதை அம்மக்களின் வாழ்நிலை தெளிவாக்கிவிடும். தமது சொந்த நாட்டிலேயே இயற்கையாகக் கிடைக்கும் தாது நீரைப் பயன்படுத்த முடியாத செக் நாட்டு மக்களின் நிலைமையே, அந்நாட்டின் தன்மையை நிரூபித்துக் காட்டி விட்டது.

ளுக்குத் தேர்தல் வெற்றியை ஈட்டித் தந்துள்ளது என்று பத்திரிக்கைகள் நாறடிக்கின்றன. இந்திய நாடாளுமன்றத்தை கிரிமினல் - மாஃபியாக்கள் எம்.பிக்களாகி அலங்கரிக்கும் போது பாக். பாராளுமன்றத்தில் போதை மருந்து மாஃபியாக்கள் அங்கம் வகிப்பதால் அதன் 'புனிதம்' குறைந்து விடவா போகிறது?

ரஷியாவில் மீண்டும் முடியாட்சியை ஆதரித்து மதவாத, சீர்திருத்தக் குழுக்கள் ஒன்றிணைந்து அண்மையில் மாநாடு கூட்டியுள்ளன. கம்யூனிஸ்ட் கட்சி என்பது சைத்தானின் கட்சி; அது மன்னராட்சியை வீழ்த்தி விட்டது; அதைத் தடை செய்ய வேண்டும். மீண்டும் ஒரு மன்னரைத் தேர்ந்தெடுத்து முடியாட்சியை நிறுவ வேண்டும் என அவர்கள் கோரியுள்ளனர். வேடிக்கை என்னவென்றால் இவர்களில் பெரும்பாலோர் கம்யூனிசத் துரோகி கோர்ப்பசேவின் ஆதரவாளர்கள். அன்றைய ஜார் அரச குடும்பத்தினருக்கு மரண தண்டனை கொடுக்க உத்தர விட்டது தோழர் லெனின் தான் என்பதற்கு புதிய ஆதாரங்கள் கிடைத்துள்ளதாக இப்போது புளுகுமூட்டைகளை அவர்கள் அவிழ்த்து விட்டுள்ளனர். பீற்றிக் கொள்ளப்படும் கோர்பியின் சீர்திருத்தங்கள் முதலாளித்துவ மீட்சியையும் அஞ்ஞானவாத பழமை - பிற்போக்கு அடிமைத்தனத்தையும் மட்டும் உயிர்ப்பிக்கவில்லை. ஆட்டைக் கடித்து மாட்டைக் கடித்து கடைசியில் தோழர் ஸ்டாலினைத் தொடர்ந்து லெனினையும் அவதூறு செய்து இழிவுபடுத்துமளவுக்கு முன்னேறிவிட்டது.

பம்பாயில் கடந்த 5 மாதத்திற்குள் மீண்டும் பேருந்துக் கட்டணங்கள் உயர்த்தப்பட்டுள்ளன. குறைந்த பட்சக் கட்டணத்தை 75 பைசாவிலிருந்து ஒரு ரூபாயாக அநியாயமாக உயர்த்திய காங்கிரசு அரசு, எண்ணெய் விலையேற்றத்தைக் காட்டி இதை நியாயப்படுத்தவும் செய்கிறது. புரட்சி பேசும் போலிக் கம்யூனிஸ்டுகளே மே. வங்கத்தில் பேருந்துக் கட்டணத்தை உயர்த்தி வழிகாட்டும் போது, காங்கிரசு அரசு ஏன் செய்யாது?

தமிழகத்தில் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள கிறித்துவ மத நிறுவனங்களின் கட்டுப்பாட்டிலுள்ள பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு கடந்த 13 ஆண்டுகளாக உரிய ஊதியம் தரப்படவில்லை. இத்தனைக்கும் இப்பள்ளிகள் சிறுபான்மை மதத்தவர் என்ற சலுகை பெற்றுள்ளதோடு, அரசின் மான்யத்தையும் சுருட்டிக் கொள்கிறது. பாதிக்கப்பட்ட நூற்றுக்கும் மேற்பட்ட ஆரம்பப்பள்ளி, மேல்நிலைப்பள்ளி ஆசிரியர்கள் தமது குடும்பத்துடன் - கைக்குழந்தைகளுடன் அண்மையில் உண்ணாவிரதமும் தர்ணா போராட்டமும் நடத்தினர். ஆனாலும் சிறுபான்மை மத நிறுவன விவகாரம் என்று அரசு தலையிட மறுக்கிறது. 1990-ம் ஆண்டை உலக கல்வியறிவு ஆண்டாகக் கொண்டாடி வரும் அரசு, ஆசிரியர்களைப் பட்டினி போட்டுவிட்டு கல்வியின்மையை ஒழிக்கப் போகிறதாம்! வெட்கக்கேடு!



சாலை விபத்தில் விபத்துக்குள்ளானவர்களுக்கு நட்ட ஈடு தருவது பற்றி இஸ்லாமிய ஷாரியத் சட்டம் டியாத், க்விசால் எனும் இரு விதிகளில் கூறுகிறது. இதன்படி, விபத்துக்குள்ளானவர்களுக்கு கை-கால் போனால் வாகன ஓட்டியின் கை-காலை துண்டிக்க வேண்டும்; அல்லது 1,70,000 ரூபாய் அபராதமும் 10 ஆண்டு சிறைத் தண்டனையும் அனுபவிக்க வேண்டும். இஸ்லாமிய முறையில் நாட்டை இட்டுச் செல்வதாகக் கூறி பாகிஸ்தானின் அதிபர் இஷாக்கான் நவம்பர் மாத துவக்கத்தில் இச்சட்டத்தை அறிவித்தார். அற்ப கூலி பெறும் வாகன ஓட்டிகளின் வாழ்வையே பறிக்கும் இச்சட்டத்தை எதிர்த்து லாரி, பேருந்து ஓட்டுநர்கள் நாடு தழுவிய வேலை நிறுத்தப் போராட்டத்தில் இறங்கியுள்ளனர். இதனால் பாகிஸ்தானில் போக்குவரத்தும் பொருளாதாரமும் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. மத அடிப்படைக் கோட்பாடுகள் என்றைக்குமே நடைமுறைக்கு ஒத்து வராது; அவற்றை நடைமுறைப் படுத்தினால் எத்தகைய விபரீதங்கள் ஏற்படும் என்பதற்கு பாகிஸ்தான் இன்னுமொரு சான்று.



படிப்பகம்

www.padippakam.com

# போலீசு - ரௌடிகள் நடத்தும் திடீர் கலவரங்கள்!

சமூக விரோதிகளிடம் போலீசு கூடி குலாவுவதும், 'அனுசரித்து' போவதும் தினமும் நடக்கும் காட்சிகள்! அடித்த கொள்ளையை பங்கு பிரிப்பதிலும் அதிகாரம் செலுத்துவதிலும் அவர்களிடையில் பங்காளி சண்டையும் அடிக்கடி நடக்கும்! இந்த சட்டபூர்வ, சட்டவிரோத ரௌடிகளுக்கிடையில் நடக்கும் ஐக்கியமும் போட்டியும் உழைக்கும் மக்களின் குரல்வளையைப் நெறிப்பதில்தான் முடியும்! ஒவ்வொரு கலவரங்களிலும் இதை நாம் அனுபவிக்கிறோம்.

மதுரை, உத்தமபாளையம் தாலுக்காவில் சமீபத்தில் இவ்வாறு பல கலவரங்கள் நடந்துவிட்டன. இங்கு, கிராமமும் இல்லாமல் நகரமும் இல்லாமல் இருக்கும் ஒரு சந்தை நகரம் கூடலூர். 31.10.90 அன்று தவமணி என்ற தேவர் பேரவையின் தலைவர் சாராய கடை ஏலம் எடுக்கச் சென்றபோது, உத்தமபாளையத்தில் போலீசால் கைது செய்யப்பட்டார். தங்களுக்குள் இருந்த தகராறை இப்படி தீர்த்துக் கொண்ட போலீசு, அவரை கிரிமினல் குற்றவாளி என்று அப்போதுதான் கண்டுகொண்டது போல் பசப்பியது.

கைதை எதிர்த்து தேவர் தவமணியின் ஆதரவு ஆட்கள் 1.11.90 அன்று கூடலூரில் பஸ் மறியல் செய்ய கூடினர். அவர்களை அப்புறப்படுத்துகிறோம் என்று போலீசு, பகுதி மக்களை கண்மூடித்தனமாக தாக்கியது. பல ரவுண்டுகள் துப்பாக்கி சூடு நடத்தி கூடலூரையே பொட்டல் வெளியாக்கியது.

5-வது படிக்கும் சிறுவன், செல்வராசு என்ற ரைஸ்மில் தொழிலாளி, ஹக்கீம், அய்யர் என்ற இரு நோயாளிகள் — இப்படி பலபேர் குண்டு காயங்களுடன், வீடுகளில் அடைக்கலம் புகுந்தனர். பலர் போலீசின் தொல்லைகளுக்கு பயந்து மருத்துவமனைக்குகூட செல்லாமல் வீட்டிலேயே நாட்டு வைத்தியம் பார்த்துக் கொண்டனர். ஆனந்தன் என்ற இளைஞர், போலீசின் துப்பாக்கிக் குண்டு கையில் பாய்ந்து, மருத்துவமனை செல்வதற்கு பயந்து, வீட்டிலேயே 5 நாட்களில் இறந்து போனார். போலீசு அக்கிரமத்தால், கூடலூரே மரண பயத்தில் உறைந்து போனது!

போலீசின் அராஜகத்தை முறியடிக்க மக்கள் கொதித்தெழுந்தபோது, சர்வக் கட்சியினர் அமைதி பேச்சுவார்த்தை என்று தண்ணீர் தெளித்தது போல் எதிர்ப்பை அடக்கினர். போலீசு மேலும் திமிரெடுத்து மக்களை கடித்து குதறியது! ஆக, 'கைது செய்யப்பட்ட தவமணி, கிரிமினல் குற்றவாளி என்றால் கைது செய்து சட்டரீதியாக நடவடிக்கை எடு! ஒட்டுமொத்தமாக ஊரையே சுடுகாடாக்காதே!' என்று ஒருமித்த குரலோடு எச்சரிக்கை விடுக்க ஜனநாயக சக்திகளுக்கு பலம் இல்லையென்பது வருத்தப்பட வேண்டிய உண்மை!

மக்கள் மேலும் மேலும் ஒதுங்கிப் போகும் வரை, குட்டக் குட்ட குனியும்வரை, இச் சமூக விரோதிகளின் கொட்டம் பெருகிக் கொண்டேயிருக்கும் என்பதற்கு இன்னும் ஒரு உதாரணம்... தேவாரம் போலீசு நிலையத்தின் இன்ஸ்பெக்டர் நடராஜ்! இவருக்கு லஞ்சம் வாங்கிக் கொடுக்க, கொடுக்காதவர்களை மிரட்ட ஊருக்கு ஒரு அடியாள் கும்பல் இருக்கிறது. தேவாரம் மீனாட்சிபுரத்தில் மக்களின் விழிப்புணர்வு - ஒற்றுமையால் நடராஜனால் எந்த அடியாள் கும்பலையும் கட்டமுடியவில்லை. கடைசியில், சரீப் என்ற பெயருடைய 'செட் அப்' செல்லையா என்ற கிரிமினல் ஆள்காட்டியானான். உள்ளூரில் யார், யார் என்ன செய்கிறார்கள் என்பதை மிகைப்படுத்தி சொல்வது, சிலரை தவறுகள் செய்யத் தூண்டி பிறகு, காட்டிக் கொடுப்பது அவனது தொழில். போலீசுக்கு லஞ்சம் வாங்கிக் கொடுத்து கமிஷன் வாங்கி கொள்வது இவனது பிரதான வேலை! ஊரறிந்த இந்த ரகசியத்தை விவசாயிகள விடுதலை முன்னணி தொடர்ச்சியாக அம்பலப்படுத்தியது.

உடனே, அவன் சாதி பெயரில் தனக்கு ஆட்களை திரட்டிக் கொண்டு, இன்ஸ்பெக்டர் நடராஜனை துணைக்கு வைத்துக் கொண்டு உதார் விடுவான்! அப்பாவிகளை போலீசிடம் சிக்கவைத்து, தனது அதிகாரத்தை நிலைநாட்டுவான்! வி.வி.மு-வுக்கு எதிராக பொய் புகார் தயாரித்து மக்களிடம் படித்து காட்டாமலேயே அவர்கள் கையெழுத்தை வாங்கி எஸ்.பி-க்கு புகார் அனுப்பினான். போலீசு கொடுத்த தைரியத்தில் முருகேசன் என்ற வி.வி.மு ஆதரவாளரை தனது மகன்களை வைத்து மூர்க்கமாக தாக்கினான். அன்றிரவே, வி.வி.மு தோழர்கள் இதைப்பற்றி தேவாரம் போலீசு நிலையத்தில் புகார் செய்துவிட்டு, தாக்கப்பட்டவரை உ.பாளையம் அரசு மருத்துவமனையில் சேர்த்தனர்.

ஆனால், மறுநாளே இன்ஸ்பெக்டர் நடராஜனுடன், செல்லையா ஜீப்பில் உல்லாசமாக நகர்வலம் வந்தான். சொரணையை உதிர்த்துவிட்ட இன்ஸ்பெக்டர் நடராஜன், செல்லையா சொல்லும் நபர்களை எல்லாம் அடித்து கைது செய்யுமாறு போலீசுக்கு உத்திரவு போட்டான். ''7 துப்பாக்கி இருக்கிறது. 7,000 பேரை சமாளிக்கலாம்!'' என்ற திமிரை வழியவிட்டான்! இந்த சமூக விரோத கும்பலுக்கு எச்சரிக்கை விட்டு வி.வி.மு வைத்த தட்டியையும் சுவரொட்டிகளையும் இரவோடு இரவாக தனது எடுபிடிகள் மூலம் கிழித்தான்! காக்கி சட்டை கும்பலின் சலசலப்புக்கு எல்லாம் அஞ்சாமல், வி.வி.மு. தனது எதிர்ப்பை மக்களின் ஆதரவோடு தொடர்கிறது.

விவசாயிகள் விடுதலை முன்னணி,
உத்தமபாளையம் வட்டம்.



## தஞ்சை ம.க.இ.க.வின் புதுமைப் போராட்டம்!

*தஞ்சை நகர மையத்தில் உள்ள மக்கள் நலனுக்குக் கேடான மாட்டிறைச்சிக் கூடத்தைப் புற நகருக்கு அப்புறப் படுத்தக் கோரி ம.க.இ.க. தலைமையில் பகுதி மக்கள் போராடி வருவது பற்றி ஏற்கனவே எழுதியிருந்தோம். நியாயமான இக்கோரிக்கையை அதிகாரிகளும் ஓட்டுக்கட்சிகளும் கண்டு கொள்ளாமல் போகவே, நகர மன்றத் தலைவர், ஆணையாளர் பங்களாக்கள் முன்பு ''மாடு வெட்டும் போராட்டத்தை'' அறிவித்துப் பிரச்சாரம் செய்தது ம.க.இ.க. நகர மக்களிடையே இது மிகுந்த வரவேற்பைப் பெற்றது.*

*நவம்பர் 14ந்தேதி காலை, கீழவாசல் காமராசர் சிலையருகே போலீசு பட்டாளம் குவிந்து விட்டது. திரளான மக்களும் கூடினர். வெடிகளும் பறையும் முழங்க, அலங்கரிக்கப்பட்ட எருமை மாடு கம்பீரமாக நிற்க, தோழர் அருள் போராட்டத்திற்கு தலைமை ஏற்றார். ம.க.இ.க. மாநிலப் பொருளாளர் காளியப்பன் வாழ்த்தி ஊர்வலத்தைத் துவக்கி வைத்தார்.*

*நகர மன்றத் தலைவர் பங்களாவை நோக்கிப் புறப்பட்ட ஊர்வலத்தைப் போலீசு தடுத்து நிறுத்தி தோழர்கள் அருள், ராவணன் மற்றும் பகுதி இளைஞர்களைக் கைது செய்தது. எருமை மாட்டையும் கைது செய்தது! தோழர்களைப் போலீசு வண்டியிலேற்றும் போது, சாலையின் இருபக்கமும் திரண்டிருந்த மக்கள் பாராட்டி அனுப்பினர்.*

*பீதியடைந்து போன நகராட்சி கோரிக்கையை ஏற்று மாட்டிறைச்சிக் கூடத்தைப் புறநகரப் பகுதிக்கு மாற்றும் 15 லட்சம் ரூபாய் திட்டம் வகுத்துள்ளதாக அறிவித்தது. ஆனால் சூடு சுரணையற்ற, திமிர் பிடித்த, மக்கள் நலனில் அக்கறையற்ற இந்த ஆட்சியாளர்களின் வார்த்தைகளை நம்பி ஏமாந்து விட மாட்டோம் என்று அடுத்தடுத்த போராட்டத்திற்கு பகுதி மக்கள் தயாராகிறார்கள்.*



படிப்பகம்

www.padippakam.com

### மதுரை சட்டக் கல்லூரி

# மாணவர் போராட்டம் போலீசு தாக்குதல்

மதுரை சட்டக் கல்லூரி மாணவர்கள் 14.11.90 முதல் தங்களுடைய தேர்வு முடிவுகளை மதிப்பீடு செய்யக் கோரியும், மூன்றாம் ஆண்டு தேறியவுடன் பட்டம் (B.A Law) கொடுக்க கோரியும் போராடி வருகின்றனர். மாணவர்களின் பல்கலைக்கழக நிர்வாக முறைகேடுகளுக்கு எதிரான போராட்டத்தைக் கூட அதிகார வர்க்கம், போலீசால் சகித்துக் கொள்ள முடியவில்லை. மதுரை கலெக்டரிடம் மனுக் கொடுக்க ஊர்வலமாக சென்ற மாணவர்களின் மண்டையை பிளந்தது, போலீசு உதவி கமிஷனர் சிவனாண்டி தலைமையில் இந்த குரூரம் நடந்தது.

சுமார் 20 மாணவர்கள் மருத்துவமனையிலும், 40 மாணவர்கள் சிறையிலும் அடைக்கப்பட்டனர். அதற்கெதிரான சக மாணவியர்களின் போராட்டத்தையும் ஒடுக்கியது. அவர்களையும் கைது செய்து மாலையில் விடுவித்தது.

உள்ளிருப்பு வேலை நிறுத்தம், வாயில் ஆர்ப்பாட்டம், ரெயில் மறியல் போராட்டம் என்று மாணவர்கள் தங்கள் போராட்ட ஒற்றுமையை உறுதியாக பற்றி நின்றனர். நரியாக வளைய வந்து மாணவர்கள் மத்தியில் போலீசு ஆள்காட்டிகளை தேடியது. போலிக் கம்யூனிஸ்ட்டுகளின் எஸ்.எப்.ஐ மாணவர் சங்கத்தின் மாணவர்கள் சிலர் போலீசிடம் உறவாடியதை சக மாணவர்கள் அம்பலப்படுத்தினர். பொதுமக்கள் போர்வையில் ஒளிந்து கொண்டு போலீசு செய்த மோசடியையும் மாணவர்கள் முறியடித்தனர். 22.11.90 அன்று நள்ளிரவு 2 மணிக்கு மதுரை நகர சுவர்களில் மாணவர்களுக்கு எதிரான போஸ்டர்களை போலீசு ஒட்டியது. அதில், பொதுநல ஊழியன், மாநகர் மக்கள் நல ஊழியன் என்று பொய்யாக அச்சிட்டிருந்தது. போஸ்டர் ஒட்டிய போலீசுப் புலிகளை மாணவர்கள் திரண்டு விரட்டியடித்தனர். உடனே, போலீசை மாணவர்கள் கடத்தியதாக புரளி கிளப்பி, சட்டக் கல்லூரிக்குள்ளேயே போலீசு புகுந்தது. உள்ளிருப்பு போராட்ட மாணவர்களையும் கைது செய்தது. சட்டக் கல்லூரி வழியே பாதசாரிகளை கூட விடாமல் பயங்கர வாதிகளை சுற்றி வளைத்திருப்பது போல் பீதி கிளப்பியது.

ஓட்டுக் கட்சிகள், திடீர் அக்கறையுடன் மாணவர்களைச் சுற்றி ஈ மாதிரி மொய்க்கின்றன. தாங்கள் குளிர்காய அப்போராட்டத்தை பயன்படுத்த பார்க்கின்றனர்.

போராட்டத்தில் உறுதியாக நிற்கும் மாணவர்களில் 64 மாணவர்கள் சிறையில் வாடுகின்றனர். விடுதிகளில் தங்கியிருந்த மாணவர்களை நிர்வாகம் போலீசை வைத்து நிர்பந்தமாக வெளியேற்றி விட்டது. உறுதியுடன் போராடும் மாணவர்கள், தங்களுக்கிடையிலான ஒற்றுமையை மற்ற பிரிவு மாணவர்கள், மக்கள் மத்தியில் விரிவுபடுத்துவதில் தான் இறுதி வெற்றி தங்கியுள்ளது.

மக்கள் கலை இலக்கிய கழகம்
மதுரை.

போராடும் மாணவர்களின் மண்டையைப் பிளந்த போலீசு கமிஷனர் சிவனாண்டிக்கு எதிராக சுவரொட்டி எழுதும் மாணவ மாணவியர்



# சாராயக்கடையை எதிர்த்தால் - 'இன'த் துரோகி!

மலிவு விலை மதுவைக் குடிக்காதவர்கள் எல்லாம் மறத்தமிழர்கள் அல்ல என்று கருணாநிதி அரசு புதுச் சட்டம் பிறப்பித்தாலும் ஆச்சரியப் படுவதிற்கில்லை! தி.மு.க உடன்பிறப்புகள் இப்போது இந்த கொள்கையைத் தான் அறிவிக்காமல் அமுல்படுத்தி வருகிறார்கள்.

தஞ்சை மாவட்டம் திருவையாறு தாலுகாவில் உள்ளது கருப்பூர் கிராமம். இங்கு, முத்தமிழ் நற்பணி மன்றம் என்ற ஒரு அமைப்பு பல சீர்த்திருத்த நடவடிக்கைகளுக்கு முன்னுதாரணமாக செயல்பட்டு வருகிறது. குடும்ப, நிலத் தகராறுகள், கள்ளச் சாராய ஒழிப்பு போன்ற எந்த பிரச்சனையானாலும் எல்லா சாதியினரையும் இணைத்து உள்ளூர் பஞ்சாயத்து மூலமாக நியாயமாக தீர்த்து வைக்க உதவி புரிகிறது.

இம்மன்றத்தின் மக்கள் செல்வாக்கு, உள்ளூர் ஆதிக்க சக்திகளுக்கும், தி.மு.க. கழக உடன் பிறப்புக்களுக்கும் முள்ளாக குத்தியது. பலமுறை மன்றத்தின் நடவடிக்கைகளில் குறுக்கிட்டு குடுபட்டு கொண்டனர். நேரம் பார்த்துக் கொண்டிருந்த அக்கும்பலுக்கு கருணாநிதியின் மலிவு விலை மது ஆயுதமாகியது.

மலிவு விலை மது திட்டம் அறிவிக்கப்பட்ட உடனே, இம்மன்றத்தினர், ஊர் மிக்களை குறிப்பாக குடும்ப பெண்களை திரட்டினர். 'எங்கள் ஊருக்கு சாராய கடை வேண்டாம்' என்று அதிகாரிகள், எம்.பி., எம்.எல். ஏக்களிடம் மனுக் கொடுத்தனர். பலமுறை சென்று அதை வலியுறுத்தினர். காங்கிரசு எம்.பி.சிங்காரவடிவேலு, 'கலெக்டர்' விவேக் ஹரி நாராயணன் ஆகியோர் மக்களுக்கு 'சரி' என்று தலையாட்டிவிட்டு பிறகு சாராய கும்பலுக்கு வாலாட்டினார்கள்.

எந்த கட்சி ஆட்சிக்கு வந்தாலும் அந்த கட்சி துண்டு போட்டுக் கொள்ளும் செந்தலை சேது நாட்டார், என்பவர் தான், இப்போது தனது பினாமி மூலம் எதிர்ப்புக்கு மத்தியில் கருப்பூர் சாராய கடையை ஏலம் எடுத்துள்ளார். அதே ஊரைச் சேர்ந்த தி.மு.க. உடன் பிறப்புகள் என்று சொல்லிக் கொள்ளும் கணேசன், அப்பா ராசு நாட்டார் போன்ற கும்பல்கள் கைக்கூலிகளாக செயல்படுகின்றனர். இதற்கு பிரதிபலனாக, கருப்பூர் கூட்டுறவு சங்க தலைவர் தேர்தலில், செந்தலை சேது நாட்டார் உதவியுடன் தங்கள் ஆளை நியமித்துக் கொண்டனர்.

வெட்கக் கேடு என்னவென்றால், மதுவின் தீமைகளை எதிர்த்து கருணாநிதி அரசு பிரச்சாரம் செய்யும் போதே கழக உடன்பிறப்புக்கள் மக்களின் வாயை திறந்து மதுவை ஊற்றுகிறார்கள்! முத்தமிழ் நற்பணி மன்றத்தினர் இதை உறுதியாக எதிர்த்து நின்று போராடி வருகின்றனர். மன்றத் தலைவர் மா.வடியான் தலைமையில் நாடகம் போன்ற எளிமையான வடிவங்களில் மதுவின் தீமைகளை விடாது பிரச்சாரம் செய்து, அக்கடையின் விற்பனையை தள்ளாட வைத்து விட்டனர். சமூக பொறுப்புள்ள இவ்விளைஞர்கள் இன்னும் முடிந்தவரை தங்கள் சுற்று வட்டார கிராம மக்களையும் போராட்டத்தில் ஒன்றிணைந்தார்களானால் குற்றவாளிகள் மிக விரைவில் தோலுரிவது திண்ணம்.

தகவல்:
விவசாயிகள் விடுதலை முன்னணி,
திருவையாறு வட்டாரம்.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : எஸ்.மதியழகன், 21 பாலாஜிசிங் தெரு, சைதாப்பேட்டை, சென்னை - 600 015.
அச்சிடுபவர் : நீட் பிரிண்டர்ஸ், 2 ஔலியா சாகிப் தெரு, எல்லிஸ் சாலை, சென்னை - 600 002.

www.padippakam.com

"ஐயோ... நெஞ்சம் பதறுகிறதே...! தமிழினம் இப்படி கள்ளச் சாராயம் குடித்து கொள்ளை நோய் கண்டவர்கள் போல் சாய்கிறதே...!'' என்று 5 கோடி தமிழர்களுக்கு 'இன'க்காவலரான கருணாநிதி சினிமா பாணியில் மூக்கைச் சிந்தினார். 'சரி... இனி கருணாநிதி கள்ளச் சாராய வியாபாரிகளை எல்லாம் கைது செய்து அவர்களை நோட்டுக்கு பதில் கம்பி எண்ண வைத்து விடுவார்' என்று மகிழ்ச்சியடைந்தனர் தாய்க்குலத்தினர்!

ஆனால், கருணாநிதியின் ஒப்பாரி காரிய ஒப்பாரி என்று விரைவில் தெரிந்து போனது! 'பந்தலிலே பாவக்கா, தொங்குதடி ராமக்கா!' என்று ஒப்பாரி வைக்க வந்தவர்கள் பாவக்காய்க்கு குறி வைத்ததுபோல், கருணாநிதி 'கள்ளச்சாராயத்துக்குப் பதில் இனி அரசே சுத்தமாக மலிவு விலை சாராயத்தை கொடுக்கும்' என்று ஒப்பாரியை மாற்றிப் பாடினார். தாய்க்குலம் உஷாரானது!

அவர்களிடம் பசப்புவதற்கு மது ஒழிப்பு பிரச்சாரம்; மதுவின் தீமைகளை விளக்கும் இலவச 'தியாகு' சினிமா என்று ஏமாற்றினார். அரசு மதுக் கடைகளை மூலைக்கு மூலை திறந்து கொண்டே இப்படி மது எதிர்ப்பு 'தியாகு' சினிமா வெளியிட்டு விழாவில் 'போஸ்' கொடுத்தார் கருணாநிதி!

இதோ.... மலிவு விலை மதுக்கடைகளுக்கு எதிராக உழைப்பாளி குடும்பப் பெண்கள் நடத்தும் ஆர்ப்பாட்டம்!

சென்னை - திருவல்லிக்கேணியில் நடந்த இப் போராட்டத்திற்கு 'சர்வோதய மண்டல்', காங்கிரசு உட்பட 24 அமைப்புகள் தலைமை தாங்கின. இதில் 80 வயதுக்கு மேற்பட்ட 'சுதந்திர' போராட்ட வீரர்கள் கூட கலந்து கொண்டனர். 'எங்களை பிச்சைக் காரர்களாக்கும் மதுக்கடைகளை மூடு' என்று காய்ந்த தலையோடு உழைப்பாளி பெண்கள் குழந்தைகளை இடுப்பில் வைத்துக் கொண்டு முழக்கமிட்டார்கள். அங்கு நடந்த கூட்டத்தில் தங்கள் குடும்பம் குடியால் சீரழிந்த சோகக்கதைகளை விம்மலுக்கு நடுவே கூறினார்கள்.




குடி கெடுத்த கருணாநிதி அரசு, அவர்கள் பொது அமைதிக்கு பங்கம் விளைவித்ததாக, வியாபாரம் செய்வதை தடைசெய்ததாக வழக்கு பதிவு செய்தது. கைது செய்து சிறையில் அடைத்தது. 'ஆட்சியைக் கவிழ்க்க காங்கிரசு சதி' என்று போலீசு பட்டாளத்தை அனுப்பி வெட்கமில்லாமல் சாராயக்கடைக்கு பாதுகாப்பு கொடுத்தது.

மது ஒழிப்பு, மதுவின் தீமைகளை விளக்கி ஏமாற்று பிரச்சாரம் ஒருபுறம்! சாராய சீரழிவுகளைபுரிந்து கொண்டு அதற்கெதிராக போராடும் உழைப்பாளி பெண்களை போலீசை வைத்து தாக்குவது மறுபுறம்! குடிகெடுக்கும் இந்த கருணாநிதி அரசை குழி தோண்டி புதைப்பது எப்போது?

## இதுதான் இன்றைய இந்தியா

மது எதிர்ப்பு திரைப்பட வெளியீட்டு விழாவில் கருணாநிதி.



படிப்பகம்